24th
JUNE
2026

www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 112 | பக்கங்கள் - 21 | editor.uthayam@gmail.com

## அரச பாடசாலைகளில் முதலாம் தரத்தில் மாணவர் சேர்ப்பு

**புதிய சுற்றுநிருபம் வெளியிட அமைச்சரவை அனுமதி!**

அரச பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான புதிய சுற்றுநிருபத்தை வெளியிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமர் இதற்கான யோசனையை

02ம் பக்கம்பார்க்க...

## சூடு பிடிக்கும் பேஷா விவகாரம்:
# கடந்த கால அரசியல்வாதிகளின் பட்டியல்களை வெளியிடுவேன்



### பிரதியமைச்சர் முனீர் முலப்பர் அதிரடி!

கடந்த காலங்களில் அரசியல்வாதிகள் மற்றும் அமைச்சர்கள் ஹஜ் பேசா விசாக்களை எவ்வாறு பயன்படுத்தினார்கள் என்பது குறித்த முழுமையான விபரங்கள் தற்போதைய அரசாங்கத்திடம் உள்ளதாக சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் முனீர் முலாபர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான முழுமையான பட்டியல் தம்மிடம் தயாராக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது குறித்து பிரதி அமைச்சர் முனீர் முலாபர் மேலும் கருத்து தெரிவிக்கையில்

“கடந்த காலங்களில் அரசியல்வாதிகள், அமைச்சர்கள், அவர்களது குடும்ப

02ம் பக்கம்பார்க்க...

## மூத்த ஊடகவியலாளர் என்.எம். அமீனுக்கு கனடாவில் பாராட்டு விழா



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கையின் மூத்த ஊடகவியலாளரும் சமூக ஆர்வலருமான என். எம். அமீன் அவர்களைக் கௌரவிக்கும் வகையிலான விசேட சந்திப்பும் பாராட்டு விழாவும் எதிர்வரும் 26 ஆம்

03ம் பக்கம்பார்க்க...

## F-16 விமானங்கள் அணிவகுக்க பாக்.வந்திறங்கிய ஈரான் ஜனாதிபதி

இஸ்லாமாபாத் வந்தடைவதற்கு முன்னதாக, ஈரான் ஜனாதிபதியை ஏற்றிச் சென்ற விமானம் பாகிஸ்தானின் வான்வெளியை

02ம் பக்கம்பார்க்க...

## அரச ஊழியர்களின் சம்பள, ஓய்வூதிய சிக்கல்கள் தீர்க்க புதிய ஆணைக்குழு



**ஜனாதிபதியினால் வர்த்தமானி வெளியீடு**

அரசு ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, ஜனாதிபதியினால் 15 உறுப்பினர்களைக் கொண்ட சம்பளம் மற்றும் ஓய்வூதிய ஆணைக்குழுவொன்று தெல்கே அசோக பீரிஸின் தலைமையில் நியமிக்கப்பட்டு

03ம் பக்கம்பார்க்க...

## தேசிய மீலாத் விழா பிரதான நிகழ்வுக்கு சகல முஸ்லிம் எம்.பீ.க்களுக்கும் அழைப்பு

**உதுமாலெவ்வை எம்.பீயின் கேள்விக்கு சமய விவகார பிரதியமைச்சர் பதில்**



(கே.ஏ.ஹமீட்)

தேசிய மீலாத் விழா இந்த ஆண்டு நீர்கொழும்பில் நடாத்தப்படு மென்றும் பிரதான நிகழ்வுகளுக்கு சகல முஸ்லிம் பாராளுமன்ற

03ம் பக்கம்பார்க்க...

## காஸாவில் சிறுவர்கள் படுகொலை மனித நேயத்துக்கு எதிரான குற்றங்கள்

**ஐ.நா.ஆணைக்குழுவின் அதிர்ச்சியூட்டும் அறிக்கை**

காசாவில் பாலஸ்தீனச் சிறுவர்களை இஸ்ரேலியப் படைகள் திட்டமிட்டு இலக்கு வைத்துக் கொல்வது, அங்கு தொடரும் இனப்படுகொலையின் ஒரு பகுதியாகும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணை ஆணைக்குழு அதிர்ச்சியூட்டும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

காசா மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட

03ம் பக்கம்பார்க்க...

## தேர்தல் சட்டங்களின் மீளாய்வு தொடர்பில் முஸ்லிம் புத்திஜீவிகள் கருத்துப் பரிமாற்றம்

பத்தாவது பாராளுமன்றத்திற்கான “தேர்தல்கள் தொடர்பான சட்டங்களை (மாகாண சபை தேர்தல்களுடன் தொடர்பான சட்டங்கள் நீங்கலாக) மீளாய்வு செய்து, பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கும், அது தொடர்பிலான முன்மொழிவுகள் மற்றும் விதப்புரைகளை சமர்ப்பிப்பதற்காக,

02ம் பக்கம்பார்க்க...

## எமது பணத்துக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை நாங்களே தீர்மானிப்போம்

**அமெரிக்க துணை ஜனாதிபதி கருத்துக்கு ஈரான் பதிலடி!**

சுவிஸில் இடம்பெற்ற சமாதான பேச்சு நிறைவின் பின் விடுவிக்கப்படவுள்ள 6 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியிலிருந்து அமெரிக்க விவசாயப் பொருட்களை வாங்க

03ம் பக்கம்பார்க்க...

## ஒப்பந்தத்தை மீறினால் வருந்தத்தக்க பதிலடி

**ஈரான் அமைச்சர் எச்சரிக்கை**

அமெரிக்காவுடனான புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வாஷிங்டன் மீறினால், அதற்கு “கடுமையான மற்றும்

03ம் பக்கம்பார்க்க...

## ஐ.ம.சக்தியின் பிரேரணை நிராகரிப்பு சபாநாயகர் மீது சஜித் கடும் கண்டனம்



ஐக்கிய மக்கள் சக்தி நீதியை நிலைநாட்டும் நடைமுறை தொடர்பில் பிரேரணையொன்றை பாராளுமன்றத்திற்கு கொண்டு வந்தது.

ஆனால், சபாநாயகர் பாராளுமன்றத்தின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, தன்னிச்சையாகச்

02ம் பக்கம்பார்க்க...

## ஈஸ்டர் தாக்குதல்களின் பின்னணியில் அமெரிக்கா

**சமுதிதவுடனான நேர்காணலில் முஹம்மத் பஸால் பரபரப்புத் தகவல்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் இரண்டு ஆண்டுகள் விளக்கமறியல் கைதியாக இருந்த முஹம்மத் பஸால் பரபரப்புத் தகவல்களை

03ம் பக்கம்பார்க்க...

## இஸ்லாத்தின் மீது அவதூறு கருத்துக்கள் ஞானசார தேரரின் சிறைத் தண்டனை உறுதி

**கொழும்பு மேல் நீதிமன்றம் விஷேட தீர்ப்பு**

இஸ்லாத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டு, இன இடையிலான நல்லிணக்கத்தைச் சீர்குலைக்க செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ்,

03ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## சூடு பிடிக்கும்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

உறுப்பினர்கள், உறவினர்கள் மற்றும் அவர்களது மனைவியர் இந்த விசாக்களை எவ்வாறு பயன்படுத்தினார்கள் என்பதும், தற்போதைய அரசாங்கமாகிய நாம் இதனை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதும் எங்களிடம் மிகத் தெளிவாக உள்ளது. இந்த விபரங்கள் அடங்கிய பட்டியலை என்னால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் முடியும்.

சில சந்தர்ப்பங்களில், அமைச்சர்களின் நண்பர்கள் கூட இந்த விசாக்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

எனினும், நாம் தற்பொழுது மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் காரியங்களை ஆற்றி வருகின்றோம்.

எனவே, எங்களுக்கு இதில் எந்தவொரு பிரச்சினையும் இல்லை."என சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

## ஐ.ம.சக்தியின்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

செயற்பட்டு, இப்பிரேரணை மீதான விவாதத்தை நிராகரித்தார். இதனை நான் வன்மையாக கண்டிக்கிறேன். என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (23) உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில்,

நமது நாட்டின் அரசியலமைப்பின் 107 மற்றும் 108 ஆவது உறுப்புரைகளின் பிரகாரம், உயர் நீதிமன்றங்களின் நீதியரசர்களை நியமிப்பதற்கான பதவிக்காலம் மற்றும் செயல்முறைகள் தொடர்பான விதிகள் மற்றும் நிபந்தனைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் 63 வயதிலும், உயர் நீதிமன்ற நீதிபதிகள் 65 வயதிலும் ஓய்வு பெற வேண்டும் என்று இருக்கும் நிலையில், அரசாங்கம் எந்தவொரு விஞ்ஞான பூர்வமான முறையுமின்றி இந்த ஓய்வு பெறும் வயதை நீடிக்க முயற்சிப்பது குறித்து தற்சமயம் சமூகத்தில் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், கொழும்பு மேல் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் பொதுநலவாய சட்டத்தரணிகள் சங்கம் என்பன நீதித்துறையின் சுதந்திரத்திற்கு அரசாங்கம் ஏற்படுத்தவிருக்கும் இந்த மரண அடிக்கு தங்களது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

அரசியலமைப்பைத் திருத்தும்போது, தனிநபர் ஒருவரின் அல்லது ஒரு குழுவின் தேவைக்காக அதனைச் செய்வது மிகவும் ஆபத்தான, ஜனநாயக விரோத செயலாகும். பொதுநலவாய சட்டத்தரணிகள் சங்கத்தின் கருத்துப்படி, நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை மாற்றுவதை மாத்திரம் நோக்கமாகக் கொண்டு, தற்காலிக ஏற்பாடுகள் சட்டத்தின் மூலம் அரசியலமைப்பைத் திருத்துவதை நாங்கள் முற்றாக எதிர்க்கிறோம்.

அரசியலமைப்பில் மாற்றம் நிகழ்வது என்பது அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கியதாக அமைந்து காணப்பட வேண்டும். ஆனால் இன்று அரசாங்கம் நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை அதிகரித்து, நீதித்துறையின் மீதான நம்பிக்கையை சீர்குலைக்கவும், அதன் சுதந்திரத்திற்கு மரண அடி கொடுக்கவும் முயற்சிக்கிறது. அரசாங்கத்தின் இந்த இழிவான முயற்சி அருவருக்கத்தக்கது. அனைத்து செயல்முறைகளும் சட்டத்தின் ஆட்சிக்கு இணங்கவும், நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் வகையிலும் அமைய வேண்டும்.

இது கனம் நீதிபதிகளுக்கு விடுக்கப்படும் கடுமையான அழுத்தமாக காணப்படுகின்றன.

தற்போது மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் 4 நீதிபதி பதவிகளும், உயர் நீதிமன்றத்தில் 4 நீதிபதி பதவிகளும் வெற்றிடங்களாக காணப்படுகின்றன. இந்த நியமனங்களைச் செய்வதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருந்தபோதிலும், கடந்த 6 மாதங்களாக அவர் அதனைச் செய்யவில்லை. இந்த வெற்றிடங்களை நிரப்பாமல் இருப்பது நீதிபதிகளுக்கு வழங்கப்படும் கடுமையான அழுத்தமாகவே காணப்படுகின்றன.

அதேபோல் இதுவொரு "மன ரீதியான இலஞ்சம்" (Mental Bribery) தானா என்ற சந்தேகமும் எழுகிறது. நீதித்துறையின் சுதந்திரத்திற்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து சட்டத்தரணிகள் சங்கம் கூட ஜனாதிபதிக்கு விளக்கமளித்துள்ளது. ஏனைய நீதிமன்றங்களின் வெற்றிடங்களை நிரப்பும்போது ஸநஜெைசவைல (சிரேஷ்டதன்மை) முறைகளை ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் புறக்கணித்து வருகின்றது. நிறைவேற்றுத்துறையின் தலைவரான ஜனாதிபதியின் இந்த தன்னிச்சையான போக்கு சட்டத்தின் ஆட்சிக்கும், நீதித்துறையின் சுதந்திரத்திற்கும் பலத்த அடியாகும்.

நீதித்துறையின் சுதந்திரம் குறித்துப் பேசிய அரசாங்கமே இன்று அதன் சுதந்திரத்தை அழித்து வருகின்றது.

இது நீதித்துறையின் தொடர்ச்சிக்கும் ஸ்திரத்தன்மைக்கும், மக்களின் இறையாண்மைக்கும், சட்டத்தின் ஆட்சிக்கும் விடுக்கப்படும் மரண அடியாகும். தற்போதைய ஜனாதிபதி எதிர்க்கட்சியில் இருந்த சமயம் ஜனநாயகம் மற்றும் நீதித்துறையின் சுதந்திரம் தொடர்பில் பேசினார். ஆனால் இன்று இந்த நியமனங்களைச் செய்யாமலும், ஓய்வு பெறும் வயதை அதிகரித்தும் நீதித்துறைக்கு நேரடி அழுத்தங்களை பிரயோகிப்பது ஜனநாயகத்திற்கு எதிரான செயலாகும்.

அரசியலமைப்பின் 4(ஈ) உறுப்புரையின்படி, மக்கள் இறையாண்மையை நிறைவேற்றுவதில் நீதித்துறைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மக்களின் அபிலாஷைகளின் மூலமே செயல்படுகின்றன. இந்த பாராளுமன்றத்தின் மூலம் அந்த மக்கள் அபிலாஷைகளை நிறைவேற்ற நீதித்துறைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது நாட்டின் உன்னதமான சட்டம் என்பதால் அரசாங்கம் இனைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜனநாயகம் இல்லாத தனிக்கட்சி ஆட்சியே இன்று நாட்டில் காணப்படுகின்றது.

ஜனநாயகத்தை உச்சக்கட்டத்திற்கு கொண்டு செல்வதாகக் கூறிய அரசாங்கத்தின் அழகான உலகம் இன்று இல்லை. ஜனநாயகம் இல்லாத தனிக்கட்சி ஆட்சியே இன்று நாட்டில் காணப்படுகின்றது. இது சர்வாதிகார முறையை வலுப்படுத்தும் ஒரு செயலாகும். நீதித்துறையின் நிலைபேறலுக்கு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் நேரடியாகத் தலையிடுகிறது.

பதவி உயர்வுகளைக் காட்டி, சட்டப்பூர்வமாக வழங்கப்பட வேண்டிய தீர்ப்புகளுக்கு வெளியே இருந்து செல்வாக்கு செலுத்தவும், நீதித்துறையின் சுதந்திரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பது அரசியலமைப்புக்கு எதிரான செயலாகும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அரச...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

சமர்ப்பித்துள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் முதலாம் தர மாணவர் சேர்க்கை தொடர்பாக வெளியிடப்படும் இந்த சுற்றுநிருபத்தின் முக்கிய நோக்கம், கல்விக்கான சமமான அணுகல் வாய்ப்புகளை உறுதிப்படுத்துவதாகும். அத்துடன், மாணவர் சேர்க்கையின் போது வெளிப்படைத்தன்மையைப் பேணவும், முறைகேடுகளைக் குறைக்கவும் தேவையான ஏற்பாடுகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இம்முறை புதிய சுற்றுநிருபமானது இலஞ்சம் மற்றும் ஊழல்கள் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் பரிந்துரைகளுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், பாடசாலை அதிபர்கள், கல்வித்துறை அதிகாரிகள் ஆகியோரின் கருத்துக்கள், யோசனைகள் மற்றும் புதிய கல்வி மறுசீரமைப்புகள் ஆகியவற்றையும் கவனத்தில் கொண்டே இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2027 ஆம் ஆண்டு தொடக்கம் அடுத்து வரும் காலங்களில் அரச பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான புதிய விதிமுறைகள் மற்றும் ஆலோசனைகள் அடங்கிய சுற்றுநிருபம் விரைவில் வெளியிடப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

## F16...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

நெருங்கியபோது, பாகிஸ்தானிய போர் விமானங்கள் அதற்குப் பாதுகாப்பு அளித்துள்ளன.

மத்திய கிழக்கு முழுவதும் பதற்றம் அதிகரித்துள்ள மற்றும் பிராந்திய பாதுகாப்பு குறித்த கவலைகள் கூடிவரும் சூழலில் இந்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தெஹ்ரானும் இஸ்லாமாபாத்தும் பல்வேறு அரசியல் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களில் நெருங்கிய ஒருங்கிணைப்பைப் பேணி வருகின்றன. இந்தப் பயணத்தின்போது, ஈரான் ஜனாதிபதி பாகிஸ்தான் தலைவர்களுடன் இருதரப்பு உறவுகள், பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் பரந்த புவிசார் அரசியல் நிகழ்வுகள் குறித்து உயர்மட்டப் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தேர்தல்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைவான பாராளுமன்ற விசேட குழுவிற்கு பொது மக்களின் முன்மொழிவுகள் மற்றும் கருத்துக்கள் கோரப்பட்டிருக்கின்றன.

இந்த பின்னனியில், இதன் நோக்கங்களை முஸ்லிம் சமூக அரசியல் நோக்கில் விரிவாக ஆராய்ந்து விதப்புரைகளை வழங்க வேண்டிய தேவையும், கொள்கை வகுப்பாளர்களின் இறுதி முடிவு நோக்கு நிலைகள் வடிவம் பெறும் பின்னனி தேடல்கள் எவ்வாறு அமையப்போகின்றன மற்றும் இது சார்ந்த ஏனைய விடயங்களை ஆராயும் நோக்கில் துறைசார் நிபுணர்களுடனான முதற்கட்ட கலந்தாய்வு அமர்வொன்றை அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனம் இன்று (21) ஏற்பாடு செய்திருந்தது.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் தலைவர் ஷாம் நவாஸ் தலைமையில் இடம்பெற்ற இன்றைய ஆரம்ப கட்ட கலந்துரையாடலில், இலங்கை தேர்தல் திணைக்களத்தின் முன்னாள் பிரதி தேர்தல்கள் ஆணையாளரும், தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினருமான எம்.எம். மொஹமட், அரசியலமைப்புப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான ஜாவிட் யூசுப், சிரேஷ்ட சட்டத்தரணியும் மனித உரிமை ஆர்வலருமான ருஷ்தி ஹபீப், கொழும்பு பல்கலைக்கழ சட்ட பீட சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஏ.எம்.ஹகீம், சிரேஷ்ட சட்டத்தரணி யூசுப் மற்றும் பாராளுமன்றத்தின் சிரேஷ்ட ஆய்வாளரும் கொள்கை மதிப்பீட்டாளருமான அஜிவதீன் ஆகியோர் பங்கேற்று தமது அவதானிப்புகளை முன்வைத்து கருத்து பரிமாற்றங்களில் ஈடுபட்டனர்.

முஸ்லிம் அரசியல் தரப்புகளைச் சேர்ந்த கொள்கை வகுப்பாளர்கள், ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், தேர்தல்கள் தொடர்பான நிபுணர்கள், கொள்கை ஆய்வாளர்கள், கொள்கை ஒப்பிட்டாளர்கள், முஸ்லிம் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கிட்டிய காலத்தில் அடுத்த கட்ட இக்கலந்தாய்வமர்வை நடத்தி இறுதி தீர்மானத்தை எட்டுவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டன.



## மூத்த...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி வெள்ளிக்கிழமை கனடாவில் நடைபெறவுள்ளது.

"ஸ்ரீ - லங்கா முஸ்லிம் கம்யூனிட்டி கனடா" (Sri Lanka Muslim Community Canada) அமைப்பினால் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கனடாவின் ஸ்கார்பரோவில் அமைந்துள்ள அமானா மாநாட்டு மண்டபத்தில் (Amana Conference Centre> Scarborough) அன்றைய தினம் பி.ப. 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

ஊடகத்துறை மற்றும் சமூக மேம்பாட்டிற்காகத் தமது வாழ்நாளை அர்ப்பணித்துச் சேவையாற்றிய என். எம். அமீன் அவர்களின் பணிகளைக் கௌரவிக்கும் வகையிலும், அவருடன் கனேடிய வாழ் மக்கள் கலந்துரையாடும் வகையிலும் இச்சந்திப்பு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

தற்போது "உதயம்" பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும், முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்கா (Muslim Council of Sri Lanka) தலைவராகவும் பொறுப்பு வகிக்கும் என். எம். அமீன் அவர்கள், தினகரன் உள்ளிட்ட லேக் ஹவுஸ் தமிழ் பிரசுரங்களின் முன்னாள் முகாமைத்துவ ஆசிரியராகவும், நவமணி தேசியப் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியராகவும், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் (Sri Lanka Muslim Media Forum) முன்னாள் தலைவராகவும் பணியாற்றி ஊடகத்துறையில் முத்திரை பதித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விசேட பாராட்டு விழாவில் கனேடிய வாழ் இலங்கை சமூகப் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் நலன்புரி அமைப்பினர் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## எமது...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென்ற அமெரிக்க துணை ஜனாதிபதியின் கருத்துக்கு ஈரான் பதிலடி வழங்கியுள்ளது.

ஐ.நா.வுக்கான ஈரானியத் தூதுவர் அலி பஹ்ரைனி இது குறித்து கருத்து வெளியிடுகையில் எமக்குக் கிடைக்கும் பணத்துக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை ஈரானே தீர்மானிக்கும் என்றும் பதிலடி வழங்கியுள்ளார்.

ஈரானின் முடக்கப்பட்ட பணத்தின் ஒரு பகுதியை விடுவிப்பதற்கு அமெரிக்கா - ஈரான் ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட்டுள்ள நிலையில், அந்தப் பணத்துக்கு தங்கள் நாட்டில்தான் விவசாயப் பொருட்களை வாங்க வேண்டும் என - அமெரிக்க துணை ஜனாதிபதி வேன்ஸ் கூறியுள்ளார்.

ஆனால், விடுவிக்கப்படும் பணத்தை அமெரிக்க விவசாயப் பொருட்களுக்காக ஈரான் செலவிடும் என்ற துணை ஜனாதிபதி ஜே.டி. வேன்ஸின் கூற்றை, ஈரானின் மூத்த அதிகாரி ஒருவர் இன்று மறுத்தார்.

ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான ஈரானின் தூதர் அலி பஹ்ரைனி, ஒரு "ஊடக சந்திப்பில் கூறும் போது "சுவிஸர்லாந்தில் நடந்த பேச்சுவார்த்தைகளில், அமெரிக்க மற்றும் ஈரானியப் பேச்சுவார்த்தையாளர்கள் "ஓரளவுக்கு நல்ல முன்னேற்றம் கண்டதைத் தொடர்ந்து, 06 பில்லியன் டொர் பணம் - முதல் தவணையில் முடக்கம் நீக்கப்படும்" என்றார்.

ஆனால், இதன் மூலம் கிடைக்கும் பணம் எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பதை அமெரிக்கா, பாகிஸ்தான் மற்றும் கத்தார் ஆகிய நாடுகள் மேற்பார்வையிடும் என்ற வேன்ஸின் கருத்தை அவர் நிராகரித்தார்.

"தனது பணத்தை என்ன செய்வது என்பதை ஈரான் மட்டுமே தீர்மானிக்கும்" என்றும் அவர் தெரிவித்தார்.

## அரச...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அரசு அதிகாரிகள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் தொடர்பான தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குதல், அரசு ஊழியர்களின் தொழில்சார் நிபுணத்துவத்தை மேம்படுத்துதல் மற்றும் புதிய தொழில்நுட்ப மற்றும் உலகளாவிய போக்குகளுக்கு ஏற்ப பொதுச் சேவையில் எவ்வாறான கட்டமைப்பு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது குறித்த பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதே இந்த ஆணைக்குழுவை நிறுவியதன் நோக்கமாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசியலமைப்பின் 33ஆவது உறுப்புரையின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## காஸாவில்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்குக்கரையில் பாலஸ்தீனச் சிறுவர்களுக்கு எதிராக இஸ்ரேல் நிகழ்த்தி வரும் சர்வதேச சட்ட மீறல்கள் குறித்து ஆராய்ந்து வெளியிடப்பட்ட இந்த ஐநா அறிக்கையில், இஸ்ரேலின் இத்தகைய நடவடிக்கைகள் போர்க் குற்றங்கள் மற்றும் மனிதநேயத்திற்கு எதிரான குற்றங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஒக்டோபர் 2025இல் போர்நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பின்னரும்கூட, சர்வதேச சட்டங்களை மதிக்காமல் இஸ்ரேல் தொடர்ந்து சிறுவர்களைக் கொன்று வருவதாக அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

இந்த விசாரணைக் குழுவின் தலைவரான ஸ்ரீனிவாசன் முரளிதர் இதுகுறித்துத் தெரிவிக்கையில், காசாவில் ஒக்டோபர் 2023இல் போர் தொடங்கியதில் இருந்து பலியானவர்களில் சுமார் 30 சதவீதம் பேர் சிறுவர்கள் ஆவர்.

காசாவில் உள்ள மகப்பேறு மற்றும் நவதோட்டப் பராமரிப்பு மையங்களை இஸ்ரேல் திட்டமிட்டுத் தாக்கி வருவதன் மூலம் பாலஸ்தீனர்களின் மறு உற்பத்தித் திறனும், எதிர்காலச் சந்ததியின் வாழ்வாதாரமும் நேரடியாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.

இதன் காரணமாகக் கருச்சிதைவுகள் மற்றும் பிறவிக் குறைபாடுகள் கணிசமாக அதிகரித்துள்ளன. மேலும், இஸ்ரேலின் கடுமையான உதவிப் பொருள் முற்றுகையால் காசாவில் பசியால் சிறுவர்கள் உயிரிழப்பதோடு, தடுப்பூசி தட்டுப்பாட்டால் நோய்த்தொற்றுகளும் தீவிரமடைந்துள்ளன.

# 2027 புனித ஹஜ் பதிவுகள் ஆரம்பம் ஹஜ் முகவர்கள், இடைத்தரகர்கள் மூலம் புனித ஹஜ் பதிவுகளை மேற்கொள்வதைத் தவிர்க்கவும்

### முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வேண்டுகோள்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

புனித ஹஜ் - 2027 இல் பங்கேற்க விரும்பும் இலங்கை முஸ்லிம் யாத்திரீகர்களுக்கான ஹஜ் பதிவு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இப்பதிவு இணையவழி (Online) மூலம் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

ஹஜ் முகவர்கள் அல்லது இடைத்தரகர்கள் மூலம் தங்களது ஹஜ் பதிவுகளை மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் என முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

2027 ஆம் ஆண்டு ஹஜ் பயணிகள் பதிவு செய்வது தொடர்பாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஹஜ் பயணிகள் பணத்தைச் ஏலவே செலுத்தி ஏமாறுவதைத் தவிர்க்கவே மேற்கண்டவாறு இலங்கையில் உள்ள அனைத்து பள்ளிவாசல்களுக்கும் அனுப்பி வைத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2027 ஆம் ஆண்டில் ஹஜ் கடமையை நிறைவேற்ற விரும்பும் அனைத்து ஹஜ் யாத்திரீகர்களும் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இலங்கை முஸ்லிமாக இருத்தல் வேண்டும், 15 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும் (விசா வழங்கப்படும் இறுதித் திகதி 09.03.2027), 2026 ஆம் ஆண்டில் ஹஜ் கடமையை நிறைவேற்றாதவராக இருத்தல் வேண்டும். திணைக்களத்தினால் வழங்கப்படும் இணையவழி (Online) இணைப்பினூடாக அல்லது ஒசு குறியீட்டை (QR Code) ஸ்கேன் செய்து பதிவினை மேற் கொள்ளும் போது சரியான தேசிய அடையாள அட்டை (NIC) மற்றும் தொலைபேசி இலக்கத்தையும் வழங்கி பதிவினை மேற் கொள்வதுடன் தொடராக தங்களது குடும்ப அங்கத்தினர்களையும் அதில் பதிவு செய்து கொள்ளலாம். அத்துடன் 15 வயது பூர்த்தியாகி அடையாள அட்டை இலக்கம் பயன்படுத்த முடியாத சிறுவர்களது பிறந்த திகதியினை வழங்கி பதிவினை மேற் கொள்ள முடியும்.

இப்பதிவிற்குப் பயன்படுத்தப்படும் தொலைபேசி இலக்கத்திற்கே திணைக்களத்தினால் வழங்கப்படும் ஹஜ் தொடர்பான அறிவுறுத்தல்கள் மற்றும் தகவல்கள் குறுஞ்செய்தி (SMS) மூலம் அனுப்பப்படுவதனால், பதிவு செய்யும் நபரின் தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் மாத்திரமே பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

குறிப்பாக ஹஜ் முகவர்கள் அல்லது இடைத்தரகர்கள் மூலம் தங்களது ஹஜ் பதிவுகளை மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலும், 2026 ஆம் ஆண்டிற்கான ஹஜ் பதிவின் போது ரூ. 5,000/- பதிவுக் கட்டணத்தைச் செலுத்தியிருந்தும் ஹஜ் பயணத்தை மேற்கொள்ளாத விண்ணப்பதாரர்கள், தங்களது சரியான தகவல்களை வழங்கி மீண்டும் பதிவு செய்ய வேண்டும். எனினும், அவர்கள் பதிவுக் கட்டணம் ரூ. 5,000/- செலுத்தத் தேவையில்லை. அத்துடன் அவர்களது கடந்த வருட பதிவு இலக்கமே மீள் பதிவிலக்கமாக வழங்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு 0112667901 / 0112667909 எனும் இலக்கத்தினூடாக ஹஜ் பிரிவைத் தொடர்பு கொள்ளவும் என்றும் தங்களது பதிவினை இங்கு வழங்கப்பட்டுள்ள முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள வலைத்தளம் (website) அல்லது ஒசு குறியீட்டை (QR Code) ஸ்கேன் செய்தும் மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேசிய...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படுமென்றும் புத்தசாசன சமய விவகார பிரதியமைச்சர் கமகெதர திசாநாயக்க இன்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெவ்வை தேசிய மீலாத் விழா தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் உதுமாலெவ்வை எம்.பீ.கருத்துத் தெரிவிக்கையில்

வருந்தத்தக்க" பதிலடி கொடுக்கப்படும் என ஈரானின் தற்காலிகப் பாதுகாப்பு அமைச்சர் எச்சரித்துள்ளார்.

ராஜதந்திர முன்னேற்றங்கள் ஏற்பட்ட போதிலும், அமெரிக்காவை தங்களது ஆயுதப் படைகள் ஒருபோதும் நம்பாது என்றும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

## இஸ்லாத்தின்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞானசார தேரருக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் விதித்த 9 மாத சிறைத்தண்டனையை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று (23) உறுதி செய்துள்ளது.

குறித்த சிறைத்தண்டனையிலிருந்து தன்னை விடுவித்து விடுதலை செய்ய ஞானசார தேரரினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை நிராகரித்து, நீதிபதி மஞ்சுள திலகரத்ன இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

கடந்த 2016ஆம் ஆண்டு கிருலப்பனைப் பகுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில், இஸ்லாத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டு, இன நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் செயற்பட்டார் எனக் குற்றம் சுமத்தி, பொலிஸாரினால் ஞானசார தேரருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## ஈஸ்டர்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ளார்.

பௌத்த மக்கள் செறிந்து நிற்கும் பகுதிகளில் பாரிய தாக்குதல்களை மேற்கொண்டு இனக் கலவரமொன்றினை ஏற்படுத்தி நாட்டில் அமைதியின்மையைத் தோற்றுவிப்பதற்கே ஆரம்பத்தில் திட்டம் தீட்டப்பட்டிருந்தாகவும் எனினும் பின்னர் அத் திட்டம் மாற்றப்பட்டே புதிய தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளதாகவும் இந் நேர்காணலில் அவர் அதிர்ச்சித் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

# சம்மாந்துறை பிரதேச கலாசார சபை புதிய நிர்வாகம் தெரிவு




கலாசார அதிகார சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த செவ்வாயன்று (16) சம்மாந்துறை பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பிரதேச செயலாளர் தேசபந்து ஜனாப் எஸ். எல். எம். ஹனீபா தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. அதன்படி,

நிருவாக பதவிகள்

நிருவாக தலைவர்- பிரதேச செயலாளர் தேசபந்து ஜனாப் எஸ். எல். எம். ஹனீபா

தலைவர் - டாக்டர் எம்.எம். நவ்சாத்

உப தலைவி - சித்தி றபிக்கா பாயிஸ்

செயலாளர் - எம். இஸ்ஹாக்

உப செயலாளர் - ஏ. ஜி. எம். இக்ராம்

பொருளாளர் - டாக்டர் எம். சி. எம். காலித்

செயற்பாட்டுக் குழு உறுப்பினர்கள்

பரிதா இஸ்மாயில்

எம்.எச்.அலியார்

எஸ். ஜெஸ்மின்

எம். சி. நௌசா

எம். பி அஹமட் ஜின்னா

கணக்காய்வாளர்

சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் கணக்காளராக கடமையாற்றும் எஸ்.எல்.சர்தார் மிர்சா அவர்கள் கலாசார அதிகார சபையின் கணக்காய்வாளராக தெரிவு செய்யப்பட்டார்.

ஒருங்கிணைப்பாளர்கள்

சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோகத்தர்களாக கடமையாற்றும்:

ஏ. எல். பரினா

வீ. தயாஜினி

ஆகியோர் ஒருங்கிணைப்பாளர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன், பதவிவழி நிருவாக குழு உறுப்பினராக நிருவாக கிராம உத்தியோகத்தர் எம் எஸ் எம் நளீர் தெரிவு செய்யப்பட்டார்

மேலும், கலாசார பேரவையின் உப தலைவராக எழுத்தாளர் ஜெலில் ஜீ அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.

இறுதியாக, புதிய நிர்வாகத்தினருக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டதுடன், கலாசார அபிவிருத்தி மற்றும் சமூக ஒற்றுமையை மேம்படுத்தும் வகையிலான எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. கூட்டம் நன்றியுரையுடன் நிறைவுற்றது.

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2026 JUNE 24 - WEDNESDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை

## நீதியாகவும், நேர்மையாகவும் நடக்க ஒத்துழைப்போம்

ஏழு வருடங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்களை கண்டுபிடித்து இத்தாக்குதலை திட்டமிட்டவர்களை வெளிப்படுத்தவும் தாக்குதலின் பின்னால் மறைந்துள்ள இரகசியங்களை கண்டறியவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற தீவிரமான புலனாய்வு விசாரணைகள் காரணமாக நாட்டில் கிறிஸ்தவர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் ஒருபோதும் இன முரண்பாடு ஏற்பட இடமில்லை என்று கிறிஸ்தவ சமூகம் திட்டவட்டமாக தெரிவித்திருக்கின்றது. இவ்வாறு அச்சத்தை எற்படுத்த முற்படுபவர்களாக இருப்பவர்கள் இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்ட வர்களை தேடி வலை விரிக்கப்பட்டிருப்பதால் அதில் முன்னைய ஆட்சியாளர்களில் ஒருசிலரும் சிக்குவார்கள் என்ற அச்சம் நிலவி வருவதால் ஆகும். அண்மையில் புதிதாக கைது செய்யப்பட்டவர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ள புதிய தகவல்களின் அடிப்படையில் இதுவரையில் கைதாகாமல் இருந்து வரும் மேலும் பலர் கைதாக இருப்பதாக அறிய முடிகின்றது.

அந்த வகையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வந்த நிலையில், தற்போது தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்ற அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி சுரேஷ் சலே ஏற்கனவே வெளிப்படுத்தியுள்ள தகவல்களை அடிப்படையாக வைத்து முன்னாள் ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷவும் அவருடன் இணைந்த மேலும் மூவர் கைது செய்யப்படலாம் என்ற தகவல்கள் வெளியாகி உள்ளன. அதனால் முன்னாள் ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ தாம் கைதாவதை தடுக்கக் கேரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றை 2026.06.16 ஆம் திகதி தாக்கல் செய்துள்ளார். அந்த மனு தொடர்பான விசாரணை 2026.06.18 ஆம் நடைபெற்ற பின்னர் மீண்டும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை பின்போடப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே கோதாபய ராஜபக்ஷ உள்ளிட்ட மூவருக்கு வெளிநாடு செல்வதற்கான தடையும் விதிக்கப்பட்டிருக்கின்றது. இந்நிலையில் கோதாபய அவரது சட்டத்தரணி சனத் விஜேவர்தன மூலம் தாக்கல் செய்துள்ள மனுவில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷவுக்கு எந்தவி தமான தொடர்பும் இல்லை. ஏற்கனவே நடத்தப்பட்ட எந்தவொரு விசாரணை அமைப்பாலும் அவர் விசாரணை செய்யப்படவும் இல்லை. அத்துடன் இத்தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்யப்பட்ட எந்த ஆணைக்குழுக்களின் அறிக்கைகளிலும் கோதாபய ராஜபக்ஷ பற்றி எதுவும் தெரிவிக்கப்பட்டும் இல்லை. அரசியல் தஞ்சம் கோரி தற்போது சுவிட்சர்லாந்தில் தங்கி இருக்கும் ஏற்கனவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சில தாகவல்களை வெளிப்படுத்தி இருக்கும் அசாத் மௌலானாவை தனக்கு தெரியாது. குற்றப்புலனாய்வுத் துறை பணிப்பாளராக இருக்கும் ஷானி அபேசேகர கோதாபய ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் நடைபெற்ற சில சம்பவங்களை அடிப்படையாக வைத்து ஏதோ ஒருவகையில் தமக்கு எதிராக பழிவாங்கும் நோக்கில் இவ்வாறான கைதுக்கு திட்டமிடுவதாக இருக்கலாம் என்ற குறிப்பிட்டுள்ளார்.


அதனால் தன்னை கைது செய்யாமல் இருக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று ரீட் மனு ஊடாக கோரிக்கை விடுக்கப்பட் டிருக்கின்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரியை கடந்த ஏழு வருடங்களாக தேடி வருகின்ற நிலையில் அண்மையில் சுரேஷ் சலே பிரதான சூத்திரதாரி என்ற தகவல்கள் நீதிமன்றத்தில் வெளியாகிய நிலையில் கோதாபய ராஜபக்ஷவின் பெயர் உட்பட பலர் சம்பந்தப்படுவதாக இருப்பதால் எதிர்காலம் இந்த தாக்குதல் சூத்திரதாரிகளுக்கு மோசமானதாக அமையலாம் என்ற அச்சம் நிலவுகின்றது. எனினும் சுரேஷ் சலே பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். கோதாபய ராஜபக்ஷ வும் கைது செய்யப்பட்டால் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 90 நாட்களுக்கு தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படலாம் என்ற அச்சம் நிலவுவதால் இத்தகைய முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதனால் கைதுகளை தடுப்பதற்காகவும் நடந்து கொண்டிருக்கின்ற விசாரணை களை திசை திருப்பி எப்படியாவது முட்டுக்கட்டடை ஏற்படுத்தி தடுத்து நிறுத்த பலவிதமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. ஏற்கனவே சுரேஷ் சலேக்கு ஆதரவாக நடத்தப்பட்ட உண்ணாவிரத போராட்டம், தற்போது சலே ஆதரவு அணியினரால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இனவாத நெருக்கடி ஏற்படலாம் என்ற அச்சமூட்டல்கள் , நாட்டை பயங்கரவாதிகளிடம் இருந்து மீட்டெடுத்த ராஜபக்ஷ குடும்பம் மற்றும் நாட்டுக்காக தியாகங்களை செய்த படைவீரர்கள் பழிவாக்கப்படுகின்றனர் என்ற பீதிகள் பரப்பப்பட்டு வருவது இதன் சில முயற்சிகளாகும்.

அத்துடன் இந்த தாக்குதல் தொடர்பாக முன்கூட்டியே தகவல் கிடைத்தும் தாக்குதலை தடுத்து நிறுத்தி 278 பேர்கள் உயிரிழப்பதற்கும் 560 இற்கும் மேற்பட்டவர்கள் காயப்படுவதற்கும் காரணமான தற்கொலை தாக்குதலை தடுத்து நிறுத்த போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டில் விசாரணை செய்யப்பட்ட முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிரி பெர்னாண்டோவுக்கு எதிரான வழக்கின் தீர்ப்பு 2026 ஜுலை 31 ஆம் திகதி வழங்கப்பட இருக்கின்றது. இதே குற்றச்சாட்டின் கீழ் முன்னாள் பொலீஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தரவுக்கு எதிரான வழக்கின் தீர்ப்பும் எதிர்வரும் ஜுலை 31 ஆம் திகதி அறிவிக்கப்பட இருக்கின்றது. இந்த வழக்குகள் கொழும்பு நிரந்தர மேல் நீதிமன்றத்தில் நீதிபதிகளான பிரியந்த லியனகே, விராஜ் வீரசூரிய மற்றும் திலகரத்ன பண்டார ஆகியோர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தையும் வெறுமனே முஸ்லிம் சமூகத்தின் மீதும், இஸ்லாமிய பயங்கரவாதம், அடிப்படைவாதம், ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதம் என்ற ஏதாவதொரு அமைப்பின் மீது சுமத்தி விட்டு உண்மையான சூத்திரதாரிகள் தப்பிவிடலாம் என்று நினைத்திருந்த நிலையில் இப்போது விசாரணகளில் ஏதோ ஒருவகையில் திருப்புமுனை ஏற்பட்டிருக்கின்றது. இந்த திருப்புமுனை எந்தவிதமான அரசியல் தலையீடுகளும் இன்றி உண்மையை கண்டறிதல், சூத்திரதாரிகளை வெளிப்படுத்தல், குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குதல் என்ற நிலை வரை எந்தவிதமான இடையூறுகளும் இன்றி தொடர வேண்டும். இந்த விசாரணைகளை தடுக்க முற்படும் முன்னைய ஆட்சியாளர் களுடன் நெருக்கமானவர்கள் இப்படியான விசாரணைக்காக சம்பந்தப்படாதவர்கள் கைது செய்யப்படுவதால் நாட்டில் இனவாதம் ஏற்படலாம் என்ற அச்சத்தையும் பீதியையும் கிளப்பி விசாரணைகளை முடக்க முயற்சிகளை எடுத்து வருகின்றனர். குற்றவாளிகளை கண்டுபிடிக்க விசாரணைகளை முன்னெடுப்பதால் நாட்டில் இனவாதம் ஏற்படாது என்பதை பேராயர் மெல்கம் ரஞ்சித் மற்றும் ஆயர் சுனில் காமினி உட்பட அநியாயத்தை எதிர்க்கின்ற அனைவரும் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகள் தொடர்பாக திட்டமிட்டு திரைமறைவில் இருந்து இயக்கியவர்களை கண்டுபிடிக்க எடுக்கும் முயற்சி ஒருபோதும் இனவாதத்தை ஏற்படுத்த உரிய காரணியாக அமைவதில்லை. அப்படியானால் எந்தவொரு குற்றச் செயல் தொடர்பாகவும் நீதியானதும் நேர்மையானதுமான விசார ணைகளை மேற்கொள்ள முடியாமல் போகலாம். சட்டத்தின் ஆட்சி இடமில்லாமல் போகலாம். அராஜகம் தலைவிரித்தாடும் நிலை ஏற்படலாம். அத்தகைய நிலைமை களுக்கு இடமளிக்க முடியாது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக தற்போது முன்னெடுக்கப்படுகின்ற குற்றப் புலனாய்வு விசாரணைகள் எந்தவிதமான இடையுறுகளுக்கும் உட்படாமல் நீதியாகவும் நேர்மையாகவும் நடக்க எல்லா தரப்பினரும் ஒத்துழைப்பது அவசியமாகின்றது.




# வாக்குறுதியை நிறைவேற்ற தடுமாறும் அரசும் எதிரான போராட்டங்களும்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் சந்தேக நபராக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்ற இராணுவ புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேயை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரணை செய்ய அவர் பயங்கரவாதி அல்ல. அவருக்கு சித்திரவதை செய்து விசாரணை செய்ய வேண்டாம். அவரை சாதாரண சட்டத்தின் கீழ் விசாரணை செய்ய வேண்டும். சுரேஷ் சலே ஒரு தேசப்பற்றாளர். இந்த நாட்டை மீட்டெடுத்த படைவீரர்களில் ஒருவர் என்று சலேக்கு ஆதரவாக முன்னாள் அமைச்சர்கள் சிலரும் மஹிந்தர ராஜபக்ஷ தரப்பு ஆதரவாளர்கள் ஒருசிலரும் இணைந்து ஆரம்பித்த சத்தியாக்கிரகப் போராட்டம் **2026.06.10** ஆம் திகதி ஆரம்பித்தவர்களால் முடித்துக்கொள்வதாக அறிவிக்க ப்பட்டது. இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் **2026.06.08** ஆம் திகதி ஆரம்பிக் கப்பட்டதாகும். இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரகத்திற்கு உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களின் சிலரால் இடையிடையே ஏற்பட்ட கடுமையான எதிர்ப்பு காரணமாகவே இவ்வாறு போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

தற்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்ட விசாரணை க்காக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்ற சுரேஷ் சலே **2026.06.05** ஆம் திகதி சிறைக்குள் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்தார். பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும், விசாரணை யின்போது சலே மீது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சித்திரவதை நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து இவ்வாறு உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார். அவரைப் பார்வையிட சிறைக்குச் சென்ற அவரது மனைவியும் மகனும் வெளியே வந்து சலே முகம் கொடுக்க நேரிட்டு இருக்கின்ற நிலைமைகள் தொடர்பாக பகிரங்கமாக கருத்துக்களை வெளியிட ஆரம்பித்தனர்.

அதன் போது சலே சித்திரவதை செய்யப்படுவதாகவும் மிகவும் மோசமான அளவுக்கு அவர் மனநிலை பாதிக்கப்பட்டு மன உளைச்சலுக்கு உட்பட்டிருப்பதாகவும் தெரிவித்தனர். இவ்விடயங்களை சலே சார்பாக மன்றில் ஆஜராகும் அவரது சட்டத்தரணியும் கடந்த வாரம் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ஜூன் 08 ஆம் திகதி கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் முன்னால் ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரகத்தில் பங்குபற்றிய முன்னாள் அமைச்சத் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, ஞானசார தேரர், பாராளுமன்ற உறப்பினர் திலித் ஜயவீர போன்றோர் சலேயை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விசாரணை செய்வதை நிறுத்தி நாட்டின் சாதாரண சட்டத்தின் கீழ் விசாரணை செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைத்து போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆனாலும் அரச தரப்பு சலே தொடர்பாக ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பாக கருத்து வெளியிடுகையில் எத்தகைய தடைகள், இடையூறுகள் ஏற்பட்டாலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரியை கண்டுபிடிப்பதற்காக ஆரம்பித்துள்ள விசாரணைகளை அரசாங்கம் நிறுத்துவதில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியையும் நியாயத்தையும் பெற்றுக்கொடுத்தல், தாக்குதலை திட்டமிட்டு நடத்திய அநியாயக்காரர்கள் கண்டுபிடிக்கப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தகுந்த தண்டனை வழங்கப்படும் என்றும் தெரிவித்து வருகின்றது.

ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு தடுத்துவைத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது சுரேஷ் சலே மூலம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் திட்டமிடல் தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட பல திடுக்கிடும் தகவல்களை மேலதிக சொலிசிடர் ஜெனரல் **2026.05.20** ஆம் திகதி முதன் முதலாக கோட்டை நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார். அதன்படி **2019** ஏப்ரல் **21**ஆம் திகதி நடத்தப்பட்ட ஈஸ்டர் சன்டே தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சுரேஷ் சலே என்றும் மேலதிக சொலிசிடர் ஜெனரல் தெரிவித்திருந்தார். ஆனாலும் சலேயிற்கு ஆதரவாக நடத்தப்பட்டு வருகின்ற போராட்டத்தில் பிரதானமாக தெரிவிக்கப்பட்டு வருவது படைவீரர்கள் நாட்டிற்காக உயிர்களை தியாகம் செய்தவர்கள். நாட்டை மீட்டெடுத்தவர்கள். அவர்களை துன்புறுத்தக் கூடாது. இத்தகையவர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி அரசாங்கம் வேட்டையாடக் கூடாது என்பதாகும்.

இருந்தாலும் இந்த சம்பவங்களின் போக்குகள் தொடர்பாக **2026.06.09** ஆம் திகதி அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்றத்தில் விளக்கமளித்தார். **2029** ஏப்ரல் **21** ஆம் திகதி உயிர்த்த ஞாயிரன்று கிறிஸ்தவர்களை இலக்குவைத்து தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது. வெளிநாட்டவர்கள் **45** பேர் உட்பட **277** பேர் கொல்லப்பட்டனர். இந்த குண்டுத் தாக்குதலின் பின்னர் மஹிந்த ராஜபக்ஷ குடும்பம் இந்த நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கின்றது. நாட்டைப் பாதுகாக்கும் தகுதி பெற்றவர் ராஜபக்ஷ குடும்பத்தில் தான் இருக்கின்றார் என்று கூக்குரல் இட ஆரம்பித்தனர். **2019** ஆகஸ்ட் **11** ஆம் திகதி அப்போது நடத்தப்பட இருந்த ஜனாதிபதித் தேர்தலில் கோதாபய ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக போட்டி இடுவார் என்று அறிவிக்கப்பட்டது. அதில் இருந்து புலனாகிய விடயம்தான் அனைத்தும் இந்த ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து நடத்தப்பட்ட சதி முயற்சிகள் என்பது. அதே நேரம் தாக்குதலுக்கு நான்கு வாரங்களுக்கு முன்னர் இந்த சலே நீர்கொழும்பில் தேவாலயங்களுக்கு வரும் மக்களது எண்ணிக்கை தொடர்பாகவும் அங்குள்ள நிலைமைகள் குறித்தும் நான்கு பேரை ஈடுபடுத்தி தகவல்களையும் பெற்றுள்ளார் என்ற தகவல்கள் விசாரணைகளில் இருந்து வெளியாகி இருக்கின்றன என்றும் தெரிவித்துள்ளார்.







இந்த அடிப்படையில் அரச தரப்பு சலே தொடர்பாக பல தகவல்களை வெளியிட்டு வருகின்ற நிலையில், இவ்வாறு சத்தியாக்கிரகங்கள், உண்ணாவிரதங்கள் மூலம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக தொடரும் விசாரணைகளை எந்தக் காரணம் கொண்டும் திசை திருப்ப முடியாது என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஏற்கனவே இந்த சம்பவத்துடன் சம்பந்தப்பட்டதாக வெளியாகிய தகவல்களின் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ உட்பட மற்றும் ஒருவருக்கு வெளிநாடு செல்ல முடியாதபடி தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. அதில் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தர உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பாக அவரைக் கைது செய்வதைத் தடுக்கும் வகையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

அத்துடன் சுரேஷ் சலே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்டதாக விசாரணை செய்யப்பட்டாலும் அவருக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மன உளைச்சலைப் பரிசோதிக்கும் வைத்திய பரிசோதனை, உடல், உள ஆரோக்கியத்தைக் கண்காணிப்பதற்கான வைத்தியப் பரிசோதனை, மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் சலேயைப் பார்வையிட அனுமதி உட்பட எல்லா வசதிகளும் வழங்கப்பட்டன. ஆனாலும் சித்திரவதை செய்ததாக அவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் அவரை பார்வையிட்ட போது எந்தத் தகவலையும் தெரிவிக்கவில்லை என்றும் அமைச்சர் விஜேபால குறிப்பிட்டுள்ளார்.

எதுவானாலும் நாட்டில் ஏழு வருடங்களுக்கு முன்னர் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தி கிறிஸ்தவ சமூகத்தவர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல் சம்பவத்தின் உண்மைகள் வெளிவர வேண்டும். இஸ்லாமியப் பயங்கரவாதம், அடிப்படைவாதம், சூபிசம், சலபிசம் என்று பறைசாற்றி தூய அரசியல் நோக்கத்தை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் உண்மையான பின்னணி கண்டறியப்பட வேண்டும். மேலும் ஆழமான முறையில் விசாரணை செய்யப்பட்டால் இந்த தாக்குதலை திட்டமிட்ட, உத்தரவிட்ட பிரதான அரசியல் பின்னணி, பின்னால் இருந்த அரசியல்வாதி யார் என்பதை கண்டுபிடிக்க முடியும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பது போன்றே இந்த நாட்டில் அமைதியாகவும் நிம்மதியாகவும் வாழ்ந்த முஸ்லிம்களை மிகவும் கஷ்டத்திற்கும் நெருக்கடிக்கும் உள்ளாக்கி நாட்டில் தலைகுனியும் நிலையை ஏற்படுத்திய அநியாயக்காரர்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும்.

அத்துடன் இந்த தாக்குதல் **2019** ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் நடத்தப்பட்டதால் இந்த சம்பவத்துடன் முன்னாள் ஜனாதிபதிகள் இரண்டு பேரையும் அமைச்சர்களையும் கொண்ட ராஜபக்ஷ குடும்பம் மீதே குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன. இந்த தாக்குதலின் பின்னணி அரசியல் என்ற அடிப்படையில் நோக்கப்படுவதால் காலம் கடந்தாவது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் சம்பத்தப்பட்ட சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்பட்டு நாட்டிற்கு வெளிப்படுத்தப்பட வேண்டும். அதனால் சலே குற்றமிழைக்காதவராக இருந்தால் விசாரணகளின் போது அதனை நிஷரூபிக்க முடியும். அவ்வாறே ராஜபக்ஷ குடும்பத்திற்கும் இந்த தாக்குதலுடன் தொடர்பு இல்லை என்றால் விசாரணைகளின் முடிவில் அவை உண்மைகளாக வெளிப்படலாம்.

அதுவரையில் விசாரணைக ளுக்கு இடையூறு ஏற்படுத்தி திசை திருப்ப முற்படாமல் ஒத்துழைப்பது அவசிய மாகின்றது. எவ்வாறாயினும் சலே சார்பாக ஆஜராகும் சட்டத்தரணி தெரிவிக்கையில், சலே குறித்து ஆஸாத் மௌலானா விடயம் இருந்து பெறப்பட்டுள்ள தகவல்கள் சட்டத்திற்கு முரணானதாகும் என்றும் அவற்றை நீதிமன்ற விசாரணைகள் மூலம் எதிர்காலத்தில் அறிந்துகொள்ள முடியுமாகும் என்று தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் பின்னால் இருக்கின்ற சூத்திரதாரிகளை வெளிப்படுத்துவோம். தண்டனை வழங்குவோம் என்பது இந்த அரசு மக்களுக்கு வழங்கி இருக்கின்ற வாக்குறுதியாகும். ஆனாலும் அதனை நிறைவேற்ற விடாமல் ஒருதரப்பு இடையூறு ஏற்படுத்துவதால் அரசு தடுமாறும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.





# கிழக்கு மாகாண சபையின் மற்றுமொரு பலவீனத்தால் உத்தியோகத்தர்களுக்குப் பெரும் பாதிப்பு

## இம்ரான் எம்.பி

(ஏ.எச். ஹஸ்பர்)

கிழக்கு மாகாண சபையின் மற்றுமொரு பலவீனம் காரணமாக முகாமைத்துவ உத்தியோகத்தர் சேவையின் விசேட தரத்துக்கான போட்டிப் பரீட்சையில் சித்திய டைந்த உத்தியோகத்தர்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகஷூப் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு (17)கருத்து தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

கிழக்கு மாகாண முகாமைத்துவ உத்தியோகத்தர் சேவையின் விசேட தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடத்தப் பட்ட



போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கான நேர்முகப் பரீட்சை கடந்த வாரம் நடைபெற்றுள்ளது. இந்நேர்முகப் பரீட்சையின் போது தடைதாண்டல் பரீட்சைப் பெறு பேறு சமர்ப்பிக்கா ததால் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொண்ட சிலரது முடிவுகள் இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண முகாமைத்துவ சேவை ஆட்சேர்ப்புத் திட்டத்தின் படி வருடத்துக்கு இருமுறை தடைதாண்டல் பரீட்சை நடத்தப்பட வேண்டும். எனினும், மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு இந்தப் பரீட்சையை உரிய காலங்களில் நடத்த வில்லை.

இந்நிலையில் மாகாணப்பொதுச் சேவை ஆணைக்குழு நடத்திய நேர்முகப் பரீட்சையில் தடை தாண்டல் பரீட்சை பெறுபேறு கேட்கப்பட்டமை தான் வேடிக்கையானது.

அவர்கள் நடத்த வேண்டிய பரீட்சையை நடத்தாமல் எப்படி அவர்கள் பெறு பேறு கேட்க முடியும்? இதனால் பாதிக்கப்படுவது கிழக்கு மாகாண அரச உயரதிகள் இல்லை. கீழ்மட்ட உத்தியோகத்தர் கள் தான் பாதிக்கப் படுகிறார்கள்.

இந்த அரசாங்க காலத்தில் கிழக்கு மாகாண அரச நிர்வாகம் மிக மோசமாக பலவீனமடைந்துள்ளது.

இந்த மாகாணத்தின் பலவீனம் சம்பந்தமாக கடந்த வாரம் ஊடக அறிக்கையொன்றை விடுத்திருந்தேன். அந்த வகையில் இது மற்றொரு பலவீனமாகும்.

இதனால் இந்த மாகாணத்தில் பொதுமக்களும் தமது நிர்வாக விடயங்களை உரிய காலங்களில் நிறைவேற்றிக் கொள்ள முடியாது சிரமப்படுகின்றார்கள். இப்போது அந்த அந்த மாகாணத்தில் பணிபுரிவோரும் பாதிக்கப்படு கின்றார்கள்.

இது தான் இந்த அரசாங்கம் வாக்குறுதியளித்த சிஸ்டம் சேஞ்ச், பொதுமக்களும், அரச உத்தியோக த்தர்களும் சிரமங்களை அனுபவிக்கும் வகையில் இந்த அரசாங்கம் கிழக்கு மாகாண நிர்வாகத்தை பலவீனப்படுத்தி விட்டது. சிறந்த நிர்வாகம் செய்யக் கூடியவர்கள் இந்த அரசாங்கத்தில் இல்லையென்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது என்றார்.

# சம்மாந்துறையில் மக்கள் காங்கிரஸின் இளைஞர் மாநாடும் வட்டார அமைப்பாளர்கள் நியமனமும்





நாடளாவிய ரீதியில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ ின் ஊழுெநௌஉவ றுவைா யுஊஆஊ திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்சியின் புனரமைப்பு நிகழ்வின் ஒரு பகுதியாக அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பிரதேசத்திற்கான வட்டார ரீதியான நியமனங்கள் வழங்களும், இளைஞர் மாநாடும் (14) சம்மாந் துறை பிரதேச சபையின் விளையாட்டு கட்டிட தொகுதியில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினரும் இளைஞர் அமைப்பாளருமான அப்னான் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாக



கலந்துகொண்டு, புதிய நிர்வாக மற்றும் வட்டார பொறுப்பாளர் களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கட்சியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான அஷ்ரப் தாஹீர், புத்தளம் மாவட்ட அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தாஹீர் மரைக்கார், சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் மாஹீர், கட்சியின் உயர்பீட உறுப்பினர்களான முபீத், சபீஸ் மற்றும் காதர் ஆசிரியர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மேலும், கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்கள், அம்பாறை மாவட்ட முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் மற்றும் இளைஞர்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

# தமிழ் மொழி மூல தொழில் நுட்ப கல்லூரியில் அறிவூட்டல் செயலமர்வு





(பாரா தாஹீர்)

மாவனல்லை கனேதன்னை பகுதியில் இயங்கி வரும் IIMT CAMPUS நிறுவனத்தின் ஏற்பாட்டில் தொழில் நுட்பம் சம்பந்தமான கற்கை நெறி , அறிவூட்டல் செயலமர்வு ஒன்று அக் கல்லூரி கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

சப்ரகமுவ மாகாணத்தில் 17 வருடங்களாக தமிழ் மொழி மூலம் இயங்கி வரும் இவ் தொழில் நுட்ப கல்லூரியில் ,நாடளாவிய ரீதியில் கல்வி கற்ற ,கல்வி பொதுதராதர சாதாரண தர மாணவர்கள் மற்றும் உயர் தர மாணவர்கள் இதில் கற்று, இக் கற்கை நெறியை பூர்த்தி செய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ் தமிழ் மொழி மூல தொழில் நுட்ப கற்கை நெறி சம்பந்தமான தெளிவு சமூகத்துக்கு சென்றடையும் நோக்கில் நடைபெற்ற செயலமர்வில் இதன் முகாமைத்துவ தலைவர் டி.எல். எம்.நவாஸ்,ஆயுட் கால தலைவர் எஸ். எல். எம். பௌஸ், வைத்தியர்களான எம்.டி.சைட் முகம்மட்,என். எம். எம்.பஸால்,எம். வை.எம்.ஹமீஸ், எம்.சுஹூரி, அதிபர்கள், பள்ளி வாசல் தலைவர்கள், பாடசாலை அபிவிருத்தி சம்பந்தமான உறுப்பினர்கள், கல்வி சார் உறுப்பினர் கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர் .

# அல்-பலாஹ் கல்லூரியில் கோலாகலமாக நடைபெற்ற கலை விழா





(ஆர்.ஜே. புஸ்ரா)

நீர்கொழும்பு, போரத்தொட்ட அல்-பலாஹ் கல்லூரியில் கலை விழா நேற்று மிகவும் கோலாகலமா கவும் சிறப்பாகவும் நடைபெற்றது.

கம்பஹா மாவட்ட வலயக் கல்வி மட்டத்தைப் பிரதிநிதித்துவப்படு த்தி மூன்று பாடசாலைகள் போட்டிகளில் பங்குபற்றின.

நீர். அல்-பலாஹ் கல்லூரி, பே. அல்-ஹிலால் கல்லூரி, நீர். விஜயரத்தினம் இந்து கல்லூரி ஆகியன தமது திறமைகளை வெளிப்படுத்தின.

மூன்று பாடசாலைகளுக்கும் இடையில் நடைபெற்ற போட்டி களில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று அல்-பலாஹ் கல்லூரி முதலாம் இடத்தை தழுவிக் கொண்டது. மாணவர்களின் கலை நிகழ்வுகள் பார்வையாளர்களின் கண்களுக்கு குளிர்ச்சி அளித்தன.

இவ்விழாவை மெருகூட்டும் வகையில் மேல் மாகாண கல்விப் பணிப்பாளர் திரு. K.L.A.S. நஜீப் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். மேலும் நீர்கொழும்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி W.S.S.R. பெர்னாண்டோ, நீர்கொழும்பு கோட்டக் கல்விப் பணிப்பாளர் A.A.M.S. துஸாரி, நீர்கொழும்பு கல்வி வலய ஆலோசகர் திருமதி காஞ்சனா சிவகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் என பெருந்திரளானோர் வருகை தந்து விழாவிற்கு மேலும் பெருமை சேர்த்தனர்.

# கல்முனை மாநகர பதில் ஆணையாளராக நௌபீஸ் கடமையேற்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் பதில் ஆணையாளராக நியமிக்கப் பட்டுள்ள இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் தர அதிகாரியான என்.எம். நௌபீஸ் செவ்வாய்க்கிழமை (15) தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அக்கரைப்பற்று மாநகர சபையின் ஆணையாளராக கடமையாற்றி வருகின்ற நிலையிலேயே கிழக்கு மாகாண ஆளுநரினால் இவருக்கு இம்மேலதிக பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் ஆணையாளராக கடமையாற்றி வந்த ஏ.ரி.எம். றாபி, கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையா ளராக பதவியேற்றுக் கொண்டதை யடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே நௌபீஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார்.



கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர், கிழக்கு மாகாண சபையின் முகாமைத்துவப் பயிற்சி பிரிவு பணிப்பாளர், கிண்ணியா நகர சபையின் செயலாளர், விவசாய அமைச்சின் உதவிச் செயலாளர் போன்ற பதவிகளை வகித்துள்ள இவர் கடந்த 2024 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கல்முனை மாநகர ஆணையாளராகவும் கடமையாற்றி யுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உண்மை - பொய்யை அறிய முடியாத போர் களம்



எஸ்.ஏ.சுஃப்யான்
(senior Journalist,
Chennai -
Tamilnadu, India)

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் இன்று இரவே ஈரான் மீது தாக்குதல் நடத்தி கார்க் தீவை கைப்பற்றப்போவதாக அறிவித்த நிலையில், அடுத்த சில மணி நேரத்தில் ஈரான் உடன் வரலாற்றுச் சிறப்புமிக்க அமைதி ஒப்பந்த கையெழுத்திட தயாராகியுள்ளோம் என அறிவித்தார். ஆனால், இந்த அறிவிப்புகள் அனைத்தும் முற்றிலும் உண்மைக்கு புறம்பானவை
என்று ஈரான் அரசு அதிகாரப் பூர்வமாகத் தெரிவித்துள்ளதால் சர்வதேச அளவில் பெரும் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. இன்று அமெரிக்க பங்குச்சந்தையில் எலான் மஸ்க்கின் 'ஸ்பேஸ்எக்ஸ்' நிறுவனத்தின் பிரம்மாண்ட பொதுப் பங்கு வெளியீடு (IPO) வெளியாக உள்ள நிலையில், பங்குச் சந்தையைச் செயற்கையாக உயர்த்துவதற்காகவே இத்தகைய போலி அறிவிப்புகள் திட்டமிட்டு வெளியிடப்பட்டுள்ளதாகக் கடுமையான குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.
இரான் தலைவர்கள் "ஒரு ஒப்பந்தத்தைப் பேச்சுவார்த்தை மூலம் முடிக்க அதிக காலம் எடுத்துக்கொள்கிறார்கள்" என்று டொனால்ட் டிரம்ப் தனது ட்ரூத் சோஷியல் தளத்தில் எழுதியிருந்தார்.
இரான் ஒரு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது, ஆனால் அவர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் பீட் ஹெக்செத் கூறியுள்ளார். மேலும், அந்நாட்டின் "முக்கியமான வசதிகள் மற்றும் தளங்கள் மீது குண்டுகள் வீசப்படும்" என்றும் அவர் கூறினார்.
அமைதி ஒப்பந்தம் எதுவும் எட்டப்படாவிட்டால் இரான் மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்படும் என்றும் அமெரிக்க அதிபர் மேலும் தெரிவித்தார்.
இரான் அதிபர் மசூத் பெசெஷ்கியன் கூறுகையில், இரான் "எந்தவொரு அழுத்தத்திற்கும் அல்லது அச்சுறுத்தலுக்கும் எதிராக உறுதியுடன் நிற்கும்" என்றார்.
முன்னதாக, இரான் வெளியுறவு அமைச்சகம், அமெரிக்கா "முரணான செய்திகளை அனுப்பி, அதன் மூலம் ராஜதந்திர ரீதியிலான செயல்முறைகளைச் சீர்குலைக்கிறது" என்று குற்றம் சாட்டியிருந்தது.
கடந்த ஏப்ரல் மாதத்தில், அமெரிக்காவும் இரானும் ஒரு போர்நிறுத்தத்திற்கு ஒப்புக் கொண்டன. இது தொடக்கத்தில் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.
அதன் பிறகு இரு தரப்பினரும் அவ்வப்போது மாற்றி மாற்றித் தாக்குதல்களை நடத்தி வந்தாலும், முழு அளவிலான போராக அது மாறவில்லை.
இருப்பினும், வாஷிங்டன் மற்றும் தெஹ்ரான் இடையே பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்காகச் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் முடங்கியுள்ளன, மேலும் பரஸ்பர தாக்குதல்களும் அதிகரித்துள்ளன.
அமெரிக்கா நடத்திய புதிய தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக, வளைகுடா பகுதியில் உள்ள அமெரிக்க ராணுவ முகாம்கள் மீது இரான் தாக்குதல் நடத்தியுள்ளது. முன்னதாக, இரான் மீது "கடுமையான" தாக்குதல் நடத்தப்படும் என்று டொனால்ட் டிரம்ப் கூறியிருந்த நிலையில் இந்தத் தாக்குதல்கள் நடந்துள்ளன.
போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்குத் தெஹ்ரான் "மிகவும் அதிக நேரம்" எடுத்துக் கொள்வதாக டொனால்ட் டிரம்ப் கூறியதை அடுத்து, இரவோடு இரவாகத் தொடுக்கப்பட்ட இந்தத் தாக்குதல்கள், தங்களின் இரண்டாவது தொடர்ச்சியான "தற்காப்புத் தாக்குதல்கள்" என்று அமெரிக்க மத்திய கட்டளையகம் (சென்ட்காம் - Centcom) தெரிவித்துள்ளது.
இதற்குப் பதிலடியாக, பஹ்ரைன் மற்றும் குவைத்தில் உள்ள அமெரிக்க ராணுவ முகாம்கள் மீது தான் தாக்குதல் நடத்தியதாக இரான் கூறியுள்ளது. முந்தைய நாள் இரான் நடத்திய பதிலடித் தாக்குதல்களிலும் இதே இரண்டு இடங்கள் தான் இலக்காக இருந்தன.
சமீபத்திய நாட்களில் இரு நாடுகளும் மாற்றி மாற்றி நடத்தி வரும் இந்தத் தீவிரத் தாக்குதல்கள், கடந்த ஏப்ரல் மாதம் இரு நாடுகளுக்கும் இடையே எட்டப்பட்ட தற்காலிக போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு ஒரு பெரும் சோதனையாக மாறியுள்ளது.
இந்த நிலையில் சர்வதேச முன்னணி ஊடகமான சிஎன்என் வெளியிட்டுள்ள அதிரடித் தரவுகளின்படி, அமெரிக்க - ஈரான் போர் தொடங்கியதிலிருந்து "இரு நாடுகளுக்கும் இடையே அமைதி ஒப்பந்தம் மிக அருகில் உள்ளது" என்று அதிபர் டிரம்ப் உரிமை கொண்டாடுவது இது 39-ஆவது முறையாகும். டிரம்ப் இதுவரை வெளியிட்ட அத்தனை 'ஒப்பந்த நெருக்கடி' அறிவிப்புகளையும் ஈரான் ஒவ்வொரு முறையும் அடியோடு மறுத்து வந்துள்ளது.
இது குறித்து ஈரானிய செய்தி நிறுவனங்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், "டிரம்பின் தற்போதைய வாக்குறுதி அனைத்தும் அவரது முந்தைய போலி அறிவிப்புகளைப் போலவே முற்றிலும் புறக்கணிக்கப்பட வேண்டியவை" என்று மிகக் கடுமையாக விமர்சனம் செய்துள்ளன. மேலும், ஈரானின் உச்ச தலைவர் உள்ளிட்ட அனைவரும் இந்த ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்துவிட்டதாக டிரம்ப் கூறிய வாதத்தை ஈரானிய வெளியுறவு அமைச்சகம் முற்றிலுமாக நிராகரித்துள்ளது.
ஈரானிய செய்தி நிறுவனமான 'ஃபார்ஸ்' வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, அமெரிக்காவுடன் எவ்வித உடன்பாடும் எட்டப்பட வில்லை என்றும், ஒருவேளை ஒப்பந்தம் கையெழுத்தாக வேண்டும் என்றால் ஈரான் விதிக்கும் அனைத்துக் கோரிக்கை களையும் அமெரிக்கா நிபந்தனை யின்றி ஏற்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. தங்களின் அணுசக்தித் திட்டத்தை (Nuclear Program) அப்படியே வைத்திருப்பது, செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை அமெரிக்காவிடம் ஒப்படைக்க மாட்டோம் என்பதில் உறுதியாக இருப்பது மற்றும் உலக வர்த்தகத்தில் முக்கியப் பங்கு வகிக்கும் ஹார்முஸ் ஜலசந்தியின் (Strait of Hormuz) முழுக் கட்டுப்பாட்டை நிரந்தரமாக ஈரானே வைத்திருப்பது ஆகியவை ஈரானின் முதன்மை நிபந்தனை களாகும். இது தவிர, அமெரிக்கா வால் முடக்கப்பட்டுள்ள தங்களின் 24 பில்லியன் டாலர் நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்பதும் அவர்களின் முக்கியக் கோரிக்கையாகும். அமெரிக்காவின் குண்டுவீச்சுகளுக்குப் பயந்து ஈரான் தங்களின் கொள்கைகளை ஒரு போதும் தளர்த்தாது என்றும், அழுத்தம் காரணமாகப் பணிய நினைத்திருந்தால் ஒரு வருடத்திற்கு முன்பே அதைச் செய்திருப்போம் என்றும் ஈரான் பதிலடி கொடுத்துள்ளது.
இரு நாடுகள் மத்தியிலும் ஒப்பந்தம் கையெழுத்தானதும் ஹார்முஸ் வழித்தடம் உடனடியாகத் திறக்கப்படும் மற்றும் வணிகக் கப்பல்களுக்குப் பாதுகாப்பான வழித்தடம் உருவாக்கப்படும் என்ற அதிபர் டிரம்பின் பேச்சை ஈரானிய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் முற்றிலும் மறுத்துள்ளார். ஹார்முஸ் ஜலசந்தி தொடர்ந்து மூடப்பட்டே இருக்கும் என்றும், ஈரானின் அனுமதியின்றி அங்கு எவ்விதக் கப்பல் போக்குவரத்தும் சாத்தியமில்லை என்றும் அவர் மிகத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தியுள்ளார். இதன் மூலம் அமெரிக்காவுடனான எவ்வித இறுதி ஒப்பந்தமும் எட்டப்படவில்லை என்பதை ஈரான் உறுதிப்படுத்தியுள்ள நிலையில், இந்த புவிசார் அரசியல் நாடகங்கள் உலகப் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.
இதனைத் தொடர்ந்து அடுத்த அடுத்து வரும் செய்திகள் மிகவும் குழப்பமான சூழ்நிலை உலகின் பல்வேறு நாடுகளில் மத்தியில் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.
அமெரிக்கா தரப்பிலும் அதே நேரத்தில் ஈரான் தரப்பிலும் மாறுபட்ட கருத்துக்கள் செய்திகளாக வெளிவந்த நிலையில் எந்தவொரு முடிவுக்கும் வர முடியாத சூழ்நிலை தற்போது காணப்படுகிறது.
இந்த நிலையில் இரு நாடுகளுக்கும் இடையேயான போரை முடிவுக்குக் கொண்டு வர சர்வதேச அளவில் தீவிர பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன. பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நடந்த முந்தைய பேச்சுவார்த்தைகளைக் குறிப்பிட்டு, "அமெரிக்காவும் ஈரானும் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு மிக அருகில் நெருங்கிவிட்டன" என்று ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி தனது எக்ஸ் (X) தளத்தில் பதிவிட்டிருந்தார். ஆனால், இந்த ஒப்பந்த விவகாரம் தற்போது பெரும் சர்ச்சையாக வெடித்துள்ளது.
ஈரான் வெளியுறவு அமைச்சரின் இந்த கருத்தை அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கடுமையாக மறுத்துள்ளார். "ஈரான் தரப்பில் இருந்து கசிந்த ஒப்பந்த விவரங்கள் உண்மைக்கு முற்றிலும் புறம்பானவை. நேர்மையாகச் செயல்படத் தெரியாத ஈரானுடன் நல்லெண்ண அடிப்படையில் பேச முடியாது" என்று ட்ரம்ப் விளாசியுள்ளார். மேலும், அமெரிக்கத் துணை அதிபர் ஜே.டி.வென்ஸ்/ம், "ஈரானுக்குப் பணம் எதுவும் உடனடியாக வழங்கப்படாது, எந்த நிதியும் ரிலீஸ் செய்யப்படவில்லை" என்று தெளிவுபடுத்தியுள்ளார். அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகளின் பாதுகாப்பு கவலைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையிலேயே இந்த ஒப்பந்தம் வடிவமைக்கப்பட்டு ள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதே போல செய்திகள் வெளியாகி உலகம் முழுவதும் ஒரு உறுதியற்ற தன்மையை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.
கட்டவிழ்த்து விடப்பட்ட பொய்களை உலகம் நம்ப தயாராக இல்லை என்பதே நிதர்சனமான உண்மை. உலகின் பல்வேறு நாடுகளில் சமாதானம் முயற்சி செய்து வருவதாக சுயதம்பட்டம் அடித்து கொள்ளும் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தற்போதைய நிலையில் பரிதாப நிலை எட்டியுள்ளார் என்பதே யதார்த்தமான நிலையாகும்.
அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பேசுவதன் கருத்து உண்மை மற்றும் பொய் ஆகிய இரண்டு நிலைகளையும் பிரித்து அறிய உலகம் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டது என்பதே உண்மையாகும்.அதே சம்பளம் இந்த இரண்டு நாடுகளும் மோதிக் கொள்ளும் நடைமுறை உலகின் பல்வேறு நாடுகளில் மத்தியில் மிகப் பெரிய அளவில் ஆன பொருளாதார பின்னடைவை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.
நிச்சயமற்ற பொருளாதார தடைகள் நீக்கப்பட்ட வேண்டும் என்று ஈரான் தெளிவாக கோடிட்டுக் காட்டுகிறது. அமெரிக்கா அணு ஆயுத துகள்கள் ஒப்படைக்க வேண்டும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது. ஈரான் எந்தவொரு நிலையிலும் தங்கள் உறுதி செய்து உள்ள தங்கள் கொள்கையில் எந்தவொரு நிலையிலும் சமாதானம் செய்து கொள்ள போவதில்லை என திட்டவட்டமாக அறிவிப்பு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.
இந்த நிலையில் அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய இரண்டு நாடுகளும் இணைந்து போரைத் தொடர்ந்து நடத்த திட்டம் வரும் நிலையில் யார் கூறுவது உண்மை அல்லது பொய் என்பதை களத்தில் ஆய்வு செய்யும் நிலையில் உலகம் தற்போது இல்லை என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த நெருக்கடியின் தாக்கம் உலகின் பல்வேறு நாடுகளில் மத்தியில் இன்னும் பல மாதங்கள் தொடரும் அபாயம் அதிகம் அதிகம் தென்படும் வாய்ப்புகள் அதிகரிக்கும் வகையில் சூழல் மாறியுள்ளது என்பதை மிகவும் கவலைக்குரிய விடயமாகும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்





# இலங்கையை உலகளாவிய ரத்தின மையமாக மாற்றும் நோக்கில் "Gem City Ratnapura 2026" ஆகஸ்டில்







**(இர்ஷாத் ரஹ்மத்துல்லா)**

இலங்கையின் ரத்தின மற்றும் ஆபரணத் துறையை சர்வதேச அரங்கில் மேலும் வலுப்படுத்தி, நாட்டை உலகளாவிய ரத்தின மற்றும் நகை வர்த்தக மையமாக நிலைநிறுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "Gem City Ratnapura 2026" சர்வதேச ரத்தின மற்றும் ஆபரணக் கண்காட்சி, 2026 ஆகஸ்ட் 31 முதல் செப்டம்பர் 2 வரை இரத்தினபுரியில் அமைந்துள்ள Grand Silver Ray Hotel வளாகத்தில் நடைபெறவுள்ளதாக கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பில் உரையாற்றிய அவர், நாட்டின் முக்கிய ஏற்றுமதி துறைகளில் ஒன்றான ரத்தின மற்றும் ஆபரணத் துறையை ஒழுங்குபடுத்தப்பட்ட, போட்டித்திறன் மிக்க மற்றும் நிலையான வளர்ச்சியுடைய துறையாக மாற்றி, இலங்கையின் முன்னணி அந்நியச் செலாவணி ஈட்டும் துறைகளில் ஒன்றாக உயர்த்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் எனக் குறிப்பிட்டார்.

தற்போது ஆண்டுதோறும் சுமார் 300 மில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருவாயை ஈட்டிவரும் இந்தத் துறையின் முழுமையான மதிப்புச் சங்கிலியை (Value Chain) வலுப்படுத்தும் வகையில் பல்வேறு கட்டமைப்பு மற்றும் கொள்கை மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாண்டு கண்காட்சி "Home to the Finest" என்ற கருப்பொருளின் கீழ் நடைபெறவுள்ளது. உலகப் புகழ்பெற்ற சிலோன் நீலக்கல் (Ceylon Blue Sapphire) உள்ளிட்ட அரிய ரத்தினங்களின் தாயகமாக அறியப்படும் இரத்தினபுரியில் இந்த நிகழ்வு நடைபெறுவது சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

மேலும், சர்வதேச ரத்தின மற்றும் ஆபரணக் கண்காட்சிகளின் உலகளாவிய அட்டவணைக்கு ஏற்ப இந்த நிகழ்வு திட்டமிடப்பட்டுள்ளதால், செப்டம்பரில் கிழக்கு ஆசியாவில் நடைபெறும் முக்கிய கண்காட்சிகளில் பங்கேற்கும் சர்வதேச வாங்குபவர்கள், அதற்கு முன்னதாக இலங்கைக்கு வந்து நாட்டின் ரத்தினத் துறையை நேரடியாக அனுபவிக்கும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

2025 ஆம் ஆண்டு நடைபெற்ற கண்காட்சியில் 7,500-க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் மற்றும் 200-க்கும் அதிகமான வெளிநாட்டு கொள்முதல் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

அந்த வெற்றியைத் தொடர்ந்து, இம்முறை மேலும் அதிகமான சர்வதேச பங்கேற்பும் புதிய வர்த்தக வாய்ப்புகளும் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஊடக சந்திப்பில் தேசிய ரத்தின மற்றும் ஆபரண அதிகார சபையின் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி பேராசிரியர் எஸ். பி. சமிந்த, ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க, இலங்கை ரத்தின வியாபாரிகள் மற்றும் சுரங்கத் தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரியந்த வெலிவத்த, தேசிய ரத்தின மற்றும் ஆபரண அதிகாரசபையின் ஏற்றுமதி சேவைகள் மற்றும் ஏற்றுமதி சந்தைப்படுத்தல் பணிப்பாளர் ஜி. டி. அமரசிறி உள்ளிட்ட அரச மற்றும் தனியார் துறை பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# இறைவரிச் சட்டத் திருத்தங்கள் மூலம் பொதுமக்களைச் சிறையிலடைக்க முயற்சி

**பைஸர் முஸ்தபா எச்சரிக்கை**

**( ஐ. ஏ. காதிர் கான் )**

உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் முன் மொழியப்பட்டுள்ள புதிய திருத்தங்கள் "மிகவும் கடுமையானவை" (Draconian) எனவும், முன்னர் சிவில் விவகாரங்களாகக் கருதப்பட்ட நிர்வாகத் தவறுகளை குற்றவியல் குற்றங்களாக மாற்ற அரசாங்கம் முயற்சிப்பதாகவும், பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நிர்வாகத் தவறுகளுக்கு, சிறைத்தண்டனை ஆண்டு வருமான அறிக்கையைச் சமர்ப்பிக்கத் தவறுதல், வரிப்பதிவு செய்யத் தவறுதல் அல்லது ஆணையாளர் நாயகம் முன்னிலையில், முன்னிலையாகத் தவறுதல் போன்ற விடயங்களுக்காக ஆறு மாத சிறைத்தண்டனை மற்றும் நான்கு இலட்சம் ரூபா அபராதம் விதிக்க புதிய திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பெரிய நிறுவனங்களுக்கு இவற்றைக் கையாள தணிக்கையாளர்கள் (Auditors) உள்ளனர். ஆனால், ஒவ்வொரு குடிமகனும் வரி நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படும் சூழலில், இத்தகைய சட்டங்களால் சாதாரண மக்களே அதிகம் பாதிக்கப்படுவார்கள் எனவும் வாதிட்டார். வரி ஏய்ப்புக்கும் சாதாரண நிர்வாகத் தவறுக்கும் வித்தியாசம் இருப்பதாகவும், இத்தகைய சிறு தவறுகளுக்காக ஒருவரை நீதவான் நீதிமன்றத்திற்கு இழுப்பது முறையற்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பு ரீதியான சிக்கல்கள், வரி மேன் முறையீடுகள் நிலுவையில் இருக்கும் போதே, நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர ஆணையாளருக்கு அதிகாரம் வழங்க அரசாங்கம் ஏற்கனவே முயன்றதையும் அவர் நினைவு கூர்ந்தார். அத்தகைய நடவடிக்கை, அரசியலமைப்பிற்கு முரணானது என்றும், அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை மற்றும் மக்கள் தீர்ப்பு அவசியம் என்றும், உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்ததை அவர் சுட்டிக்காட்டினார்.




சிறு வணிகர்கள் மீதான வற் (VAT) வரிச்சுமை வற் வரிப்பிற்கான வரம்பை, மாதத்திற்கு ஐந்து மில்லியன் ஷரூபாவிலிருந்து மூன்று மில்லியன் ரூபாவாகக் குறைக்க அரசாங்கம் எடுத்துள்ள முடிவையும், பைஸர் முஸ்தபா கடுமையாக விமர்சித்தார். வற் வரி இலாபத்தில் அல்லாமல் மொத்த வருமானத்திலேயே (Turnover) கணக்கிடப்படுவதால் இது, சிறிய சில்லறைக் கடை உரிமையாளர்களைப் பெருமளவில் பாதிக்கும் எனவும் அவர் விளக்கினார்.

மொத்த வரிச்சுமை, தற்போது 20.5 விகிதம் வரை அதிகரித்துள்ளதாகத் தெரிவித்த பைஸர் முஸ்தபா, வரிச் சுமைகளைக் குறைப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம், இன்று மக்கள் மீது தாங்க முடியாத சுமைகளை ஏற்றியுள்ளதாகவும் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டு, இந்தத் தண்டனை நடவடிக்கைகளை மறு பரிசீலனை செய்யுமாறும் அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டார்.

## யாழ் ஒஸ்மானியாவில் வரலாற்று சாதனை

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி வரலாற்றில் முதல் முறையாக முஹம்மது ஜவ்ஸி முஹம்மது ஷிபாக் எனும் மாணவர் க.பொ.த. (சா.த) பரீட்சையில் 9 ஏ சித்தியடைந்து பாடசாலைக்கும் யாழ் முஸ்லிம் சமூதாயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். இவரை யாழ் முஸ்லிம் சமூக ஊடக நிர்வாகி கலாபூஷணம் பரீட் இக்பால் பாராட்டி வாழ்த்துகிறார்.

## சிடிசன் மிரர் பிரதேச உற்பத்தி சுட்டெண் போட்டியில் தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு முதலிடம்



**(ஏ.எச். ஹஸ்பர்)**

தேசிய உற்பத்தி திறன் செயலகத்தினால் நடாத்தப்பட்ட "உவைணைநடெ அசைசழச "பிரதேச உற்பத்தி திறன் சுட்டெண் தொடர்பான (2025ம் ஆண்டு) போட்டியில் தம்பலகாமம் பிரதேச செயலகம் மாவட்ட மட்டத்தில் யுயுயு தரத்தில் முதலாம் இடத்தைப் பெற்று சிறப்புப் பெற்றது.

இவ் வெற்றிக்கு முன்னாள் பிரதேச செயலாளரும் தற்போதைய திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருமான (காணி) ஜெ.ஸ்ரீபதியின் சிறந்த வழிகாட்டலும் தலைமைத்துவமும் முக்கிய காரணமாக அமைந்ததுடன், தம்பலகாமம் பிரதேச செயலாளர் க. சதிசேகரன், உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் யோ. பிரதீபா ஆகியோர்கள் கொழும்பு ஹோல்பீஸ் ஹோட்டலில் (16) இடம்பெற்ற விருது வழங்கும் நிகழ்வில் பிரதேச செயலகத்தின் சார்பில் இவ்விருதினைப் பெற்றுக் கொண்டனர். இவ்வெற்றியானது , அலுவலகத்தின் அனைத்து உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பு, ஒத்துழைப்பு மற்றும் சேவைத் திறன் மேம்பாட்டிற்கான கூட்டு முயற்சியின் மகத்தான பலனாகும்.

# ஏத்தாளை வித்தியாலய வரலாற்றில் முதன்முறையாக பாத்திமா சிம்ஹா '9 ஏ' சித்தி பெற்று சாதனை

**( ஐ. ஏ. காதிர் கான் )**

கற்பிட்டி - ஏத்தாளை அரசினர் ரோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தின் பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் மாணவி லாபிர் பாத்திமா சிம்ஹா, சகல பாடங்களிலும் '9 - ஏ' சித்திகளைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

இம்மாணவிக்கு பாடசாலை சமூகம் சார்பாக, வித்தியாலய அதிபர் எம்.ஐ.எம். இம்ரான் கான் தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

இம்முறை இடம் பெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு, கற்பிட்டி - ஏத்தாளை அரசினர் ரோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்திலிருந்து தோற்றிய மாணவர்களில் 90 சத வீதமான மாணவர்கள் சித்தியடைந்து, உயர் தரம் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளதாகவும் அதிபர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.






# மருத்துவத்திலும், மனித நேயத்திலும் முன்னேறிச் செல்லும் சவுதி அரேபியா!

28 நாடுகளைச் சேர்ந்த இணைந்து இரட்டையாகப் பிறந்த குழந்தைகளை அறுவை சிகிச்சை மூலம் பிரித்து ஆரோக்கியமாக வாழ வைத்து சாதனை படைத்துள்ளது சவுதி மருத்துவக்குழு.

உலக மருத்துவத் துறையில் இன்று வேகமாக முன்னேறி வரும் நாடுகளில் சவூதி அரேபியாவும் ஒன்றாகத் திகழ்கிறது.

எண்ணெய் வளத்தை மட்டுமே நம்பியிருந்த நாடாகக் கருதப்பட்ட சவூதி, இன்று மருத்துவம், கல்வி மற்றும் அறிவியல் ஆராய்ச்சிகளில் புதிய சாதனைகளைப் படைத்து வருகிறது.

குறிப்பாக, நவீன மருத்துவமனைகள், அதிநவீன சிகிச்சை முறைகள், செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தின் பயன்பாடு மற்றும் மருத்துவ ஆராய்ச்சிகளில் பெரும் முதலீடுகளை மேற்கொண்டு, உலகத் தரத்தில் தனது இடத்தை உறுதிப்படுத்தியுள்ளது. இதன் காரணமாக உலகின் பல நாடுகளிலிருந்து மருத்துவர்கள் மற்றும் மருத்துவ மாணவர்கள் சவூதியை நோக்கி வரத் தொடங்கியுள்ளனர்.

மனிதநேயத்தையும், அறிவியலையும் இணைத்து முன்னேறும் இந்த வெற்றிப்பாதை, ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது பொருளாதாரத்தில் மட்டுமல்ல மக்களின் ஆரோக்கியத்திலும், நலனிலும் இருக்கிறது என்பதை உலகிற்கு உணர்த்துகிறது.

“மனித உயிரைக் காப்பதே உயர்ந்த சேவை” என்ற நோக்கத்தோடு மருத்துவத் துறையில் சவூதி அரேபியா எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும், எதிர்கால உலகிற்கு ஒரு முன்மாதிரியாக அமைந்து வருகிறது.

அன்மையில் இறைவனின் அருளால் மகிழ்ச்சிக் கண்ணீரும் நன்றியுணர்வும் நிறைந்த, நெகிழ்ச்சியூட்டும் மற்றும் மனதை உருக்கும் ஒரு காட்சி நிறைவேறியது பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த இரட்டையர்களான ஜியானா மற்றும் ஒலிவியாவை வெற்றிகரமாகப் பிரித்தனர். இது, இந்த முன்னோடி மனிதாபிமானத் திட்டத்தின் வரலாற்றில் நடைபெற்ற 72-வது அறுவை சிகிச்சையாகும். சவுதி அரேபிய மனிதநேய சேவைகள் தொடர வாழ்த்துகளும் பாராட்டுகளும்











**இம்ரான் ஜமால்தீன்**
**சமூக சேவையாளர்**

# வாழ்வுரிமை மறுக்கப்படும் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் காரமுனை மக்கள்

**(எஸ்.எம்.எம்.முர்ஷித்)**

75 ஆண்டுகளுக்கும் மேலாக பாரம்பரியமாக விவசாயம் மற்றும் குடியிருப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று வடக்கு (வாகரை) பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட காரமுனை கிராமத்தைச்சேர்ந்த 14 முஸ்லிம் மேட்டுநிலப்பயிர்ச்செய்கையாளர்கள், 14 நாட்களுக்குள் (இம்மாதம் 30ம் திகதிக்குள்) அவர்களின் பூர்வீகக்காணிகளை விட்டு உடனடியாக வெளியேறுமாறு வாகரைப் பிரதேச செயலகம் விடுத்துள்ள உத்தரவு அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

பாதிக்கப்பட்ட பதின்னான்கு நபர்கள் கடந்த 14.06.2026ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு ஓட்டமாவடியில் தனியார் விடுதியில் செய்தியாளர் மாநாடொன்றை நடாத்தினர். அதில் கலந்து கொண்டோர் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்தனர்.

தாங்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த நிலத்தை விட்டு வெளியேறுமாறு விடுக்கப்பட்டுள்ள இவ்வுத்தரவானது, தங்களின் அடிப்படை வாழ்வுரிமையைப்பறிக்கும் ஒரு பாரபட்சமான செயல் என காரமுனை அணைக்கட்டு விவசாய அமைப்பின் தலைவர் வீ.எம்.நபீர் குற்றஞ்சாட்டினார்.

தொடர்ந்து கருத்துத்தெரிவிக்கையில், வாகரைப்பிரதேச செயலாளரினால் ஒப்பமிட்டு காணிகளை விட்டு வெளியேறுமாறு கடிதம் அனுப்பப்பட்டிருப்பதானது காரமுனை மக்களுக்கு செய்யும் அநீதியாகவே கருத வேண்டியுள்ளது

காலங்காலமாக குடியிருந்த எங்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு அரசாங்க அதிகாரிகள் உதவி செய்வதா? இல்லை எங்களைக் கஸ்டத்தில் தள்ளி விடுவதா? எனக்கேள்வியெழுப்புகின்றனர்.


எங்கள் காணிக்கு 75 ஆண்டு கால வரலாற்றுப்பின்னணி உள்ளதாக தெரிவித்த பாதிக்கப்பட்ட விவசாயியான எம்.எம்.எம். நுபைஸ் தொடர்ந்து கருத்துத்தெரிவிக்கையில், “இது எங்களுடைய வாப்பாவுடைய வாப்பா (பாட்டனார்) காலத்திலிருந்தே, அதாவது 1950ம் ஆண்டுக்கு முன்னிருந்தே எம்மவர்களால் துப்புரவு செய்யப்பட்டு, மேட்டு நிலப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்த நிலமாகும். கடந்தகால யுத்தச்சூழ்நிலை காரணமாகப் பல உயிரிழப்புகளையும், பொருளாதார இழப்புகளையும் சந்தித்து, உயிரைத்தப்ப வைத்துக் கொள்வதற்காகவே நாங்கள் தற்காலிகமாக இந்த இடத்தை விட்டு வெளியேறியிருந்தோம்.”

யுத்தம் முடிவுற்றதன் பின்னர் நாங்கள் மீண்டும் குடியேறிய போது எங்களுக்கான உரிமை மறுக்கப்படுகின்றது. எங்களிடமுள்ள பொறுளாதாரத்தை வைத்து மேலதிகமாக கடன்களை வாங்கி சோளான், கச்சான், பயறு போன்ற பயிர்களைச் செய்துள்ள போது திடீரென்று எங்கள் இடங்களை விட்டு வெளியேறு என்று கூறினால் நாங்கள் எங்கு செல்வது எனக்கேள்வியெழுப்பினார்.

எங்கள் மூதாதயருக்கு 1962 மற்றும் 1963ம் ஆண்டுகளில் வயல் காணிக்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் இருந்த போதும், அப்போது இருந்த உதவி அரசாங்க அதிபர் காரியத்தால் அவைகள் திட்டமிட்டு மீண்டும் 1983ம் ஆண்டு காணிக்கான உறுதி வழங்குவதாக மீளப்பெறப்பட்டு இன்றுவரை வழங்கப்படாமல் ஏமாற்றப்பட்டு வருகின்றோம். அது மாத்திரமல்ல, 1963ம் ஆண்டுக்குப் பின்னர் இன்று வரை வாகரை பிரதேச செயலகத்தினால் காரமுனை கிராமத்திலுள்ள ஒரு குடியிருப்பாளருக்குகூட காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படாமல் அம்மக்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

211 மாங்கனி தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள காரமுனை கிராமத்தில், 1950ம் ஆண்டு முதல் 1983ம் ஆண்டு வரை மக்கள் செறிந்து வாழ்ந்தனர். பின்னர் 1990ல் ஏற்பட்ட பயங்கரவாத அசாதாரண சூழ்நிலையால் இடம்பெயர்ந்த நாங்கள் 2008ம் ஆண்டு மீண்டும் தமது சொந்த நிலங்களுக்குத் திரும்பியிருந்தோம் எனத் தெரிவித்தனர்.





### இழுத்தடிக்கப்படும் காணிக்கச்சேரியும், அதிகாரிகளின் அலட்சியமும்

சொந்த நிலங்களுக்குத் திரும்பிய மக்கள், தமக்கான காணி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக 2011ம் ஆண்டு முதன்முதலாகக் காணிக்கச்சேரிக்கு விண்ணப்பித்தனர்.

அதன் பின்னர் 2017ம் ஆண்டும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, இதுவரை மூன்று கட்டங்களாகக் காணிக்கச்சேரி நடத்தப்பட்டுள்ளது.

2011 மற்றும் 2017ம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட காணிக்கச்சேரியின் போது தமக்கு வழங்கப்பட்ட ஆவணங்கள் தற்போது “இரத்துச் செய்யப்பட்டு விட்டதாக” பிரதேச செயலக அதிகாரிகள் கூறுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக 2025ம் ஆண்டு 11ம் மாதம் 13ம் திகதி காரமுனை விவசாய அமைப்பின் தலைவரும் பள்ளிவாசல் தலைவருமான முஹம்மது அஜ்மீர் மற்றும் சில விவசாயிகள் ஒன்றிணைந்து வாகரைப் பிரதேச செயலாளரிடம் கடிதமொன்றை ஒப்படைத்து நியாயம் கோரியுள்ளனர். எனினும், அதற்கும் எவ்விதப்பதிலும் கிடைக்கவில்லை.

### காணி ஆணையாளரின் உத்தரவும் மீறப்பட்ட மனித உரிமைகளும்

பிரதேச செயலாளரின் மௌனத்தைத் தொடர்ந்து, மக்கள் திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண காணி நிர்வாகத்திணைக்களத்தின் காணி ஆணையாளரைச்சந்தித்து முறையிட்டனர்.

இதனை ஆராய்ந்த காணி ஆணையாளர், கடந்த 2025 டிசம்பர் 24ம் திகதி வாகரை பிரதேச செயலாளருக்கு அவசரக் கடிதமொன்றை அனுப்பியிருந்தார். அதில், காரமுனை மக்களுக்கு உடனடியாகக் காணிக்கச்சேரியொன்றை நடத்தி, காணி ஆவணங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு உத்தரவிட்டிருந்தார். அதன் பிரதியொன்று மக்களுக்கும் வழங்கப்பட்டது.

இருப்பினும், காணி ஆணையாளரின் உத்தரவையும் புறந்தள்ளி, வாகரை பிரதேச செயலாளர் காரமுனை மக்களின் விவசாய நிலங்கள், குடியிருப்புகள் மற்றும் மேட்டு நிலக்காணிகளுக்கு எவ்வித ஆதாரமுமில்லை எனக்கூறி, 14 மேட்டுநிலப்பயிர்ச் செய்கையாளர்களை உடனடியாக வெளியேறுமாறு கடிதம் அனுப்பியுள்ளார்.

### தொடரும் அச்சுறுத்தல்களும் மக்களின் கோரிக்கையும்

2013ம் ஆண்டு இப்பகுதியின் சில பகுதிகள் “வாகனேரி ஒதுக்கக்காடு” என வர்த்தமானி (Gezette) மூலம் அடையாளப்படுத்தப்பட்டதையடுத்து, வனவளத் திணைக்களம் (Forest Department) ஒருபுறம் வழக்குத்தொடர, மறுபுறம் பிரதேச செயலகம் வெளியேற்ற உத்தரவு பிறப்பித்து தங்களை நெருக்குவாரத்திற்கு உள்ளாக்குவதாக மக்கள் வேதனைப்படுகின்றனர்.

எனினும், சுற்றாடல் அமைச்சு மற்றும் வனவளத் திணைக்களத்திடமிருந்து தங்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பான சாதகமான கடிதங்கள் கிடைத்துள்ள நிலையிலும், வாகரைப்பிரதேச செயலகத்தின் காணி உத்தியோகத்தர் மனித உரிமை ஆணைக்குழுவில் சாட்சியமளிக்கும் போது, “இது வனப்பகுதி என்பதால் தம்மால் எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாது” எனக்கூறி தட்டிக்கழித்துள்ளார்.

தற்போது பல ரூபாய் முதலீடு செய்து பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள நிலையிலும், இத்திடீர் வெளியேற்ற உத்தரவு அவர்களின் வாழ்வாதாரத்தை முற்றாக முடக்குவதாகவுள்ளது. இதுவொரு தெளிவான மனித உரிமை மீறல் எனவும், ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கெதிராகக் காட்டப்படும் பாரபட்சம் எனவும் தெரிவிக்கும் காரமுனை மக்கள், இவ்விடயம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட மனித உரிமை ஆணைக்குழு, மாவட்ட அரசாங்க அதிபர் (GA), கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் நாட்டின் ஜனாதிபதி ஆகியோருக்கும் பல கோரிக்கைகளை அனுப்பியுள்ளனர்.

தலைமுறை தலைமுறையாக வாழ்ந்த மண்ணில், தங்களின் வாழ்வுரிமையை உறுதிப்படுத்தி, நியாயமானதொரு தீர்வினைப் பெற்றுத்தர அனைத்துத் தரப்பினரும் முன்வர வேண்டுமென காரமுனை கிராம முஸ்லிம்கள் அவசரக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வெளிநாட்டில் தொழில் புரிந்து வருபவர்களின் பிள்ளைகளுக்கு கல்வித் தொகை வழங்கும் நிகழ்வு





(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

வெளிநாட்டில் தொழில் புரிந்து வருபவர்களின் பிள்ளைகளின் கல்விக்கு ஆதரவளிக்கும் வகையில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சார்பில் பொலன்னறுவை மாவட்டத்தைச் சேர்ந்த 47 பிள்ளை களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் நிகழ்வு பிரதி அமைச்சர் ரீ.பீ.சரத் தலைமையில் பொலன்ன றுவையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன் கீழ் பொலன்னறுவை மாவட்டத்தில் 2354 பிள்ளைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட வுள்ளதுடன் இதன் முதற் கட்டமாக 47 பிள்ளைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. கல்வி உதவித் தொகை வழங்குவதற்காக 70 மில்லியன் ரூபாய்க்கு மேல் செலவிடப் படவுள்ளது.

இந்நிகழ்வின் போது வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அதிகாரிகள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மாத்தளை சாஹிராவில் முதலுதவி செயலமர்வு

(மாத்தளை எம்.சதூர்தீன்)



மாத்தளை சாஹிரா தேசிய பாடசாலையின் மாணவர் தலைவர்களுக்கான முதலுதவி தொடர்பான பயிற்சி செயலமர்வொன்று நேற்று முன் தினம் பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது இந்நிகழ்வில் கலந்து கொண்ட மாத்தளை மாவட்ட வைத்திய சாலையின் வைத்தியர்களான நஸ்மி அஹமட்,அமீர் ஆகியோரினால் முதலுதவி தொடர்பான விசேட பயிற்சி செயலமர்வு மாணவர்களுக்கு நடத்தப்பட்டது. இதில் மேற்படி பாடசாலையின் அதிபர் எ.எல்.எம்.அஸிஸ் உப அதிபர் பைசல் மற்றும் ஆசிரியர் பலரும் கலந்து கொண்டனர்.

# அஸாம் 9 ஏ,அஸ்பாக் 8 ஏ.பீ சித்தி பெற்று சாய்ந்தமருது அல்ஹிலாலுக்கு பெருமை சேர்ப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை வலய சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலய மாணவன் அப்துல் சித்தீக் முஹம்மட் அஸாம் 2025ஆம் ஆண்டுக்கான க.பொ.த (சா/த) பரீட்சையில் 9 ஏ பெறு பேறுகளைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை தேடிக் கொடுத்துள்ளதாக பாடசாலையின் அதிபர் கே.எல்.ஏ ஜௌபர் தெரிவித்தார்.

பாடசாலையில் (2024) க.பொ.த சாதாரண தரம் ஆரம்பிக்கப்பட்டு, இரண்டாவது தடவையான (2025) இம்முறை இப்பாடசாலையில் இருந்து க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய, மாணவர்களில் ஒருவர் 9 ஏ சித்தி பெற்றும் எப்.ஏ. அஸ்பாக் என்ற மாணவன் 8ஏ, பி சித்தி பெற்றும் சாதாரண தரம் ஆரம்பிக்கப்பட்ட குறுகிய காலத்திலேயே பாடசாலைக்கு பெருமை ஏற்படுத்தும் வண்ணம் இச்சாதனையை நிலை நாட்டியுள்ளனர்.

அதிபர் கே.எல்.ஏ. ஜௌபர் மற்றும் பகுதித் தலைவர் ஏ.எல்.எம். இர்ஷாத், உதவி பகுதித் தலைவர் அலிரஜாய் மற்றும் இந்த சாதனையை நிலை நாட்ட மேலதிக வகுப்புக்கள் நடைபெறுவதற்கு காரண கர்த்தாக்க ளாக இருந்தவர்களான பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழுவின் செயலாளர் பொறியியலாளர் எம்.சி. கமால் நிஷாத் மற்றும் பாடசாலை யின் பழைய மாணவர் சங்க செயலாளர் எம்.ஐ. சர்ஜூன் மற்றும் பாடசாலையின் விளையாட்டு துறைக்குப் பொறுப்பான ஆசிரியர் எம்.எஸ்.எம். நுஸ்கி மற்றும் பாடசாலை இடைநிலை கல்விக்குப் பொறுப்பான பிரதியதிபர் ஏ.பி.



ரோஷன் டிப்ராஸ், பிரதியதிபர் எம்.எச். லாபிர் ஆகியோரின் அயராத முயற்சியாலும் கற்பித்த ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு காரணமாகவும் 09 ஏ சித்தி உட்பட ஏனைய உயர்தரம் கற்பதற்கும் தகுதியான பெறுபேற்றை யும் இப்பாடசாலை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரட்டைச் சகோதரிகள் '9 ஏ' சித்திகளைப் பெற்று சாதனை

( ஐ. ஏ. காதிர் கான் )

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில், பொலன்னறுவையைச் சேர்ந்த இரட்டைச் சகோதரிகள் அனைத்துப் பாடங்களிலும் 'ஏ' சித்திகளைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

பொலன்னறுவை அல் - ஹிலால் மத்திய கல்லூரியின் பிரதி அதிபர் ரஸாக்கின் புதல்விகளான பாத்திமா ரஹ்னா மற்றும் பாத்திமா மின்ஹா ஆகிய இரட்டைச் சகோதரிகளே இவ்வாறு பரீட்சை எழுதிய அனைத்துப் பாடங்களிலும் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று, தாம் கற்ற பொலன்னறுவை அல் - ஹிலால் மத்திய கல்லூ ரிக்கும், மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த, அதுவும் இரட்டைச் சகோதரிகள் இருவருமே இப்பரீட்சையில் முழுமையான உயர் சித்திகளைப் பெற்றுள்ள இந்த அரிய சாதனை, தற்பொழுது பிராந்திய மக்கள் மற்றும் கல்விச் சமூகத்தினர் மத்தியில் பெரும் நெகிழ்ச்சியையும் பாராட்டுக்களை யும் குவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# ஏத்தாளை அரசினர் ரோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலய வரலாற்றில் முதலாவது 9 ஏ சித்தி

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி ஏத்தாளை அரசினர் ரோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தின் பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் லாபீர் பாத்திமா சிம்ஹா என்ற மாணவி சகல பாடங்களிலும் 9 ஏ சித்தி பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார் அம் மாணவிக்கு பாடசாலை சமூகம் சார்பாக அதிபர் எம் ஐ எம் இம்ரான் கான் தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

இம்முறை இடம் பெற்ற கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்கு கற்பிட்டி ஏத்தாளை அரசினர் ரோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தில் இருந்து தோற்றிய மாணவர்களில் 90 சதவீதமான மாணவர்கள் சித்தியடைந்து உயர் தரம் கற்பதற்கு தகுதி பெற்றுள்ளதாகவும் அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.



# க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு "அதிபரின் உபசரணை" என்ற பெயரில் வரவேற்பு



(எம்.யூ.எம்.சனூன்)

ஏத்தாளை அரசினர் ரோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தில் க.பொ.த. (சாஃத) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் "அதிபரின் உபசரணை" என்ற பெயரில் திங்கட்கிழமை (22) வரவேற்கப் பட்டனர்.


இந்நிகழ்வில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் பாடசாலை நலன்விரும்பிகள் என ஏராளமானோர் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது மாணவர்கள் பதக்கம் அணிவித்தும், சான்றிதழ்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டதோடு, ஆசிரியர்கள் மலர்மாலை அணிவித்து பாராட்டப்பட்டனர்.

அதிபர் எம்.ஐ.எம். இம்ரான்கான், சகலருக்கும் தமது நன்றி கலந்த பாராட்டுக்களை இதன் போது தெரிவித்தார். இந்நிகழ்வின் பதக்கங்களுக்கான அனுசரனை யினை விஸ்டம் அகடமியும், சான்றிதழ்களுக்கான அனுசரணையை கல்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் எச்.எம். சிபானும் வழங்கி வைத்ததமை குறிப்பிடத் தக்கது.

# வெற்றிகரமாக நடைபெற்ற இத்திஹாத் அஹ்லிஸ் ஸுன்னாவின் இரண்டு நாள் த:வா விஜயம்





(பேருவலை பீ எம் முக்தார்)

கொழும்பு இத்திஹாத் அஹ்லிஸ் ஸுன்னாவின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்டத்தில் இரண்டு நாள் தஃவா பிரச்சார நிகழ்வு வெற்றிகரமாக நிறைவு பெற்றது. கடந்த 20, 21சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் கிண்ணியா, புல்மோட்டை நகரங்களில் இச்சங்கத்தின் உப தலைவர் அல்ஹாஜ் ஸிக்பி இஸ்மாயில் தலைமையில் நடைபெற்றது.

இதில் கிண்ணியா மாநகரில் யுனைட்டட் திருமண மண்டபத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட அரபுக் கல்லூரி உயர் வகுப்பு மாணவர்கள், உஸ்தாத்மார்கள், மௌலவிமார்கள் கலந்து சிறப்பித்தனர்.

"அத்தீன்" ஹதீஸ் ஜிப்ரீல் (அலை) விளக்கம் என்ற கருப்பொருளில் நடைபெற்ற கருத்தரங்கில் விசேட வளவாளர்களாக கொழும்பு அஜ்வாத் அல் பாஸி அரபுக் கல்லூரி அதிபர் அல் உஸ்தாத் அஹ்மத் ஸூபி (மஹ்ழரி) ஸஹாபாக்களின் கொள்கை கோட்பாடுகள் என்ற தலைப்பிலும், மதவாக்குளம் ஷரபிய்யா அரபுக் கல்லூரி அதிபர் அல் உஸ்தாத் அஸ்மிகான் (முஅய்யிதி) உள்ளத்தை சீர்படுத்தும் தரீக்கா, மத்ஹப் இல்லாவிட்டால் இஸ்லாம் இல்லை ஆகிய தலைப்பிலும் உரையாற்றினர்.

இறுதியில் கலந்து கொண்டவர்க ளுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்படது.

அன்றிரவு புல்மோட்டை முஹியித்தீன் ஜும்ஆ பள்ளிவாயலில் விஷேட பயான் நிகழ்வு இஷா தொழுகையின் பின் நடைபெற்றது.

இதில் ஆண்கள், பெண்கள் உட்பட பெருந் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

ஞாயிற்றுக்கிழமை காலை மிஸ்பாஹுல் ஹுதா ஆண்கள் அரபுக் கல்லூரி விஜயமும், 9 மணி முதல் 12 மணி வரை தாருல் ஹுதா பெண்கள் அரபுக் கல்லூரியில் கல்லூரி மாணவிகளுக்காகவும், ஊரிலுள்ள பெண் ஆலிமாக்களுக் கான செயலமவர்வும் நடை பெற்றது. இதற்கான பூரண அனுசரணையை கொழும்பு இத்திஹா அஹ்லிஸ் ஸ/ன்னா வழங்கியது குறிப்பிடத்தக்கது.

அரபுக் கல்லூரி மாணவர்களுடைய கல்வி மேம்பாட்டிற்காக இத்திஹாத் அஹ்லிஸ் ஸுன்னா பல கருத்தரங்குகளை பல வருடங்களாக ஏற்பாடு செய்து வருகின்றது. இது எட்டாவது மற்றும் ஒன்பதாவது கருத்தரங்காகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# கிண்ணியா அப்துல் மஜீது வித்தியாலய மாணவன் ஹிலாலி அஹமட் 9 ஏ சித்தி

(எம்.ஏ.முகமட்)

2025ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறு பேறுகளின்படி, கிண்ணியா அப்துல் மஜீது வித்தியாலய மாண வன் அனஸ் ஹிலாலி அஹமட் 9 ஏ' பெறுபேறு பெற்று சித்தியடைந்துள்ளார்.

இவர் இப்பாடசாலைக்கு சிறந்த பேறுபேற்றை பெற்றுக் கொடுத்து பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

இவர்,அப்துல் ஹசன் அனஸ் மற்றும் அப்துல் லெத்தீப் நபீலா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வராவார்.



# இந்திய முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்ய முன்வர வேண்டும்

## திருச்சி விமான நிலையத்தில் ரவூப் ஹக்கீம்




திருச்சி
எம். கே. ஷாகுல் ஹமீது

**இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு தமிழ்நாடு உள்ளிட்ட தென்பிராந்திய மாநிலங்களில் உள்ள முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்ய முன்வர வேண்டும் திருச்சி விமான நிலையத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம். பி. பேட்டி**

தமிழக அரசியல் மாற்றம் ஜனநாயகத்திற்கு நல்லது தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி சிறப்பாக இருக்கும் நம்பிக்கை இருக்கிறது. இந்தியா யூனியன் முஸ்லிம் லீக் முதன்முறையாக அமைச்சரவையில் பங்கேற்ற அமைச்சருக்கு கொழும்பில் பாராட்டு விழா நடத்தப்படும்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு தமிழ்நாடு உள்ளிட்ட தென்பிராந்திய மாநிலங்களில் உள்ள முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்ய முன்வர வேண்டும் திருச்சி விமான நிலையத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

திருச்சி விமான நிலையத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், கண்டி நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் 18.06.2026 வியாழக்கிழமை வருகை தந்தார். அவரை திருச்சி அய்மான் மகளிர் கலை அறிவியல் கல்லூரி தாளாளர் மற்றும் செயலாளர் ஹபிபுல்லாஹ், மூத்த ஊடகவியலாளர் திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது ஆகியோர் சால்வை அணிவித்தார்கள்.

பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், கண்டி



நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம்செய்தியாளர்களை சந்தித்தார் அப்போது அவர் கூறியதாவது :

**கேள்வி :** வெளிநாடுகளில் இலங்கையில் தான் முதன் முதலில் பாடகர் நாகூர் அனிபாவின் நூறாண்டு விழா சிறப்பாக நடத்தப்பட்டது. அதேபோல் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் இடம் பெற்றுள்ள அமைச்சருக்கு பாராட்டு விழா எதுவும் நடத்தப்படுமா

**பதில் :** இந்தியா யூனியன் முஸ்லிம் லீக்கில் முதன்முறையாக அமைச்சரவையில் பங்கேற்ற அமைச்சர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்ற தொடர்பாக கட்சி ரீதியாக ஆலோசித்து முடிவு எடுக்கப்படும், கண்டிப்பாக பாராட்டு விழா குறித்து விரைவில் தேதியை முடிவு செய்யப்படும்.

**கேள்வி :** தமிழகத்தில் தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி செயல்பாடுகள் பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** தமிழகத்தில் புதிய அமைச்சரவை பதவியேற்றுள்ளது. இதற்கு முன்பு ஆட்சி அதிகாரத்தில் இல்லாத ஒரு வித்தியாசமான அணியினர், எதிர்பாராத வகையில் ஒரு பெரிய வெற்றியைப் பெற்று ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். ஜனநாயகத்தில் இதுபோன்ற இடைக்கால மாற்றங்கள் வருவது நல்லது. முந்தைய ஆட்சியாளர்கள் தமிழகத்தைக் கொண்டு நிறுத்திய இடத்திலிருந்து, இந்த புதிய ஆட்சியாளர்கள் மாநிலத்தை இன்னும் அடுத்தகட்ட முன்னேற்றப் பாதைக்கு எடுத்துச் செல்வார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். தமிழக வெற்றிக் கழகம் நல்ல முறையில் சிறப்பாக இருக்கும்.

**கேள்வி :** இருநாட்டு மீனவர்கள் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு என்ன

**பதில் :** மீனவர் பிரச்சினை என்பது இரு தரப்பிலும் மனிதாபிமான ரீதியாக அணுகப்பட வேண்டிய ஒரு விஷயம். சட்ட மீறல்கள் என்ற விவகாரத்தையும் தாண்டி, மக்களின் வாழ்வாதாரத்தை இதில் கவனத்தில் கொள்ள வேண்டும். இரு தரப்பிலும் சில விட்டுக் கொடுப்புகளோடு இதற்கு சுமுக முடிவு காணப்பட வேண்டும் என்பதே எங்களின் விருப்பம். இது தொடர்பாக தமிழ்நாடு மாநில அரசும், மத்திய அரசும், இலங்கையின் மத்திய அரசு மற்றும் யாழ் குடாநாட்டு மீனவர் சமூகத்தோடு இணைந்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும். எங்களது மீன்பிடித் துறை அமைச்சர் ஏற்கனவே தமிழகத்திற்கு வந்து, இங்குள்ள அரசியல் தலைமைகளுடனும் மத்திய அரசுடனும் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார். இது ராஜதந்திர மட்டத்தில் பேசி தீர்க்கப்பட வேண்டிய விவகாரம் என்பதால், நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்து இப்போது கருத்து கூறுவது கடினம்.

இலங்கை மக்களின் தற்போதைய வாழ்வாதாரம் மற்றும் விலைவாசி உயர்வு குறித்துப் பேசுகையில், தற்போதைக்கு விலைவாசி விவகாரத்தில் பெரிய முன்னேற்றம் எதுவும் இல்லை. நாளுக்கு நாள் விலைவாசி ஏறிக்கொண்டுதான் செல்கிறது.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைக்கு இன்னும் 60 நாட்கள் எஞ்சியுள்ளன. அது சுமுகமாக முடிந்தாலும், அதன் சாதகமான பலன்களை அனுபவிக்க இன்னும் 2 முதல் 3 மாதங்கள் ஆகும் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். எனவே, உலகளாவிய இந்த யுத்த சூழ்நிலைகளால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சுமைகளையும், ஏற்கனவே இலங்கையில் உள்ள பொருளாதார வீழ்ச்சியையும் சேர்த்து சமாளிப்பது என்பது தற்போதைய அரசுக்கு மிக சவாலான காரியமாக உருவெடுத்துள்ளது என்றார்.

திமுக அரசாக இருந்தாலும் சரி, தமிழக வெற்றிக் கழகமாக இருந்தாலும் சரி, இரு நாடுகளுக்கு இடையிலான முரண்பாடுகளைத் தீர்க்க மத்திய அரசுடன் இணைந்துதான் செயல்பட வேண்டும்.

சர்வதேச நாணய மாற்று விகிதத்தில் இலங்கை நாணயம் சந்தித்துள்ள வீழ்ச்சி, இறக்குமதியாளர்களைப் பெரிய அளவில் பாதித்துள்ளதது. கச்சா எண்ணெய், பயிர் உரம் போன்ற அத்தியாவசியத் தேவைகளுக்கான இறக்குமதி இதனால் முடங்கியுள்ளது.

மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையின்படி கடன்களை மறுசீரமைப்பு செய்ய எங்களுக்கு இரண்டு வருட கால அவகாசம் அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், கச்சா எண்ணெய் மற்றும் இதர அத்தியாவசிய இறக்குமதிகளுக்காக எங்களின் அந்நியச் செலாவணி இருப்பு வேகமாக கரைந்து வருகிறது. IMF எதிர்பார்த்த அளவை விட கையிருப்பு குறைந்து வருவது நாட்டுக்கு மேலும் ஒரு கடன் சுமையை ஏற்படுத்தலாம் என்ற அச்சம் உள்ளது.

இந்தக் கடன் சுமையைச் சமாளிப்பது எப்படி என்ற கேள்விக்கு பதிலளித்த அவர்: - பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க நாம் ஏற்றுமதிகளை அதிகரிக்க வேண்டும் அல்லது வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க வேண்டும். இந்த இரண்டு விஷயங்களிலும் தற்போதைய இலங்கை அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. குறிப்பாக, இந்தியாவின் தமிழ்நாடு உள்ளிட்ட தென்பிராந்திய மாநிலங்களில் உள்ள முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்ய முன்வர வேண்டும். அதற்கான தாராளமான ஊக்கத் தொகைகளையும், சாதகமான சூழலையும் ஏற்படுத்தித் தர இலங்கை அரசு தயாராக இருக்கிறது. இதனை நாங்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறோம்.

**கேள்வி :** இலங்கை இந்தியா இடையே உறவுகள் எப்படி இருக்கிறது?

**பதில் :** இலங்கையில் பொருளாதார சரிவு ஏற்பட்டது எங்களுக்கு இந்தியா பெரும் அளவில் உதவி செய்ததது. ரூ. 4000 பில்லியன் டாலர்கள் உதவி செய்யதை மறக்க முடியாது. எங்கள் உறவு தொப்பில்க்குடி உறவுகள் ஆகும். எப்போது இந்தியா எங்களுக்கும் நெருங்கி உறவுகளுவோடு தான் இருக்கிறோம்.

மீனவர் பிரச்சினைகள் இரு தரப்பிலும் மனிதாபிமான அடிப்படையில் அணுக வேண்டியது அவசியம், மனிதாபிமானத்தின் அடிப்படையில் இரு தரப்பில் விட்டுக் கொடுத்தவுடன் இந்த விஷயத்தை தீர்க்கப்பட வேண்டும், இது தொடர்பாக மத்திய மாநில அரசுகள் இலங்கை அரசிடம் யாழ்குடா மீனவ சமூகத்தினரிடமும் தமிழக மீனவரிடமும் பேசி சமூகமான நிலையை ஏற்படுத்த முயலவேண்டும்.

விலைவாசி விவகாரத்தில் எந்த முன்னேற்றமும் இல்லை நாளுக்குநாள் ஏறிக்கொண்டு செல்கிறது, ஈரான் அமெரிக்கா இடையே மோதல் முடிவுக்கு வந்தாலும் நிலைமை சீராக இரண்டு மூன்று மாதங்கள் ஆகும் என ஆய்வாளர்கள் சொல்கிறார்கள், யுத்தத்தினால் ஏற்பட்ட சுமை மற்றும் பொருளாதார வீழ்ச்சியிலிருந்தும் மீண்டு வருவது ஒரு சவாலான விஷயம் தமிழக மீனவர்களின் படகுகளை விடுவிப்பது தொடர்பாக, வட பிராந்தியத்தின் மீனவர் சமுதாயம் நெகிழ்ச்சி கோப்புடன் கையாள்வதை அரசு அவர்களிடம் பேசிக்கொண்டு இருக்கிறது இலங்கை மீன்வளத் துறை அமைச்சர், மத்திய மாநில அரசிடம் பேச்சுவார்த்தை நடத்துகிறது ராஜதந்திரம் மட்டத்தில் இதற்கான முடிவுகள் இயற்றப்படுவது தான் சிறந்தது, சட்டரீதியாக நீதிமன்றத்தில் உள்ள விவகாரங்கள் பற்றி பேச முடியாது. திமுகவாக இருந்தாலும் சரி தமிழை வெற்றி கழக இருந்தாலும் சரி இரண்டு நாடுகளிடையே உள்ள பிரச்சனைகளை தீர்ப்பதற்கு மத்திய அரசுடன் பேசி தான் தீர்வு காண வேண்டும், இரு அரசுகளும் இலங்கை அரசுடன் பேசி தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் அதற்கு ஒத்துழைப்பு தர அனைவரும் தயாராக இருக்கிறார்கள் இவ்வாறு அவர் கூறினார்.

# கோவிட் காலத்தில் தகனம் செய்யப்பட்டவரின் விபரங்களை வெளியிடுமாறு உதுமாலெவ்வை எம்.பீ கோரிக்கை

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஆலோசனைக் கூட்டம் சென்ற வாரம் அமைச்சர் பேராசிரியர் ஏ.எச்.எம்.எச். அபேயரத்ன தலைமையில் பாராளுமன்ற கட்டிடத்தில் நடைபெற்றது.
இக்கூட்டத்தில் உரையாற்றிய அம்பாறை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலப்பை, கோவிட்-19 காரணமாக இறந்து தகனம் செய்யப்பட்ட நபர்களின் பெயர் விபரங்களை தெரிவிக்குமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் றவூப் ஹக்கீம் எம்.பி சுகாதார அமைச்சரிடம் வாய்மூல விடைக்கான கேள்வியினை கேட்டிருந்தார். சுகாதார அமைச்சர் இதற்கான பதில் தெரிவிக்கவில்லை.
இதன்பின் சுகாதார அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் கொவிட்-19 காலப்பகுதியில் இறந்து தகனம் செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்களை அறிவிக்குமாறு உதுமாலெப்பை முன்மொழிவு சமர்ப்பித்தர். முன்மொழிவுக்கு சுகாதார அமைச்சின் செயலாளர் சுகாதார அமைச்சில் கோவிட்-19 காலப்பகுதியில் இறந்து தகனம் செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் இல்லை எனவும் கோவிட்-19 காலப்பகுதியில் இறந்து தகனம் செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்களை பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் பெறுமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் எழுத்து மூலம் அறிவித்திருந்தார். இதன்படியே பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது.
வழங்கப்பட்ட முன்மொழிவுக்கு பதிவாளர் நாயகத்தினால் எழுத்து மூலம் அனுப்பப்பட்ட பதில் அறிக்கையில் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் புள்ளியிடும் பிரிவானது இலங்கையில் பதிவு செய்யப்பட்ட மரணங்களின் அடிப்படையில் மரணத்திற்கான அடிக்கோடிட்ட காரணம், என்ற முறையை பயன்படுத்தி சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு வழிமுறையின் படி மரணத்திற்கான காரணத்தை குறியிடுகிறது.
இவ்வாறு குறியிடப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட மாவட்டம் மற்றும் பாலினத்தின்படி காரண வாரியாக மரணங்களின் எண்ணிக்கை குறித்து தரவுகள் வழங்கப்பட்டுள்ளது.
அதன்படி சர்வதேச குறியீட்டு முறையின் படி கோவிட்-19 காரணமாக 2021ல் பதிவு செய்யப்பட்ட இறப்புக்களின் எண்ணிக்கை மாவட்டம் மற்றும் பாலின வாரியான தகவல்களை பதிவாளர் நாயக திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது. கொவிட் - 19 காலகட்டத்தில் ஆட்சியில் இருந்தவர்களால் இலங்கை முஸ்லிம்கள் அவர்களுக்கு



தேர்தலில் வாக்களிக்கவில்லை என்பதற்காகவே குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்படுவதற்கு பதிலாக வலுக்கட்டாயமாக எரிக்கப்பட்டது.
எனவே, கொவிட் - 19 காலகட்டத்தில் இறந்து எரிக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்களை பிரதேச செயலகப் பிரிவு ஊடாக தகவல்களைப் பெற்று வழங்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன் என பாராளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை கோரிக்கை விடுத்தார்.
இந்த விடயமாக அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி அமைச்சின் செயலாளரும், பதிவாளர் நாயகமும் கோவிட்-19 இனால் தகனம் செய்யப்பட்டவர் களின் பெயர் விபரங்களை பிரதேச செயலக ரீதியில் பெறுவதற்கு காலம் எடுக்கும் என தெரிவித்தனர். இது தொடர்பாக கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை, காலம் எடுத்தாலும் கொவிட்-19 காலப்பகுதியில் மரணித்து தகனம் செய்யப்பட்டவர் களின் பெயர், முகவரி போன்ற விபரங்களை பொது நிருவாக அமைச்சு வெளியிட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

# மினுவாங்கொடையில் தேசிய முஹர்ரம் இஸ்லாமிய புத்தாண்டு நிகழ்ச்சி







**( ஐ. ஏ. காதிர் கான் )**

முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளரும், மினுவாங்கொடை ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகத் தினரும் இணைந்து, இம்முறை தேசிய முஹர்ரம் இஸ்லாமியப் புத்தாண்டு (ஹிஜ்ரி - 2026/1448) நிகழ்வை, மினுவாங்கொடை டவுன் ஜும்ஆப் பள்ளிவாசலில்(17) ஏற்பாடு செய்திருந்தனர்.
நிகழ்வில், சமய கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் அஷ்ஷேக் முனீர் முழஃப்பர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு "முஹர்ரம் இஸ்லாமிய புத்தாண்டு" பற்றி சிறப்புரை நிகழ்த்தினார்.
முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அல்ஹாஜ் எம். எஸ்.எம். நவாஸ், கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டு இங்கு சிறப்புரை வழங்கியதுடன், கௌரவ அதிதிகளாகவும், சிறப்பு அதிதிகளாகவும் நிகழ்வில் பலர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கற்பிட்டியில் இடம்பெற்ற ஒருங்கிணைப்பு குழு கூட்டம்





**(எம்.எச்.எம்.சியாஜ்)**

கற்பிட்டி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கற்பிட்டி பிரதேச செயலாளர் பீ.ஜீ எஸ் என் பிரியதர்ஷினியின் வழிகாட்டலின் கீழ், கற்பிட்டி பிரதேச ஒருங்கிணை ப்புக் குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஜே. எம்.பைசல் தலைமையில் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கூட்ட மண்டபத்தில் செவ்வாய்க் கிழமை (16) நடைபெற்றது.
இதில் புத்தளம் மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் என்.டி. எம்.தாஹீர், கற்பிட்டி பிரதேச சபையின் தவிசாளர் எ.எஸ்.எம்.றிகாஸ் மற்றும் கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர்கள், ஏனைய பல அரச நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரச அதிகாரிகள் , பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கிராம உத்தியோகத்தர்கள் , அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# மாத்தளை மாவட்ட அஹதிய்யா மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி செயலமர்வு





**(எம். சதூர்தீன்)**

மத்திய மாகாண கலாச்சார திணைக்களம் மற்றும் மாத்தளை பிரதேச செயலகம் இணைந்து ஏற்பாடு செய்த மாத்தளை மாவட்டத்தில் உள்ள அஹதியா பாடசாலை மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி செயல மர்வு மாத்தளை சாஹிரா தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.
மாத்தளை,வரகாமுர,உக்குவல, நிககொள்ள உட்பட ஐந்து அஹதியா பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் ஆசிரியர்கள் என 85 பேர் இச்செயலமர்வில் கலந்து கொண்டனர்.
இந்நிகழ்வில் மாத்தளை பிரதேச செயலகத்தில் கடமையாற்றி வரும் உளவலத்துறை அதிகாரி ராசித் அப்துல்லா வளவாளராகவும், பிரதேச காரியலய கலாச்சார உத்தியோகத்தர்கள், மாத்தளை மாவட்ட அஹதியா பாடசாலை களின் சம்மேளனத்தின் செயலாளரும், சாஹிரா பாடசாலையின் உப அதிபருமான பைசல் நளீமி என பலரும் கலந்து கொண்டனர்.

# கல்முனையில் சர்வதேச சூழல் தினம் அனுஷ்டிப்பு





**(பாறுக் ஷிஹான்)**

சர்வதேச சூழல் தினமான ஜூன் -05 தினை அனுஷ்டிக்கும் முகமாக கல்முனை அஸ்-ஸஹுறா வித்தியாலய அதிபர் எம்.எச்.எஸ். ஆர். மஜிதிய்யாவினால் பல்வேறுபட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டி ருந்தன.
அந்த வகையில் முதலில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு பாடசாலையில் சிரமதான நிகழ்வுகள் முதலில் இடம் பெற்றது.
அதனை தொடர்ந்து அப்பாடசாலை அதிபர் தலைமையில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் அவர் பல்வேறு சூழல் சார் கருத்துக்களை வழங்கினார்.
இதன் போது இயற்கை ஒரு மடல் எனும் தொனிப்பொருளில் பிளாஸ்டிக் மாசுபாட்டை முடிவுக்கு கொண்டு வருதல் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகள் அடங்கிய விடயங்களை மாணவர்களின் சுற்றுச்சூழல் தொடர்பான ஆற்றுகைகள் ஊடாக இடம்பெற்றன.நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்கள் எதிர் காலத்தில் பிளாஸ்டிக் பாவனையை இழிவாக்குவதில் தம்மால் இயன்ற பங்களிப்பை வழங்க உறுதி பூண்டுமிருந்தனர்.
இந்நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர் ஆசிரியர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.
இதன் பின்னர் இரண்டாம் கட்ட நிகழ்வாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான விழிப்புணர்வுடன் மரம் நடுகை நிகழ்வும் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றதுடன் மாணவர்கள் ஆசிரியர்கள் சுற்றுச்சூழலை பாதுகாக்க உறுதி மொழியும் எடுத்துக் கொண்டனர்.
இன்று உலக சுற்றுச்சூழல் தினமாகும். 1974ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோரு ஆண்டும் ஜூன் மாதம் 5ஆம் தேதி உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினம் அனுஸ்டிக்கப் பட்டு வருகின்றன.
உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு நாட்டின் பல பாகங்களிலும் சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

# புத்தக மீளாய்வுக் குழுவுக்கு மொழிபெயர்ப்பு குர்ஆனைத் தடுக்க எந்த அதிகாரமும் இல்லை

## முன்னாள் முஸ்லிம் கலாசார திணைக்களப் பணிப்பாளர் இப்ராஹிம் அன்சார்

தொகுப்பு: எம்.எஸ்.எம்.ஸாகிர்

**அல்குர்ஆன் மொழிபெயர்ப்புகள் ஏன் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன என்பது சம்பந்தமான விடயங்களை முஸ்லிம் கலாசார திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் அல்ஹாஜ் இப்ராஹிம் அன்சார் சொன்ன விடயங்களை கேள்வி பதில்களாக இன்றைய உதயம் பத்திரிகையில் தொகுத்து தருகின்றோம்.**

தற்போது பிரச்சினையில் இருக்கும் இந்த அல்குர்ஆன் மொழிபெயர்ப்புகள் அந்த நாட்களிலே எமது நாட்டில் பாவனையில் இருந்தவை. கிட்டத்தட்ட முப்பது நாற்பது வருடங்களாக சவூதி அரேபியாவில் உள்ள கிங் பஹத் நிறுவனத்தில் அச்சடிக்கப்பட்டு இலங்கைக்கு தமிழ் மொழியில் மட்டுமல்ல, உலகில் உள்ள அனைத்து மொழிகளிலும் குர்ஆன் மொழிபெயர்க்கப்பட்டு அது அங்கு அச்சடிக்கப்பட்டிருக்கிறது. இதுவே சவூதி அரசாங்கம் அந்தந்த நாட்டு ஹஜ் யாத்திரிகர்களுக்கு இப்போதும் அந்தந்த நாட்டு மொழி பெயர்ப்புகளை பரிசாக வழங்கி வருகிறது.

**கேள்வி:** இந்தப் புத்தக மீளாய்வு குழுவை அமைத்து, அவர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கியது யார்?
**பதில்:** இது ஏ.பி. அஷ்ரப் அவர்கள் பணிப்பாளராக இருந்த நேரத்தில் அவர்களை நியமித்தார். 2021 ஏப்ரல் மாதத்தில் அவரால்தான் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**கேள்வி:** இந்த மீளாய்வுக்குழு முழுமையாக இயங்கியது உங்களுக்கு கீழ்தானே?
**பதில்:** உண்மையில் நான் பதவியேற்ற போது நிறையப் புத்தகங்கள் இறக்குமதி அனுமதி கொடுக்கப்படாமல் நிலுவையில் இருந்தன. காரணம் இந்தப் புத்தக மீளாய்வு குழு கூட்டங்களைக் கூடி இருக்கவில்லை. கூட்டங்களை கூடி அனுமதி கொடுக்கவில்லை. அதனால் நான் உடனடியாக ஒரு கூட்டமொன்றைக் கூட்டுவதற்காக அவர்களுக்கு தனித்தனியாக கடிதம் மூலம் அழைப்பிதழ் அனுப்பினேன். எனது காலத்தில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா, ஷரீஆ கவுன்சில், சூரா கவுன்சில், சுப்ரீம் கவுன்சில் ஒப் தரீக்கா என்ற அந்த 4 சமய அமைப்புகளில் உள்ளவர்களும் இந்த புத்தக மீளாய்வுக் குழுவில் இருக்கின்றார்கள் என்று எனது திணைக்கள அதிகாரிகள் கூறியபடியால் எந்த மாற்றங்களையும் செய்யாமல் அவர்கள் அனைவருக்கும் தனித்தனியாக அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டன.

**கேள்வி:** நீங்கள்தான் இந்த வழிகாட்டுதல்களைப் போட்டீர்களா?
**பதில்:** நான் தயாரித்த வழிகாட்டுதல் என்பது நிலுவையில் உள்ள இறக்குமதி வேலைகளைத் துரிதப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்டது. இறக்குமதியை நடைமுறையை துரிதப்படுத்து வதற்கான ஒரு வழிமுறைதான் அதில் உள்ளது. அதைத்தான் நான் கொடுத்தேன். அது 2022 இல் கொடுக்கப்பட்டது. அதிலிருப்பது குர்ஆன்களை, புத்தகங்களை, கிதாபுகளை இறக்குமதி செய்வதற்குரிய வழிகாட்டிதான் அது. இறக்குமதிக்கான வழிகாட்டுதல்தான் அது. பொறுப்புடன் சொல்கிறேன். அதன் பிரதிகள் கூட என்னால் தர முடியும் எனக்கு. அது மும்மொழிகளிலும் கொடுக்கப்பட்டது.

**கேள்வி:** இந்தப் கசயஅ றழசம யாரால் தயாரிக்கப்பட்டது? அதாவது ஹன்பலி, மாலிகி மத்ஹப்குரிய கிரந்தங்கள் ஆய்வுக்காக மட்டும்தான் கொண்டு வரவேண்டும் என்றும் அதேபோல் 37 தொகுப்பாளருடைய கிரந்தங்களை இங்கே கொண்டு வர முடியாது என்ற இந்த Fram work ஐ தயாரித்தது யார்?
**பதில்:** இந்த குசயஅ றழசம ஐ முழுமையாகத் தயாரித்தது இந்தப் புத்தக மீளாய்வு குழுதான். பொறுப்புடன் சொல்லுகிறேன். இது எனக்கு முன்பிருந்த பணிப்பாளர் ஏ.பி. அஷ்ரப் தயாரித்து பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து எங்களுக்கு பெறப்பட்டது. அது அங்கீகரிக்கப்பட்டு வந்தது நான் பணிப்பாளராக இருந்த காலத்தில். நான் அதனை அந்த நேரம் இருந்த பிரதிப் பணிப்பாளர் அன்வர் அலிக்கும் மற்றும் இரண்டு உத்தியோகத்தர்களுக்கும் "உங்களுடைய கவனத்திற்கு" என்று மினிட் போட்டு அனுப்பி வைத்தேன்.
ஆனால், அந்த குசயஅ றழசம இல் உள்வாங்கப்பட்டுள்ள விடையங்களைப் பார்த்தால் சாதாரண உலமாவால் அதனைத் தயாரிக்க முடியாது. அதில் நிறைய விடயங்கள் சொல்லப்பட்டுள்ளன, நுணுக்கமான விடயங்கள் கூறப்பட்டுள்ளன. அந்த அளவுக்கு சிறந்த அறிவாற்றல் உள்ள ஒருவரால் தான் அதை தயாரித்திருக்க வேண்டும். நிச்சயமாக திணைக்களத்தில் உள்ள சாதாரண உலமாவால் தயாரிக்க முடியாது. அவர்கள் யாரும் செய்திருக்கவும் மாட்டார்கள். நூற்றுக்கு நூறு வீதம் இது உண்மை.
இது புத்தக மீளாய்வு குழுவால் தயாரிக்கப்பட்டதான். நான் சொல்லும் அதே வார்த்தையை 2025 ஒக்டோபர் மாதம் பாராளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சியை சேர்ந்த 22 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் புத்தசாசன அமைச்சர் சுனில் செனவியிடம் சென்று அந்தக் அல்குர்ஆன் மொழிபெயர்ப்புப் பிரதிகளை விடுவிக்க வேண்டும் என கொடுத்துள்ள அந்த வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வேண்டுகோளுக்கு பாராளுமன்றத்தில் அளிக்கப்பட்டுள்ள பதிலில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது, இந்த Fram work ஐ புத்தக மீளாய்வுக் குழுவினாலும் பாதுகாப்பு அமைச்சும் இணைந்த தயாரிகாகப் பட்ட ஒன்று என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பதில் பாராளுமன்றத்தில் பிரதியமைச்சர் முனீர் முழப்பர் சொல்லப்பட்ட விடயமாக இருக்க வேண்டும்.

**கேள்வி:** இந்தப் புத்தக மீளாய்வு குழு உங்களோடு சேர்ந்து பணியாற்றிய விதத்தைப் பற்றி சொல்ல முடியுமா?
**பதில்:** எனது முதலாவது கூட்டத்திலேயே எனக்குத் தெரிந்த விடயம். அவர்களுக்கு சில சிரமங்கள் இருக்கின்றன. அவர்கள் இந்த புத்தகங்களை அனுமதி கொடுக்காமல் தேங்கிக்கிடந்ததுக்கு ஒரு காரணம் புத்தக மீளாய்வுக் குழுவால் கூட்டங்களை நடாத்த முடியவில்லை. அவர்கள் இதனைச் சரி பார்க்க வரவுமில்லை. ஆகவே, நான் அப்போதைய திணைக்கள கணக்காளருடன் பேசி அங்கு உள்ள நிலவரப்படி 2600 ரூபாய் ஒவ்வொரு அமர்வுக்கும் ஒரு உறுப்பினருக்கு நாம் வழங்கினோம். அனைத்து புத்தக மீளாய்வு குழுவிலுள்ள அனைவருக்கும் வழங்கினோம். அவர்கள் கையொப்பம் இட்டு பெற்றதாக அதற்கான ஆதாரங்கள் திணைக்களத்தில் உள்ளன. அத்தோடு, தேநீர் விருந்து உபசாரம் மற்றும் பகல் உணவுகளும் வழங்கினோம்.

**கேள்வி:** சாதிக் ஹாஜியார் அனுப்பியுள்ள இந்த அல்குர்ஆன் மொழிபெயர்ப்புகளில்தான் பிரச்சினை வருகிறது. புத்தக மீளாய்வு குழு சொல்கிறது. எங்களுக்கு ஏற்கனவே அனுப்பி வைத்த மாதிரியை ஆராய்ந்து அனுமதிக்கப் படவில்லை என்று சொன்ன பிறகும் இந்த விடயம் நடந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். இதனை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?
**பதில்:** இல்லை. இதில் சாதிக் ஹாஜியார் எந்தத் தவறையும் செய்யவில்லை. அவர் நல்ல நோக்கத்துடன் குர்ஆன் பிரதிகளை இலங்கைக்கு அனுப்பியிருக்கிறார். அவர் சிறந்த சமூக சேவகர். நீண்ட காலமாக இலங்கையிலுள்ள அத்தனை சமூகங்களுடன் தொடர்பு வைத்திருக்கின்றார். ஆனால், நான் சவூதியில் இருந்த நேரத்தில் எனக்கும் அவருக்கும் இடையில் தனிப்பட்ட ரீதியில் முரண்பாடுகள் இருந்தன. இருந்தாலும் அவரை நான் மதிக்கிறேன். அவரது சேவைகளை மதிக்கிறேன். இந்த அல்குர்ஆன் இறக்குமதி விடயத்தில் சாதிக் ஹாஜியார் எந்த தவறையும் செய்யவில்லை. அல்குர்ஆன் மொழிபெயர்ப்பை அவர் திணைக்களப் பணிப்பாளருக்கு அனுப்பி உள்ளார். ஆகவே சாதிக் ஹாஜியார் அனுப்பியதில் எந்தத் தவறும் இல்லை.
குர்ஆன் வந்து போது புத்தக மீளாய்வு குழு இதற்கு பரிந்துரைக்க முடியாது என்று சொன்னபோது பைசல் அவர்கள் அதை மீண்டும் மீளாய்வு செய்யுமாறு கூறியிருக்கிறார்.

**கேள்வி:** இந்தப் புத்தக மீளாய்வு நியமனத்தில் உள்ள விடயங்களைப் பற்றி சொல்லுங்கள்?
**பதில்:** இந்தப் புத்தக மீளாய்வு நியமனத்தில் நிறைய விடயங்கள் இருக்கின்றன. சட்ட ரீதியாக செல்லுபடியாக ஒரு குழு இது. எந்த சட்ட விதி முறைகளுக்கும் உள்வாங்கப்படாத ஒரு குழு இது. இது தற்காலிகமாக அமைக்கப்பட்ட ஒரு குழு. ஈஸ்டர் தாக்குதல் ஏற்பட்ட 2019 ஆம் ஆண்டு அந்த கால பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும் என்பதற்காக அமைக்கப்பட்ட குழு தான் இது. ஆனால், அந்தக் குழு ஓர் ஆலோசனைக் குழு தான். அவர்கள் திணைக்களத் தலைவருக்கோ அல்லது புத்தசாசன அமைச்சின் செயலாளருக்கோ உத்தரவு பிறப்பிக்க முடியாது. அவர்களது முடிவை கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்ற நிலைமை இல்லை. இந்த குழு ஒரு சுயாதீன ஆணைக்குழு அல்ல. சுயாதீன ஆணைக்குழு என்றால், அதற்கு உதாரணமாக தேர்தல் ஆணைக் குழுவைச் சொல்லலாம். அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால், இந்தக்குழு பணிப்பாளரினால் அமைக்கப்பட்ட தற்காலிக குழு தான். இவர்கள் அமைச்சரினால் நியமிக்கப்பட்டதும் கூட இல்லை.
இந்த புத்தக மீளாய்வுக் குழுவுக்கு வழங்கப் பட்டுள்ள அவர்களின் நியமனக் கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்னவென்றால், நீங்கள் இஸ்லாமியப் புத்தகங்கள் இலங்கை நாட்டுக்குள் வருவதற்கு, இறக்குமதி செய்வதற்கு பரிந்துரைப் பதற்கும் மற்றது நல்ல தகுதியான இஸ்லாமிய அறிஞர்களை பரிந்துரைக்கப்பதற்கும் புத்தகங்களை பரிசீலனை செய்வதற்கும் மற்றும் சில காரணங்களுக்காகவும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் எந்த இடத்திலுமே குர்ஆன் இறக்குமதியை பரிசீலனை செய்வதற்கோ, ஆய்வு செய்வதற்கோ உங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை. நீங்கள் அந்த நியமனக் கடிதத்தை எடுத்தால் அதில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.
2019, 2020 காலப்பகுதியில் சில தற்காலிக வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டன. சில நிரந்தர வழிகாட்டுதல்கள் கெசட் மூலம் அரச அனுமதியுடன் வெளியிடப்பட்டன. ஆனால், இத்தகைய வழிகாட்டுதல்கள் தற்காலிக வழிகாட்டுதல்கள். 2019, 2020 ஆம் ஆண்டு சூழ்நிலையும் இப்போது உள்ள சூழ்நிலையும் வித்தியாசம். அப்போது உள்ள சூழ்நிலையில் சில கட்டுப்பாட்டு விதிகள் இருந்தன. ஆனால், தற்போதைய அரசாங்கத்துக்கு சிறுபான்மை மக்களுக்கு குறிப்பாக முஸ்லிம் மக்களுக்கு நல்ல சம உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. நியாயமான உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு வழங்கப்படுகிறது. இனவாதிகளால் எந்த அச்சுறுத்தலும் இல்லை. இது ஒரு நல்ல சந்தர்ப்பம். குர்ஆன் இலங்கைக்கு வரும் இந்த காலகட்டத்தில் அப்போதைய காலகட்டத்தில் இருந்த இவர்கள் கொடுக்கும் இந்த Fram work இன்றைய காலத்துக்குப் பொருந்தாது.
உண்மையில் சவுதி அரேபியாவில் இருந்து வரும் அங்கீகரிக்கப்பட்ட அல்குர்ஆன் மொழிபெயர்ப்புகளை இறக்குமதி செய்வதற்கு எந்தக் கட்டுப்பாடும் இலங்கையில் இருக்கக் கூடாது என்பது எனது அபிப்பிராயம்.

**கேள்வி:** அப்படியென்றால் தற்போது உள்ள மீளாய்வுக் குழுவை என்ன செய்வது?
**பதில்:** காலத்தின் கட்டாயம் புதிய மீளாய்வுக் குழு நியமிக்கப்பட வேண்டும். தேவை என்றால் அதற்கு புதிய விதிமுறைகள் வகுக்கப்பட வேண்டும். அது சட்ட ரீதியான முறையில் செய்யப்பட வேண்டும். முஸ்லிம் இலக்கியங்களுக்காக மட்டும், முஸ்லிம் புத்தகங்களுக்காக மட்டும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவது சரிஇல்லை. இன்று கிறிஸ்தவ நூல்கள், பௌத்த சமய நூல்கள், இந்து சமய நூல்கள் தாராளமாக இலங்கைக்கு வருகின்றன. அதற்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை.
இன்று குர்ஆன் மொழிபெயர்ப்புக்களால் இங்கு இலங்கையில் மட்டுமல்ல, உலகத்தில் எந்தப் பகுதியிலும் பயங்கரவாதம் உருவாகவில்லை. சில அந்நிய மதத்தினர் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம். அவைகளை நாங்கள் விளங்கப்படுத்தலாம். தெளிவு பெறலாம். அதற்காக முஸ்லிம்களுக்குரிய உரிமையை, முஸ்லிம்களுக்குரிய வாய்ப்பை நாங்கள் தடுக்கக்கூடாது.
உலகிலோ, இலங்கையிலோ உள்ள எந்த முஸ்லிமும் குர்ஆனில் உள்ள உள்ளடக்கத்தை இதுவரை சவாலுக்கு உட்படுத்த வில்லை.

**கேள்வி:** சில தேரர்கள் பகிரங்கமாக குற்றம் சுமத்துகிறார்களே?
பதில்: குர்ஆன் முஸ்லிம்களுக்கானது. அது தேரர்களுக்கானது அல்ல. இலங்கைக்கு இலங்கை முஸ்லிம்களுக்காக இறக்குமதி செய்யப்படுகறது. பௌத்த மத பிக்குகளுக்காக அல்ல. மற்ற சமயங்களுக்காக அல்ல. அவர்களுக்குத் தேவை என்றால் விளக்கம் திணைக்களம் வழங்க முடியும். ஜம்இய்யத்துல் உலமா வழங்க முடியும். இதர முஸ்லிம் சபைகள் தாராளமாக வழங்க முடியும். அதற்காக முஸ்லிம்களுக்குள்ள உரிமைகளை நாங்கள் கட்டுப்படுத்த கூடாது.

**கேள்வி:** நீங்கள் பணிப்பாளராக இருந்த காலத்தில் புத்தக சாசன அமைச்சராக இருந்தவர் விதுர விக்கிரம நாயக்க. அவரோடு நீங்கள் கூட்டங்களைப் போட்டு விடுவிப்பது தொடர்பில் பேசி இருக்கிறீர்களா?

**பதில்:** எனது காலத்தில் அப்படியொரு நிலைமை வரவில்லை. குர்ஆன் இறக்குமதிக்கு எந்தத் தடையும் இருக்கவில்லை. எந்தத் தடையும் ஏற்படவுமில்லை. யாரும் அதற்காக எங்களிடம் கேட்கவும் இல்லை. ஆகவே, அந்தப் பிரச்சினை இருக்கவில்லை. ஆனால், எனது காலத்தில் புத்தக மீளாய்வு குழு எப்படி இயங்கியது என்றால், அவர்கள் எனக்கு ஆலோசனை வழங்குவார்கள். என்னுடன் கலந்துரையாடுவார்கள். நான் அவர்களுக்கு என்ன மாதிரியான சூழ்நிலையில் முடிவுகளை எடுக்க வேண்டும் என்று ஆலோசனை வழங்குவேன். ஒரு கலந்துரை யாடலில் எனது வழிநடத்தலில் அவர்கள் செயற்பட்டார்கள். அங்கே எந்தப் பிரச்சினையும் வரவில்லை.
நான் எத்தனையோ பாதுகாப்பு கூட்டங்களுக்கு சென்றிருக்கிறேன். அவர்கள் இந்த ஜிஹாத் வசனம் பற்றி ஒன்றும் செல்லவில்லை. இந்த ஜிஹாத் பற்றி சொல்பவர்கள் நமது முஸ்லிம் குழுக்கள் தான். குறிப்பாக புத்தக மீளாய்வு குழுக்கள் தான் அவைகள் பற்றிப் பேசுகின்றார்கள்.
நான் ஒன்றைப் பற்றிக் கூற வேண்டும். 2024 மே காலப் பகுதியில் அந்த நேரத்தில் குர்ஆன் இலங்கைக்கு வந்துவிட்டது. குர்ஆன் இலங்கைக்கு வரும் மட்டும் எனக்குத் தெரியாது. நான் அப்போது ஹஜ் கமிட்டியில் இருந்தேன். அப்போது அமைச்சராக இருந்த விதுர விக்கிரம நாயக்க அவர்கள் பணிப்பாளர் அறைக்கு வந்திருக்கிறார் என்று ஒரு தகவல் எனக்கு கிடைத்தது. நான் அவரைப் பார்ப்பதற்காக அங்கு சென்றேன். அங்கே அப்போதைய திணைக்களப்பணிப்பாளர் பைசல், உதவி பணிப்பாளர் அலா அஹமட் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள் என்போரும் இருந்தனர். அப்போது புத்தக மீளாய்வுக் குழுவின் உறுப்பினரான மௌலவி ஒருவர் விதுர விக்கிரம நாயக்க அமைச்சரிடம் கூறுகின்றார்
" குர்ஆனில் 30 இடங்களில் ஜிஹாத் என்ற வசனம் இருக்கின்றது. அவற்றை நாங்கள் "டிபெக்ஸ்" பண்ண வேண்டும் என்று.
இவ்விடயத்தை நான் மேலே சொன்ன பணிப்பாளர் உட்பட இருந்த அனைவரிடம் கேட்கலாம். இது ஜீரணிக்கப்பட முடியாத விடயம்.
இது குர்ஆனைப் பற்றிய ஏதோ ஒரு கலந்துரை யாடல் சென்று கொண்டிருக்கிறது என்று அப்போதுதான் எனக்கு விளங்கியது. அப்போது நான் அமைச்சரிடம் கூறினேன். இது எனக்கு சம்பந்தப்பட்ட விடயம் இல்லை. நான் எனது அபிப்பிராயத்தைச் சொல்ல முடியுமா? என்று கூறினேன். அதற்கு அவர் ஆம் என்றார்.
இந்தக் குர்ஆன் 1400 வருடங்களாக பாவனையில் உள்ளது. முழு உலகத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட குர்ஆன். அதில் உள்ள புல் ஸ்டாப், கொமா கூட இன்றுவரை மாற்றப்பட வில்லை. இவர்கள் சொல்வது போல் டிபெக்ஸ் பண்ண வேண்டும் என்றால், அது முஸ்லிம்களை மிகவும் இழிவுபடுத்தும் செயலாக இருக்கும். இது முஸ்லிம்களின் ஜனாஸாவை எரிப்பதை விட மிகவும் ஆபத்தானதாக முஸ்லிம் மக்கள் இதனை உணர்வார்கள். அவசரப்பட்டு இதற்கு முடிவு எடுக்காதீர்கள். இதன் பின்னணி எனக்குத் தெரியாது. இது எனது தாழ்மையான கருத்து என்று கூறினேன்.
முஸ்லிம் அல்லாத அவர் இதனை விளங்கிக் கொண்டார். ஏற்றுக் கொண்டார்.
இதனால்தான் சொல்கின்றேன். இந்த புத்தக மீளாய்வுக் குழு கலைக்கப்பட வேண்டும்.

**கேள்வி:** குர்ஆன் மொழிபெயர்ப்புக்களை வெளியே கொண்டு வர வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும்? ஏன் இவர்கள் இவ்வாறு தாமதிக்கிறார்கள். இரண்டு வருடங்கள் சுங்கத்திலே தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றது?
**பதில்:** இது ஒரு சின்னப் பிரச்சினை.
இது புத்தக மீளாய்வு குழுவில் உள்ள ஒரு தலைக்கணம்தான் இது. அவர்கள் நினைத்துக் கொண்டார்கள் இந்தப் புத்தக மீளாய்வு குழு என்பது உலகத்தில் அதிகாரம் படைத்த ஒரு குழு என்று. ஐந்து சதத்துக்கும் பெறுமதி இல்லாத ஒரு குழு. சட்ட ரீதியாக ஓர் அதிகாரம் இல்லாத ஒரு குழு. அவர்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை. அவர்களுக்கு எந்தப் பதவி அதிகாரமும் இல்லை. அவர்கள் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட ஒரு குழு. இன்று இந்த அரசாங்கத்தின் கீழ் முஸ்லிம்கள் நிச்சயமாக உரிமையை நிலை நாட்ட முடியும்.
இவர்கள் சுமார் ஆறு வருடம் இருந்திருக்கிறார் கள். இவர்கள் ஒரு பிரச்சினையைத் தோற்று வித்திருக்கிறார்கள். இதுவே போதும் இந்த குழுவைக் கலைத்துவிட்டு நாங்கள் இன்னொரு புதிய நல்ல முஸ்லிம் அறிஞர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைக்க முடியும். என்ன குழுவை அமைத்தாலும் இனிவரும் காலத்தில் குர்ஆன் பிரதிகளையோ, குர்ஆன் மொழி பெயர்ப்புகளையோ, ஹதீஸ்களையோ யாரும் எந்தக் கையைம் வைக்க கூடாது. அப்படி ஒரு நிலை இருக்க வேண்டும். இஸ்லாமிய புத்தகங்கள், அரபுப் புத்தகங்கள், மற்றப் புத்தகங்களையோ அதில் ஏதும் தீவிரவாத கருத்துக்கள் இருக்கின்றதா என்று பரிசீலிக்கட்டும். பிரச்சினையில்லை. ஆனால், குர்ஆன், ஹதீஸ் அதற்கு அப்பாற்பட்டது. அதனை தனிமைப்படுத்தி, அதற்குரிய கௌரவத்தையும் அதற்குரிய வழிமுறையையும் நாங்கள் தனியாகப் பேண வேண்டும் என்பதுதான் எனது கருத்து.




**அந்த குழுவைக் கலைத்து விடுங்கள்**

**“கனடா - ஸ்கார்பரோவில் டொரண்டோ தமிழ்ப்புத்தக அரங்கத்தில் எழுத்தாளர் அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்கள் எழுதிய ‘டாக்டர் ஷாஃபியின் அநீதிக்கெதிரான போராட்டம்’ என்ற நூல் வெளியீட்டு விழாவில் இந்நூல் பற்றி நான் ஆற்றிய ஆய்வுரையை இங்கு வழங்கியுள்ளேன்”**



# இலங்கை இனவாதத்துக்கெதிரான டாக்டர் ஷாஃபியின் அறவழிப் போராட்டம்

கனடாவிலிருந்து
இனியவன் இசாறுதீன்

இலங்கை அரசியல்வரலாற்றில் ஒரு முஸ்லீம் மருத்துவரின் பெயரைப் பயன்படுத்தி அவரது சமூகத்தைக் குற்றவாளியாக்க இனவாதிகள் நிகழ்த்திய மிகக் கேவலமான சதி முயற்சி என்றால் அது 2019ஆம் ஆண்டு டாக்டர் ஷாஃபிக்கு எதிரான இனவாதப் பிரசாரம்தான். அதாவது டாக்டர் ஷாஃபி சிங்களப் பெண்களுக்கு ‘சிசேரியன்’ இனப்பெருக்கத் தடை செய்கிறார் என்கிற ஒரேயொரு குற்றச் சாட்டுதான்.

ஆண்டு 2019 மே 23ஆம் திகதி ‘தவ்ஹீத் ஜமாஅத்’தைச் சேர்ந்த ஒரு முஸ்லீம் வைத்தியர் 4000 சிங்களப் பெண்களுக்கு ரகசியக் கருத்தடை செய்துள்ளார்” என்ற ‘திவயின’ பத்திரிகை வெளியிட்ட செய்தி முஸ்லீம்களுக்கெதிராக அப்போது இனவாதிகள் கொளுத்திவிட்ட ‘வதந்தீ’யாகும். இலங்கையின் சமீபகால அரசியல் வரலாற்றில் ஒரு மருத்துவரின் வாழ்க்கை இனவாத அரசியலில் ஆயுதமாக பயன்படுத்தப்பட்ட ஒரு கொடூர பிரசாரமே டாக்டர் ஷாஃபிக்கு எதிரான குற்றச் சாட்டு. அந்தக் குற்றச்சாட்டு ஒரு தனிநபரைக் குறிவைத்ததல்ல: அது அரசியல் இலாபத்துக்காக இனவெறுப்பை விதைக்க - அவரது சமூகத்தின் மீது எதிர்ப்பு ணர்வை உருவாக்க திட்டமிட்டு நடத்தப்பட்ட சதியாகும்.

எந்த ஆதாரமுமில்லாமல் - எந்த மருத்துவ சான்றுமில்லாமல் - எந்த நீதிமன்றமும் உறுதிப்படுத் தாமல் வெளியிடப்பட்ட அந்த ‘வதந்தீ’ சமூகஊடகங்களில் விசம் பாய்ச்சியது. இலங்கை முஸ்லீம்சமூகத்துக்கெதிராகப் பாய்ச்சிய இந்த நஞ்சுதான் நாட்டை வஞ்சிக்கச் செய்தது.

ஆண்டு 1977 செப்டம்பர் 16ம் நாளன்று ‘கலாவெவ’ மண்ணில் பாடசாலையதிபர் முஹம்மது காஸிம் செய்கு சிஹாப்தீனுக்கும்



அன்னை யாசீன் பாத்தும்மாவுக்கும் மூன்றாம் மகனாகப் பிறந்து வளர்ந்தவர் டாக்டர் ஷாஃபி. சனநாயகதேசம் என்று சொல்லப்படும் இந்த இனநாயக தேசத்தில் 2019ஆண்டு முஸ்லீம் சமூகம் வஞ்சிக்கப்பட்டபோது டாக்டர் ஷாஃபி இனவாதத்திற் கெதிரான ஓர் அறவழிப் போராளியாக இனம் காணப்பட்டார்.

2019ஆம் ஆண்டு குருநாகல் போதனா வைத்தியசாலையில் டாக்டர் ஷாஃபி பணியாற்றிய போது அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அவரது தனிப்பட்ட வாழ்க்கையை மட்டுமல்ல அவரது குடும்பத் தினரதும் சமூகத்தினரதும் நிம்மதியை நிலை குலைய வைத்தன. அவரும் அவரது குடும்பமும் சமூகமும் எதிர் கொண்ட அச்சமும் - துன்பமும் - துயரமும் மனஉளைச்சலும் வரலாற்றுப் பார்வையில் காலம் கடந்தும் வலிக்கின்ற சோக மானவை.

அந்த சமூகத்துரோகத்தை சமீபத்தில் எழுத்தாளர் அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்கள் ‘டாக்டர் ஷாஃபியின் அநீதிக்கெதிரான போராட்டம்’ என்ற பெயரில் நூலாய் எழுதி வெளியிட்டிருக் கிறார். அது ஒரு மனிதனின் கண்ணீரை - ஒரு மருத்துவரின் கருணையை - ஒரு சமூகத்தின் போராட்டத்தை - நீதியின் நேர்மையை - உண்மையின் தேவையை - அதிகார துஸ்பிர யோகத்தின் அப்பட்டமான பொய்யை - சொந்த நாட்டுக்குள்ளேயே ஒன்றாய் வாழும் ஓர் இனம் இன்னொரு இனத்தின் மீது உமிழ்கின்ற இனத்துவேசத்தை - அவிழ்த்துச் சொல்லும் கைக்கடக்கமான கருத்துநூலாய் காணப்படுகின்றது. ஆனால் அது ஓர் மனிதனின் கதை அல்ல. ஓர் இனத்தின் சரிதையாக - எதார்த்தத்தின் உண்மை சொல்லும் மனச் சாட்சியாக - எதிர்காலத் தலைமுறைக்கான எச்சரிக்கைச் சமிக்கையாக - இலங்கை இனவாதம் அப்பாவிகளை எப்படி நசுக்கியது என்பதற்கான ஓர் ஆதாரமாக - அதிகார வர்க்கத்தின் அராஜக முகத்தைக் காட்டும் காலத்தின் கண்ணாடியாக அந்த கருத்துநூல் சான்று பகர்கின்றது.

அதன் ஒவ்வொரு வரியையும் வாசிக்கும்போது இலங்கை இனவெறியால் பாதிக்கப் பட்ட இஸ்லாமிய சமூகத்தின் இழப்பும் சோகமும் எதார்த்தமும் உணர்வுடன் பிதிபலிக்கின்றன. அவை நமக்கு ஓர் எழுச்சி வரியாக - நம்பிக்கை தரும் ஒளியாக - ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஓர் எச்சரிக்கைக் குரலாக இருக்கின்றன.

அன்று குறிவைத்துக் குற்றவாளி எனக் காட்டப்பட்ட டாக்டர் ஷாஃபி கைது செய்யப்பட்ட பின்னர் அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட முக்கிய குற்றச்சாட்டுக்களில் ஒன்று தான் அவர் அந்தரங்கமாக சிங்களப்பெண்களுக்கு இனப்பெருக்கத் தடை செய்யும் அறுவைச்சிகிச்சை செய்கிறார் என்பதுதான்.

அதிவேகமாகப் பரப்பப்பட்ட அந்த குற்றச்சாட்டு அப்போது கேள்விக்குள்ளாக்கப்பட்ட போதும் அது பொய்க் குற்றச்சாட்டு என்றே நீதித்துறை நிஷரூபித்தது.

ஆனால் டாக்டர் ஷாஃபி சமீபத்தில் ஒரு சிங்களப் பெண்ணுக்கு மனிதாபிமானத் தோடு செய்த ஒரு மகப்பேற்றுச் சிகிச்சையால் அங்குள்ள மக்கள் அவரை மனம்கொண்டு மதிப்பளிக்கின்ற ஒரு நிலையை உருவாக்கியிருக்கிறார். அதனால் அங்கிருந்த அன்றைய சூழல் ‘அந்த’ இனவாதிகளை மறுதலிக்கும் ஒரு சமூக மாற்றத்தை இன்று உருவாக்கி யிருக்கிறது.

அதாவது சமீபத்தில் டாக்டர் ஷாஃபி ஒரு தாயையும் சேயையும் உயிர்பிழைக்கச் செய்த சம்பவம் குருநாகல் வைத்தியசாலையில் நிகழ்ந்துள்ள தாக இப்போது இலங்கையில் அதிகம் பேசப்படுகின்றது. 34 வார கர்ப்பகாலம் கடந்து பிள்ளைப்பேற்றுப் பிரசவத்துக்குத் தயாராயிருந்த ஒரு தாய் இரத்த உயரழுத்தம் காரணமாக மவத்தகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது இரட்டைக் குழந்தைகளின் தாயான அவர் மூன்றாவது குழந்தைப் பிரசவத்துக்காக மவத்தகம வைத்தியசாலையில் இருந்தபோது அவருக்கு வலிப்பும் உயர் இரத்த அழுத்தமும் ஏற்பட்டதால் உடனடியாக குருநாகல் வைத்தியசாலைக்கு இடமாற்றப் பட்டார். அங்கும் கூட அவருக்கு அதிக வலிப்பும் உயர் ரத்த அழுத்தமும் அதிகமானதால் அங்கு பணியிலிருந்த மருத்துவர் அவசரமாக டாக்டர் ஷாஃபிக்கு இந்த நிலை குறித்து அறிவித்திருக்கிறார்.

தனது வீட்டில் நோன்பு திறக்கத் தயாராய் இருந்த டாக்டர் ஷாஃபி இந்த தகவல் கிடைத்தவுடனேயே அந்தத் தாயை அறுவைச் சிகிச்சையறை க்குக் கொண்டு செல்லும்படி அறுவுறுத்திவிட்டு ஐந்து நிமிடத்துக்குள் அங்கு சென்று இதயத்துடிப்பு நின்றுபோன அந்தத் தாய்க்கு அவசர அறுவைச் சிகிச்சை செய்து தாய்சேய் இருவரது உயிரையும் காப்பாற்றியிருக்கிறார்.

இந்த அவசர சிகிச்சை செய்த டாக்டர் ஷாஃபியின் அபார ஆற்றலை அங்குள்ள மேல் மருத்துவர்கள் பாராட்டியுள்ளனர். அவரது இந்த இயல்பான தியாக உணர்வை உள்ளம் நெகிழ்ந்து குருநாகல் மக்களும் அவர் அர்ப்பணிப்போடு செயற்படும் ஒரு ‘சிறந்த மருத்துவர்’ என்று பாராட்டுவதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

உண்மையில் டாக்டர் ஷாஃபி எதிர்கொண்ட சவால்கள் உணர்ச்சிகரமானவை. ஒரு கணப்பொழுதில் தன் மீதான பொய்க்குற்றச்சாட்டுக் களால் முழு உலகத்தையும் தன்னைத் திரும்பிப் பார்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்ட போதும் அவர் தன்னம்பிக்கை யோடு மக்கள் சேவை செய்வதை அறிய முடிகிறது.

‘மருத்துவமனையில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையுடைய வாழ்வின் முதல் நம்பிக்கைதான் மருத்துவரின் உதவிக்கரம். உயிர்நேயமே மனித நாகரீகத்தின் உயர்ந்த அறம். 2004ம் ஆண்டிலிருந்து நான் அறிந்தவரை டாக்டர் ஷாஃபியின் கரங்கள் ஆயிரக் கணக்கான குழந்தைகளை இந்த உலகுக்கு உயிரோடு கொண்டு வந்தன.’ என்று கருத்துரைத்தார் டாக்டர் ஷாஃபியோடு பணி புரிந்த டாக்டர் வரதராஜா துரைராஜா அவர்கள். அவரும் முள்ளி வாய்க்கால் போரில் பாதிக்கப் பட்ட மக்களுக்கு மருத்துவ சிகிச்சையளித்ததற்காக அப்போது அரச படையால் கைது செய்யப்பட்டிருந்தார்.



# இதயங்களுக்கு இதம் அல்குர்ஆன்

Journalist: Ash-Sheikh Ikram
(Falahi: Riyadhi MA)

"குர்ஆனுடன் ஒரு உறவு" (Spiritual Connection)

* "குர்ஆனுடன் ஒரு உறவு" (குர்ஆனுடன் ஒரு பிணைப்பு) என்பது ஒரு நபரின் ஆன்மீக வாழ்க்கையை முழுமையாக மாற்றக்கூடிய ஒரு உன்னதமான பயணமாகும்.

குர்ஆனை அணுகுவதற்கான சில நடை முறை வழிகள் இங்கே:

**1. ஓதுதலை (Recitation) பழக்கமாக்குதல்**

*தினசரி தொடர்பு: அதிகாலையில் அல்லது இரவு உறங்குவதற்கு முன் ஒரு குறிப்பிட்ட பகுதியை (எத்தனை சிறியதாக இருந்தாலும்) தவறாமல் ஓதுங்கள்.

*அர்த்தத்துடன் வாசித்தல்: குர்ஆனை வெறுமனே ஓதுவதை விட, அதன் பொருளைப் புரிந்துகொண்டு வாசிக்கும்போது இறைவனுடனான தொடர்பு ஆழமாகிறது. உங்கள் தாய்மொழியில் அதன் மொழிபெயர்ப்பை அருகில் வைத்துப் படியுங்கள்.

**2. சிந்தித்தல் (Tadabbur)**

* செய்தியை உணர்தல்: வாசிக்கும்போது, "இந்த வசனம் என்னிடம் என்ன பேசுகிறது?" என்று சிந்தித்துப் பாருங்கள். இது ஒரு புத்தகமாக மட்டும் இல்லாமல், உங்கள் வாழ்க்கைக்கான வழிகாட்டியாகத் தெரியும்.

*தனிப்பட்ட பிரதிபலிப்பு: அன்றாட வாழ்க்கையில் நடக்கும் நிகழ்வுகளோடு குர்ஆனின் போதனைகளைத் தொடர்பு படுத்திப் பாருங்கள்.

**3. செயலில் காட்டுதல் (Implementation)**

*வழிகாட்டுதல்கள்: குர்ஆனில் உள்ள நற்பண்புகளை உங்கள் குணநலன்களில் கொண்டு வாருங்கள். பிறரிடம் அன்பு செலுத்துதல், உண்மை பேசுதல், பொறுமையைக் கடைப்பிடித்தல் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதே குர்ஆனுடன் கொள்ளும் உண்மையான உறவு.

* பிரார்த்தனை: குர்ஆனை ஓதத் தொடங்கும் முன், அதன் பொருளைப் புரிய வைக்கும் படியும், அதன் வழியில் வாழ உதவி புரியும்படியும் இறைவனிடம் மனமுருகி வேண்டுங்கள்.

**4.சூழலை உருவாக்குதல்**

* கேட்பது: குர்ஆனை ஓதுவதைப் போலவே, மனதை உருக்கும் அழகான ஓதுதல்களைக் கேட்பது உள்ளத்திற்கு அமைதியைத் தரும்.

*தொடர்ச்சி: குர்ஆனுடன் ஒரு உறவை வளர்க்க, அதனைத் தொடர்ச்சியாகக் கையில் எடுக்கும் பழக்கத்தை (Consistency) உருவாக்கிக்கொள்ளுங்கள்.

"நிச்சயமாக, இந்த குர்ஆன் மிக நேரான வழிக்கு வழிகாட்டுகிறது மேலும், நற்செயல்கள் புரியும் நம்பிக்கையாளர் களுக்கு நிச்சயமாகப் பெரிய கூலி உண்டு என்று நற்செய்தி கூறுகிறது."
(திருக்குர்ஆன் 17:9)

குர்ஆனுடன் நீங்கள் கொள்ளும் இந்த ஆன்மீகப் பிணைப்பு, உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்தையும் அர்த்தமுள்ளதாகவும், அமைதியானதாகவும் மாற்றும்.

# புத்தளம் இஹ்யாவுல் உலூம் அரபுக் கல்லூரி மத்ரஸாவில் சிறப்பு குர்ஆன் பயிற்சிகள் ஆரம்பம்



**(எம்.யூ.எம்.சனூன்)**

புத்தளம் இஹ்யாவுல் உலூம் அரபுக் கல்லூரி மத்ரஸாவின் முதல்வர் அஷ்ஷெய்க் சனூஸ் ரஹ்மானி ஹழ்ரதின் பல வருட கால கனவை நனவாக்கும் வகையில், பொன் னெழுத்துக்களால் பதிவு செய்யப்பட வேண்டிய முக்கியத்துவமிக்க நிகழ்வொன்று கடந்த சனிக்கிழமை (13) மத்ரஸா வளாகத்தில் நடைபெற்றது.

புத்தளம் மாவட்டத்திலுள்ள ஆலிம்கள் மற்றும் ஹாபிழ்களுக்காக, புனித அல்குர்ஆனை தஜ்வீத் விதி முறைகள் மற்றும் கிராஅத் அடிப்படை களுக்கு அமைவாக சரியான முறையில் ஓதுவதற்கான நான்கு மாத கால சிறப்பு பயிற்சி நிகழ்ச்சி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குர்ஆன் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதோடு, ஆலிம்கள் மற்றும் ஹாபிழ்களின் ஓதுதல் திறன்களை மேலும் செம்மைப்படுத்தும் நோக்கத்துடன் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"குர்ஆனை அழகாகவும் சரியான முறையிலும் ஓதுவதற்கான திறனை வளர்க்கும் இந்தப் பயிற்சி, வடமேல் மாகாணத்தின் சமயக் கல்வி வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாக அமையும்" என நிகழ்வில் கலந்து கொண்டோர் கருத்து தெரிவித்தனர்.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக இஹ்யாவுல் உலூம் அரபுக் கல்லூ ரியின் முதல்வர் அஷ்ஷெய்க் சனூஸ் ரஹ்மானி ஹழ்ரத் கலந்துகொண்ட துடன், சிறப்பு அதிதியாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா - புத்தளம் நகரக் கிளையின் தலைவர் அஷ்ஷெய்க் ஜிப்னாஸ் மிஸ்பாஹி பங்கேற்றார்.

குர்ஆனை தஜ்வீத் மற்றும் கிராஅத் விதிமுறைகளுக்கு அமைவாக சரியான முறையில் ஓதக்கூடிய திறமையான குர்ஆன் ஓதுனர்களை உருவாக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நான்கு மாத காலப் பயிற்சி நிகழ்ச்சி, புத்தளம் மாவட்டத்தின் சமயக் கல்வி வரலாற்றில் ஒரு புதிய மைல்கல்லாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புத்தளம் பிராந்தியத்திலுள்ள அனைத்து பள்ளிவாசல்கள், மத்ரஸ ாக்கள் மற்றும் சமயக் கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்கள், ஆலிம்கள், ஹாபிழ்கள் ஆகியோர் இப்பயிற்சி நிகழ்வில் கலந்துகொண்டு அதன் பயன்களைப் பெற்றுக்கொள்ளுமாறு நிர்வாகம் சார்பில் அன்புடன் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# மத்திய மாகாண ஆளுநர் தலைமையில் போதை ஒழிப்பு கலந்துரையாடல்



**(எம். சதூர்தீன்)**

மத்திய மாகாண பாடசாலை மாணவர்களுக்கான போதைப் பொருள் தடுப்பு விசேட விழிப்பூட்டும் நிகழ்ச்சிகளை பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் நடத்துவதற்கான கலந்துரையாடல் ஒன்று மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ். பி. எஸ். அபயகோன் தலைமையில் (16) ஆளுநர் காரிலயத்தில் இடம் பெற்றது.

முழுநாடும் ஒன்றாக தேசிய வேலை திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கும் பெற்றோருக்கு மான போதை வஸ்து தடுப்பு விழிப்பூட்டும் நிகழ்ச்சிகள் மத்திய மாகணத்தின் கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களை சேர்ந்த அனைத்து பிரதேச செயலக மட்டத்திலும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# "பிறைந்துரைச்சேனை சாதுலியாவில் அனைவருக்கும் சம உரிமை" விளையாட்டு நிகழ்வு!



**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

அனைத்து மாணவர்களுக்கும் சம உரிமையோடு கல்வி போதிக்கப்பட வேண்டும். சம வாய்ப்புடன் மாணவர்கள் வழிநாடத்தப்பட வேண்டும். எனும் திட்டத்திற்கமைய மட்டக்களப்பு புகலிடம் நிறுவனம் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில், பிறைந்துரைச் சேனை சாதுலியா வித்தியாலய விசேட கற்கைப் பிரிவு மாணவர்கள் மற்றும் ஏனைய வகுப்பு மாணவர்களை ஒன்றிணைத்து விளையாட்டு நிகழ்வுகள் (16) இடம்பெற்றது. பாடசாலை அதிபர் எம்.எல். நிஜாம்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கே.என்.எச்.பணிப்பாளர் ரம்மிய்யா ஜீரசிங்க, புகலிடம் நிறுவனப் பணிப்பாளர் சேமுவேல் சுபேந்திரன், செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளர் ஏ.எஸ்.ஜெய சுவன்யா, அணித் தலைவர் ஜே.ஜெகன், பரிந்துரை உத்தியோகத்தர் சீ.பிரசன்னா, திட்ட உத்தியோக த்தர் கவிதா அருனகிரிநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, மாணவர்களுக்கு சிறப்பு விளையாட்டு நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன், கலந்து கொண்ட மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# கோலாகலமாக நடைபெற்ற "STITCH Clothing Exhibition - 2026" ஆடை அலங்காரக் கண்காட்சி





**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

நீர் கொழும்பு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள பல்லன்சேனை பெண்களின் சுயதொழில் முன்னேற்றம் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட "STITCH Clothing Exhibition – 2026" ஆடை அலங்காரக் கண்காட்சி தலுவகொடுவா அம்ரா திருமண மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

STITCH Women's Self-Employment Group அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் சமூகப் பணி இளமானி பட்டப்படிப்பு களப்பணித் திட்டத்தின் குழுப்பணி 01 கீழ் சமூகப்பணி இளமானி களப் பயிற்சி மாணவர் ஏ. முகம்மது இன்ஷாப் வழிகாட்டலில் சுய தொழில் தலைமையிலான குழுவினர் இந்த நி-கழ்வினை வெற்றிகரமாக வழிநடத்தினர். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் விரிவுரையாளர் எப். ரமீஸா கான், கௌரவ அதிதியாக சமூகப்பணி ஆராய்ச்சியாளரும், உதவித் திட்ட முகாமையாளர் ஹென்றி மிட்செல், சிறப்பு அதிதிகளாக தையல் பயிற்றுவிப்பாளர் திருமதி சஹானா அஸாம் மற்றும் சருமப் பராமரிப்பு நிபுணர் திருமதி நாதியா ஷார்ட் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பெண்களின் சுயதொழில் திறன்களை ஊக்குவிப்பதையும், சமூக வலுவூட்டலையும் பிரதான இலக்காகக் கொண்டு நடத்தப்பட்ட இக்கண்காட்சியில், பெண்கள் சுயமாகத் தயாரித்த நவீன ஆடை வடிவமைப்புகள் காட்சிப்படுத்தப் பட்டிருந்தன. பெண்களின் தனித்துவமான படைப்பாற்றல் மற்றும் தையல் திறன்கள் வருகை தந்திருந்த பொதுமக்களின் பெரும் பாராட்டைப் பெற்றன.

நிகழ்வின் ஒரு கட்டமாக, குழுப்பணிச் செயற்பாடுகளில் பங்கேற்று பயிற்சிகளை வெற்றிகரமாக நிறைவு செய்த நபர்கள் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் கண்காட்சியில் சிறந்த திறமைகளை வெளிப்படுத்தியவர்க ளுக்கு விசேட நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

பெண்களின் ஆளுமையையும் பொருளாதாரச் சுயாதீனத்தையும் வெளிப்படுத்திய இந்நிகழ்வு, சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களின் வரவேற்புடன் வெற்றிகரமாக நடைபெற்ற முடிந்தது குறிப்பிடத்தக்கது.

## மனநலமும் ஆலோசனையும்

103



# எதிர் - மறை சுய பேச்சு

மனிதனின் வாழ்க்கையில் அவன் சிந்தனைகள் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றன. குறிப்பாக, ஒருவர் தன்னைப் பற்றி தானே பேசும் உள்ளார்ந்த உரையாடல் அவரது மனநிலையையும், செயற்பாடுகளையும், வாழ்க்கை முன்னேற்றத்தையும் தீர்மானிக்கும் சக்தி கொண்டதாகும். இதையே "சுய பேச்சு" (Self Talk) என்று கூறுகிறோம்.

இதில்....

- நேர்மறையான சுய பேச்சு,
- எதிர்மறையான சுய பேச்சு

என இரண்டு வகைகள் உள்ளன.

இவற்றில் எதிர்மறையான சுய பேச்சு (Negative Self Talk) மனிதனின் வளர்ச்சிக்கு பெரும் தடையாக அமைகிறது.

எதிர்மறையான சுய பேச்சு என்பது ஒருவர் தனது குறைகள், தவறுகள் மற்றும் தோல்விகளை மட்டுமே மனதில் மீண்டும் மீண்டும் நினைத்து, தன்னைப் பற்றி தானே குறைவாக மதிப்பிடும் மனநிலை ஆகும்.

"நான் நல்லவர் அல்ல",
"நான் புத்திசாலி அல்ல",
"என்னால் முடியாது",
"நான் தோல்வியாளன்"

போன்ற எண்ணங்கள் தொடர்ந்து மனதில் தோன்றும் போது, அவை பிழையான நம்பிக்கையாக மாறிவிடுகின்றன.

இவ்வாறு உருவாகும் நம்பிக்கை மனிதனின் தன்னம்பிக்கையை குறைத்து, அவனை செயலற்ற நிலைக்கு தள்ளிவிடுகிறது.

இந்த வகையான சிந்தனை ஆபத்தானதாகவும் அழிவுகரமானதாகவும் இருக்கலாம்.

ஒருவர் தன்னையே தொடர்ந்து குறைத்து மதிப்பிடும் போது, அவர் தனது திறமைகளை உணர முடியாமல் போகிறார். இதன் விளைவாக, புதிய முயற்சிகளை மேற்கொள்ளும் தைரியம் குறைந்து, வாழ்க்கையில் முன்னேற்றம் தடைபடுகிறது.

நீண்ட காலத்தில் இது மனஅழுத்தம் மற்றும் தாழ்வு மனப்பான்மை போன்ற பிரச்சனைகளுக்கும் வழிவகுக்கலாம்.

ஆனால் இந்த நிலையை மாற்ற வேண்டும். எதிர்மறை சிந்தனைகளுக்கு பதிலாக நேர்மறை சுய பேச்சை வளர்ப்பது அவசியமாகும்.

"என்னால் முடியும்",
"நானும் சாதிக்கலாம்",
"என்னிடமும் திறன்கள் உள்ளன",
"எனக்கு முன்னேற முடியும்"

போன்ற ஊக்கமளிக்கும் எண்ணங்களை வளர்த்துக் கொண்டால், தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

தனது பலவீனங்களுடன் சேர்த்து தனது பலங்களையும் உணர்ந்து ஏற்றுக்கொள்வது மிகவும் முக்கியமானது.

மனிதன் தனது உள்ளார்ந்த உரையாடலை நேர்மறையான வழியில் மாற்றிக் கொண்டால், அவன் வாழ்க்கை பயனுள்ளதாக மாறுகிறது.

சுய பேச்சை கவனமாகக் கட்டுப்படுத்தி, அதை ஊக்கமளிக்கும் விதமாக வடிவமைப்பது ஒவ்வொருவருக்கும் அவசியமான திறனாகும்.

நாம் நம்மைப் பற்றி நம்மே பேசும் வார்த்தைகள், நாம் எப்படிப்பட்டவராக மாறுகிறோம் என்பதை தீர்மானிக்கின்றன.

ஆகவே,எதிர்மறை சுய பேச்சை குறைத்து, நேர்மறை சிந்தனையை வளர்ப்பதே வெற்றிக்கும் மன அமைதிக்கும் அடிப்படையாகும்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

மங்கையொளி

பயாஸா பாஸில்

# பெண்களுக்கு முஹர்ரம் தரும் செய்தி

முஹர்ரம் என்பது இஸ்லாமிய ஆண்டின் முதல் மாதமாகும். இது புதிய ஆண்டின் தொடக்கத்தை மட்டுமல்லாமல், தியாகம், பொறுமை, நம்பிக்கை மற்றும் நேர்மையின் முக்கியத்துவத்தையும் நினைவூட்டுகிறது.

குறிப்பாக பெண்களுக்கு முஹர்ரம் பல அர்த்தமுள்ள பாடங்களையும் வாழ்க்கை வழிகாட்டுதல்களையும் வழங்குகிறது.

கர்பலா நிகழ்வில் இமாம் ஹுசைன் (ரலி) அவர்களுடன் இருந்த பெண்கள் காட்டிய துணிச்சல், பொறுமை மற்றும் இறைநம்பிக்கை உலக பெண்களுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாகும்.

முஹர்ரம் பெண்களுக்கு சவால்கள் வந்தாலும் மனம் தளராமல் இருக்க வேண்டும் என்பதை கற்பிக்கிறது.

குடும்பத்தையும் சமூகத்தையும் நல்ல வழியில் வழிநடத்தும் பொறுப்பு பெண்களிடம் உள்ளது என்பதை நினைவூட்டுகிறது.

மேலும், நீதிக்காக குரல் கொடுப்பதும், நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்வதும் பெண்களின் கடமையாகும் என்பதையும் உணர்த்துகிறது.

இன்றைய பெண்கள் கல்வி, ஒழுக்கம், பொறுமை மற்றும் இறைபக்தி ஆகியவற்றை தங்களது வாழ்க்கையில் வளர்த்துக் கொண்டு, சமூகத்திற்கு முன்மாதிரியாக வாழ வேண்டும். முஹர்ரம் நமக்கு தரும் உண்மையான செய்தி, எந்த சூழ்நிலையிலும் நன்மையையும் நீதியையும் கைவிடாமல் இருப்பதே ஆகும்.




## அன்பான வாசகர்களே!

**அழகு மற்றும் பேஷன் ஆரோக்கியம், கல்வி, மன நலம், சமையல், வீட்டு முகாமைத்துவம் , தொழில், சுய முன்னேற்றம், சமூக விழிப்புணர்வு, கலாசாரம், பொழுது போக்கு போன்ற உங்கள் ஆக்கங்களை மங்கையொளி பக்கத்துக்கு அனுப்புங்கள்.**

0775486616

## அக இருளின் நிழல்கள்



பிறரின் உயர்வைக்கண்டு
வெந்து போவார்..
தம் பெருமை அறியாமல்
நொந்து போவார்..

அடுத்தவர் புன்னகையில்
நெருப்பாய் ஆவார்..
என்றும் அகத்தினில்
நிம்மதியின்றித்
தவிப்பாய் ஆவார்..

வளர்ச்சிப் பாதையினைக்
கெடுக்கப் பார்ப்பார்..
வீணே வம்புச் சொற்களை
அள்ளி இறைப்பார்..

மலரும் பூக்களைக்
கண்டு காய்வார்..
என்றும் மனதினில் வஞ்சகக்
குணம் சூடுவார்..

முன்னேறும் மனிதரைத்
தடுத்து நிறுத்துவார்..
புறம் பேசிப் பேசித்
தம்மை வறுத்துவார்..

உள்ளத்தில் அழுக்கினைச்
சுமந்து திரிவார்..
பிறர் உழைப்பைக் கண்டதும்
ஏங்கி எரிவார்..

கண்ணாடித் தரைமீது
நடப்பவர் போல்வார்..
பிறர் கல்லெறியும் முன்னே
உடைந்து வீழ்வார்..

அன்பென்னும் நதியினைக்
காணவே மாட்டார்..
நல்ல அறிவென்னும் வழியினில்
போகவே மாட்டார்..

இருளிலே வாழ்வதே
அவர்தம் சாபம்..
இந்த இழிவான குணத்தினால்
விளையும் பாவம்..

பொறாமைத் தீயினில்
அவரே வேவார்..
என்றும் புதுமையின் இன்பத்தை
அறியாது சாவார்..

பாத்திமா ஹகீமா
அமீனுதீன்,
ஓட்டமாவடி

அருவிக்கரை



நாச்சியாரீவு பர்வீன்

# சீரழியும் இளமையும் சிதறும் கனவுகளும்

கலை என்பது வெறும் பொழுதுபோக்குக் கான சாதனம் மட்டுமல்ல அது சமுதாயத்தின் புண்களைக் காட்டி, மருந்திட முனையும் ஒரு உன்னத ஊடகம் என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கிறது அண்மையில் மேடையேறிய அந்த ஓரங்க நாடகம். அனுராதபுரம், கெக்கிராவ ஹோராப்பொல முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பவள விழா (75ஆம் ஆண்டு நிறைவு) மேடையை அலங்கரித்த இந்த நாடகம், தற்கால சமூகத்திற்கு மிக அவசியமான ஒரு எச்சரிக்கை மணியாகும்.

பாடசாலை மாணவர்களையும், இளைய தலைமுறையினரையும் நல்வழிப்படுத்துவதை முதன்மை நோக்காகக் கொண்டு, போதை அரக்கனின் பிடியில் சிக்கித் தவிக்கும் எத்தனையோ பிஞ்சுயிர்களின் கதையை ஒற்றை மேடையில் கொண்டு வந்து நிறுத்தியிருந்தது இந்த நாடகம்.

ஒற்றைப் பாத்திரத்தில் உறைந்த பேரதிர்ச்சியாக இந்த ஓரங்க நாடகத்தை அடையாளப்படுத்த முடியும்.

ஒரு நாடகத்தில் பல கதாபாத்திரங்கள் இருந்து உணர்ச்சிகளைப் பகிர்ந்து கொள்வதைக் காட்டிலும், 'ஓரங்க நாடகம்' (ஆழழெ-யஉவ) என்பது மிகக் கடினமானது. மேடையில் நிற்கும் தனி

**நாச்சியாதீவு பர்வீன்**

ஒரு மனிதன் தன் நடிப்பால் மட்டுமே ஒட்டுமொத்த சபையையும் கட்டிப்போட வேண்டும். அந்த சவாலை மிக நேர்த்தியாகவும் தத்ஷரூபமாகவும் கையாண்டிருந்தார் கவிஞர் ரவூப் ஹஸீர்.

கற்க வேண்டிய வயதில், தவறான




நண்பர்களின் சகவாசத்தால் போதைப் பொருள் என்ற இருண்ட உலகிற்குள் நுழைந்து, தன் வாழ்வைத் தானே சிதைத்துக் கொண்ட ஒரு துரதிர்ஷ்ட வசமான வறுமையின் கோரப்பிடியில் சிக்கித்தவிக்கின்ற முதுமையான ஒருவராக அவர் மேடையில் வாழ்ந்து காட்டினார். கடந்த காலத்தின் இன்பங்களையும், நிகழ்காலத்தின் பேரழிவையும் அவர் தன் ஆழமான நடிப்பின் மூலம் வெளிப்படுத்திய விதம் பார்வையாளர்களின் கண்களைக் குளமாக்கியது.

ஆசிரியரின் சமூகப் பொறுப்பும் கலை ஈடுபாடும், இந்த நாடகத்தின் கதையை உருவாக்கி, அதில் பிரதான பாத்திரமேற்று நடித்த கவிஞர் ரவூப் ஹஸீர் அவர்கள் ஒரு ஆசிரியர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இப்பள்ளியின் முன்னாள் அதிபர்களில் ஒருவரான

## 'ஒரு துளி விழிப்புணர்வு'

மேன்மையானது, அதனை எவ்வளவு நிதானமாகக் கையாள வேண்டும் என்பதை இந்த நாடகம் மிக ஆழமாகச் சித்திரிக்கிறது. "ஒரு நொடித் தவறு, வாழ்நாள் முழுவதையும் இருளாக்கி விடும்" என்ற கசப்பான உண்மையை நாடகத்தின் இறுதிக் காட்சிகள் பார்வையாளர்களின் முகத்தில் அறைந்தாற்போல் உணர்த்தின.

இது மாணவர்களுக்கு மட்டுமல்ல, தன் பிள்ளைகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கத் தவறும் பெற்றோர்களுக் கும் விடுக்கப்பட்ட ஒரு திறந்த அழைப்பாகும்.

கெக்கிராவ ஹோராப்பொல முஸ்லிம்




அவர் வடிவமைத்த காட்சிகள், பார்வையாளர்களின் இதயங்களை நேரடியாகச் சென்றடைந்தன.

நேர்த்தியான தொழில்நுட்பப் பங்களிப்பு இந்த நாடகத்தின் காட்சி மொழியை அழகாக்கி, அதன் அதிர்வை பார்வையாளர்களிடம் கொண்டு சேர்த்ததில் ரவூப் ஹசீரின்

மகா வித்தியாலயத்தின் 75ஆவது ஆண்டு நிறைவு விழாவில், ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க பதிவாக இந்த நாடகம் அரங்கேறியுள்ளது.

சமூகச் சீரழிவுக்கு எதிராகக் கலை மூலம் குரல் கொடுத்த கவிஞர் ரவூப் ஹஸீர் மற்றும் அவரது குழுவினருக்குப்





ரவூப் அதிபர் அவர்களின் புதல்வரான கவிஞர் ரவூப் ஹஸீர், தன் தந்தையின் வழியில் மாணவர் சமுதாயம் சீரழிவதைக் கண்டு பொறுக்காமல், கலை வடிவில் இந்த விழிப்புணர்வை விதைத்துள்ளார்.

அவருக்குள் இருக்கும் கவித்துவமும், நாடகக் கலை மீதான முற்றுமுழுதான ஈடுபாடும் ஒவ்வொரு காட்சியிலும், அவர் பேசிய வசனங்களின் வீச்சிலும் எதிரொலித்தன. ஒரு ஆசிரியராக மாணவர்களின் உளவியலை நன்கறிந்து

ஆத்மார்த்தமான நடிப்பு முன்னிலை வகிக்கிறது.

இந்த நாடகத்தில் முகமது சக்கி மற்றும் இஸ்மத் அஸ்ரி ஆகியோரின் ஒளிப்பதிவு முக்கியப் பங்கு வகிக்கிறது. ஒற்றை மனிதனின் உணர்ச்சிப் போராட்டங்களை, கோணங்களின் வழியே மிக நேர்த்தியாகப் பதிவு செய்து நாடகத்தின் கனதியை அவர்கள் கூட்டியுள்ளனர்.

இதயத்தைத் தொட்டது இறுதிக்காட்சி! மாணவப் பருவம் என்பது எத்தனை

பாராட்டுகள். இத்தகைய நாடகங்கள் வெறும் பள்ளி மேடைகளோடு நின்றுவிடாமல், நாடெங்கிலும் உள்ள இளையோர் மத்தியில் கொண்டு சேர்க்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இவ்வாறான ஒரு நாடகத்தை மேடையேற்ற அனுமதி வழங்கிய ஹோராப்பொல முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் உட்பட அந்த விழா குழுவினர் மிச்சத்தக்கவர்கள்.

## உன்னோடு ஒரு நிமிடம்



கூவாதே குயிலே உன்
குரல் வலிக்கும்.

வசந்தம் மரணித்த
வரண்டதோர் கால நிலையில்,
உரத்த குரலெடுத்தேன்,
ஓயாமல் கூவுகிறாய்?

இம்மையின் மஹ்ஷர் வெளியில்,
வெந்துருகி நாங்கள்
வேதனைக் கிடங்கில்,
நொந்து கிடப்பதனை
காணப் பெறாமல் நீ,
வசந்தத்தை வரவழைக்கவா
வாய் வலிக்கக் கூவுகிறாய்?

நவீன அய்யாமுல்
ஜாஹிலிய்யாவின்,
அறிவுடை அறிவிலிகள்,
அராஜகங்கள் கண்டோ
கதிகலங்கிக் கூவுகிறாய்?

கூவாதே குயிலே உன்
குரல் வலிக்கும்.

மேற்கில் சூரியன்
உதித்த பின்னும் இவர்கள்,
வன்மனசு மாறாதுன்
சக்திதனை இழக்காதே .

**சம்மாந்துறை மஷூறா**

## அன்பான வாசகர்களே!

**அருவிக்கரை பகுதிக்கு உங்களது இலக்கியக் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் என உங்களது ஆக்கங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள் தரம் கண்டு பிரசுரிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்க கீழே உள்ள whatsapp இலக்கத்தை பயன்படுத்தவும்.**

0767877876

## காலத்தில் இதுவொருகோலம்

தக்க தருணமொன்று
தாராளமில்லாதோர் காலடியில்
தவறறிந்து செய்ததோ
தலைக்கணத்தால் அணிந்ததோ
தரணி ஆளும் ஆண்டவனே அறிவான்

என்றோ மறைந்ததை
இன்று கிளறியும்
இத்தனையிலும்
திருந்திடுமா
புகழ் விரும்பிகளின்
அறியாமை?

அனைத்திலும்
ஒன்றைப் பார்
எய்தவன் மறைந்திருக்க
அம்பிற்கேன் அவமரியாதை

அறியாமை முடங்கிய
அம்புகளுக்கோர் முன்னறிவிப்பு

எய்தவன் சிந்தையை
எல்லோரும் கிளறுவோம்
இது போல் அம்புகளை
இனியும் எய்திடாமலிருக்க

புத்தி கெட்ட நடத்தையால்
பித்துப் பிடித்து அலைகிறார்கள்
பெயரும் புகழும் தான்
மீஸானை நிரப்புமென்ற நப்பாசை
நீங்கப்போவது தான் எப்போது?

பட்டம் பெற பலர்
பட்ட கஷ்டங்கள் அழியவில்லை
விழி மூடாக் கனவுகள்
இன்னும் உறங்கவில்லை
போதும் போதும் என்றாகிய பின்னும்

அதன் பின் ஓடிக்கொண்டிருக்கிறோம்
நிஜமாகும் என்ற நம்பிக்கையில்

சுயநலத்திற்காய்
சூடு பிடித்து வெகுவிரைவில்
வான் முட்டியவர்கள்
இன்று சுருண்டு கிடப்பதில்
திருப்தியேதும் எமக்கில்லை

சிறு கவலை தான்
அறியாமையின்
வீரியத்திற்கு

நிஜ வாழ்வை தொலைத்து விட்டுப்
போராடிக்கொண்டே
இன்றும் வியர்வை சிந்தும்
அறிவுடமைகளின்
உணர்வுகளை
இன்னும் மதிக்கத்தெரியவில்லையென...

**ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான்**
**புல்மோட்டை**

# வெலிப்பன்னை ரஹ்மானியா மஹா வித்தியாலயத்தின் பழைய மாணவர் ஒன்றுகூடலும் ஓய்வுபெற்ற ஆசான்கள் கௌரவிப்பு நிகழ்வும்

(பீ.எம். முக்தார்)

களுத்தறை மாவட்டத்திலுள்ள மத்துகமை வெலிப்பன்னை ரஹ்மானியா மஹா வித்தியாலயத்தில் 1985 முதல் 1990 வரை க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் ஒன்றுகூடலொன்று அல்ஹாஜ் எம்.ரீ.எம். பைஸரின் இல்லத்தில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் வெலிப்பன்னை ரஹ்மானியா மஹா வித்தியாலயத்தின் ஓய்வுபெற்ற அதிபர்கள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த ஒன்று கூடலானது பாடசாலை வரலாற்றிலே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மிக முக்கியமான ஒன்றுகூடலாக அமைந்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இங்கு வருகை தந்திருந்த ஓய்வு பெற்ற அதிபர் ஆசிரியர்கள் சுமார் 35 வருடங்களின் பின்னர் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தமை மிக சிறப்பம்சமாகும்.

மேற்படி நிகழ்வில் பாடசாலையில் கடமையாற்றி ஓய்வு பெற்ற அதிபர்களான ஏ.ஸீ.எம். அன்வர்தீன், அல்ஹாஜ் ஏ.டப்.எம். அஸார் (ஜே.பி), அல்ஹாஜ் எம்.இஸட்.எம். அஷ்ரப் (ஜே.பி), வீ.மாரிமுத்து, எம்.வய். கௌஸுல் அமீர் ஆகியோர்களுடன் தற்போதைய அதிபர் ஏ.ஆர்.எம். நவ்மான் (ஜே.பி) மற்றும் மத்தேகெதர தமிழ் வித்தியாலய அதிபர் ஜனாப் எம்.ரீ.எம். பாயிஸ் (ஜே.பி) ஆகியோர்களுடன் இப்



பாடசாலையில் கல்வி கற்ற நூற்றுக்கணக்கான பழைய மாணவ மாணவியர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இந்த நிகழ்வை ஏற்பாடுசெய்த பழைய மாணவர்களின் முன் மாதிரியை ஓய்வு பெற்ற அதிபர்கள் ஆசிரியர்கள் ஊர் மக்கள் என பலரும் பாராட்டினர்.

## ஓட்டமாவடியில் திருடர்களின் வினோதச் செயல்!

(எச்.எம்.எம்.பர்ஸான்)

மோட்டார் சைக்கிளை திருடிய நபர்கள் மீண்டும் மோட்டார் சைக்கிளை திருடிய வீட்டில் வைத்துச் சென்றுள்ள வினோத சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி தபாலக வீதியிலுள்ள வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை இருவர் திருடிச் சென்றுள்ள சம்பவம் (14) அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளை திருடிச் செல்லும் காட்சி அப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சீ.சீ.ரீ.வி கெமெராவில் பதிவாகி இருந்ததுடன், திருடர்களை கைது செய்வதற்கான தீவிர விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில், திருடர்கள் (15) திங்கட்கிழமை அதிகாலை




வேளையில் மோட்டார் சைக்கிளை திருடப்பட்ட இடத்தில் வைத்துச் சென்றுள்ளனர்.

அதிகாலை வேளையில் வெளியே வந்த வீட்டு உரிமையாளர், தனது மோட்டார் சைக்கிள் மீண்டும் அதே இடத்தில் இருப்பதைக் கண்டு வியப்பிலும் மகிழ்ச்சியிலும் உறைந்து போனார்.

திருடர்கள் ஏன் மீண்டும் வந்து வண்டியை விட்டுச் சென்றார்கள் என்பது மர்மமாக உள்ள நிலையில், இது குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## திருகோணமலையில் ஓவியக் கண்காட்சி





(எம்.ஏ.முகமட்)


கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் ஓவியக் கண்காட்சி 12,13ஆகிய இரு நாட்கள் இடம் பெற்றன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பதில் பிரதமசெயலாளர் திசாநாயக்கா கலந்து கொண்டு இக்கண்காட்சியை( 12) திறந்து வைத்தார்.

இக் கண்காட்சி திருகோணமலை மாவட்ட ஓவியர்களின் ஓவியங்கள் பார்வைக்காக காட்சிப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அதிசய வாழைக்குலை

(பாரா தாஹீர்)



மாவனல்லை கிருங்கதெனியவைச் சேர்ந்த பவ்ஹான் இக்பால் என்பவருக்கு சொந்தமான மாவனல்லை எலகல்லையில் உள்ள தோட்டமொன்றில் நடப்பட்ட வாழை மரமொன்றில் வித்தியாசமான வாழைக் குலையொன்று காணப்படுகிறது.

இவ் வாழைக்குலையானது ஒரு பகுதி சிவப்பு நிறமானதாகவும் மறு பகுதி பச்சை நிறமானதாகவும் காணப்படுகிறது. இவ் அதிசய வாழைக்குலை பற்றி தகவலை கன்னொருவ விவசாய திணைக்களத்திற்கும் அறிவித்திருப்பதாக அதன் உரிமையாளர் அறிய தந்தார்.

## ஹாசீம் உமர் பௌண்டசனினல் ஊடகவியலாளர் அஸ்லம் மௌனாவிற்கு அன்பளிப்பு வழங்கி வைப்பு

(அஷ்ரப் ஏ சமத்)

சாய்ந்தமருதைச் சேர்ந்த ஊடகவியலாளர் அஸ்லம் மௌனாவிற்கு கடந்த வாரம் அவரது வீட்டில் இருந்த மடிக் கணினி மற்றும் பொருட்கள் உடைமைகள் களவாடப்பட்டதுடன் அவரது மகனும் விபத்தொன்றில் அகப்பட்டு நோய்வாய்ப்பட்டதையடுத்து, இவ்விடயம் ஹாசிம் உமர் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதனால் கடந்த 13 ஆம் திகதி ஹாசிம் உமர் பௌன்டேசன் அனுசரனையில் பல்கலைக்கழக மாணவிகளுக்கு 115வது மடிக் கணினி வழங்கி வைக்கும்




நிகழ்வில் அவருக்காக 1 இலட்சம் ரூபாவை அன்பளிப்பாக புரவலர் ஹாசிம் உமர் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

## சாய்ந்தமருது சிரேஷ்ட பிரஜைகள் ஒன்றிய அங்கத்தவர்களுக்கான விசேட மருத்துவ முகாம்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது சிரேஷ்ட பிரஜைகள் ஒன்றியத்தின் அங்கத்தவர்களின் நலன் கருதி ஏற்பாடு செய்த விசேட மருத்துவ முகாம் ஒன்று (13) சனிக்கிழமை சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது சிரேஷ்ட பிரஜைகளுக்கான ஒன்றியம் சாய்ந்தமருது பிரதேச வைத்திய சாலையுடன் இணைந்து ஏற்பாடு செய்த தொற்றா நோய்க்கான ஆரோக்கிய உடல் பரிசோதனையும் மருத்துவ ஆலோசனைகளும் வழங்கும் இந்த மருத்துவ முகாமில் நீரிழிவு, கொலஸ்ட்ரோல், பிரசர், சிறுநீரகம், கண், உடற்பருமன், சுட்டி நிறை, உயரம் என்பன பரிசோதிக்கப்பட்டு மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

சாய்ந்தமருது பிரதேச வைத்திய சாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச். சனூஸ் காரியப்பரின் நெறிப்படுத்தலில், சாய்ந்தமருது சிரேஷ்ட பிரஜைகள் ஒன்றியத்தின் தலைவர் முன்னாள் அதிபர் கலாபூஷணம் ஏ. பீர் முஹம்மட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது சிரேஷ்ட பிரஜைகள் ஒன்றியத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் இம்மருத்துவ முகாமில் கலந்துகொண்டு தங்கள் உடல் பரிசோதனையை மேற்கொண்டு பயன்பெற்றனர்.

இந்நிகழ்வில் சுகாதாரக் கல்வி தாதியர் அலுவலர் மதுசாலினி மற்றும் வைத்தியசாலையின் பணியாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டனர்.

நிகழ்வின் முடிவில் ஒன்றியத்தின் சார்பாக டாக்டர் சனூஸ் காரியப்பர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த குறுகிய கால ஏற்பாட்டைச் செய்த சாய்ந்தமருது சிரேஷ்ட பிரஜைகள் ஒன்றியத்தின் தலைவர் முன்னாள் அதிபர் கலாபூஷணம் ஏ. பீர் முஹம்மட் மற்றும் பொதுச்செயலாளர் எம். எம். உதுமாலெப்பை உட்பட சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச். சனூஸ் காரியப்பர் ஆகியோருக்கு ஒன்றியத்தின் அங்கத்தவர்கள் இதன்போது தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

# பல்கலை மாணவர்களுக்கு மடி கணனி அன்பளிப்பு




**(அஷ்ரப் ஏ சமட் )**

ஹாஷிம் உமர் பௌண்டேச னினால் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இலவசமாக மடி கணனி வழங்கும் வேலைத் திட்டத்தின் 22ஆம் கட்ட விநியோகம் கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள ஹாஷிம் உமர் பௌண்டேசன் தலைமையகத்தில் (13) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட தயாரிப்பாளர் ஏ.எம்.ரழீம் , பிரபல பாடகர் அமீர்கான், சிரேஷ்ட ஊடகவியலாளர்களான வசந்தம் குஆ, தயா ரி ப் பா ள ர் அஸ்கர் மற்றும் விடியல் நியூஸ் -ரிப்தி அலி சக்தி குஆ சௌகி ஜப்பார், ஆகியோர் கலந்து கொண்டதுடன் தமிழன் பத்திரிகை இணை ஆசிரியர் ஏ.எம்.ஜௌபர், சுயாதீன தொலைக்காட்சி நிறுவன தமிழ் செய்திப் பிரிவு முன்னாள் செய்தி முகாமையாளர் சித்தீக் ஹனீபா, சிரேஷ்ட ஊடகவியலாளர் ராதா மேத்தா, அமைப்பின் பணிப்பாளர் மரியம், இணைப்பாளர்களான ஆகிப் மொஹமட் ,அர்கம் சுலைமான் மற்றும் பெற்றோர்கள், எனப் பலர் கலந்து னொண்டனர்.

ஹாஷிம் உமர் பௌண்டேசனின் ஸ்தாபகர் புரவலர் ஹாஷிம் உமர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் எம்.ஐ. இகாசா பானு- புத்தளம்,ஜே.ஜி.எஸ். துலாஞ்சலி -குருநாகல், ஏ.ஆர். எப். ரம்லா- பொல்கஹவெல, ஆர். கிருதிகா -யட்டியாந்தோட்டை மற்றும் எம்.எம்.மின்னா -ஏறாவூர் ஆகியோருக்கு புரவலர் ஹாஷிம் உமருடன் இணைந்து நிகழ்வில் கலந்து கொண்ட சிறப்பு அதிதிகள் மடி கணனிகளை வழங்கி வைத்தனர்.

## அனுராதபுரத்தில் கோலாகலமாக நடைபெற்ற "சீ மெகா கோல்டன் எக்ஸலண்ட் விருது வழங்கும் விழா 2026"




**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

சீ அகடமி மற்றும் சைன் புரொடக்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனங்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற "சீ மெகா கோல்டன் எக்ஸலன்ட் விருது வழங்கும் விழா 2026" (31) அனுராதபுரம் சி.டி.சி. ஹோல் மண்டபத்தில் அதன் பணிப்பாளர் திருமதி ஜம்லத்துல் நளீரா தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சுஹா ட்ரேட் சென்டர் நிறுவனத்தின் பணிப்பாளர் கே. ஜன்வர் கலந்து கொண்டார். கௌரவ அதிதிகளாக ஆர்.ஜே. மீடியா வலையமைப்பின் பணிப்பாளரும் ஊடகப் பயிற்றுவிப் பாளருமான ஏ.எம். இன்ஷாப், ரிச் வேர்ல்ட் நிறுவனத்தின் உரிமையாளர் மொஹமட் பாசில் ரஷாத், ரீனா இன்ஸ்டிட்யூட் நிறுவனத்தின் பணிப்பாளர் எம். ஆர்.எஸ். நாதியா ரிப்னாஸ், நியூ ஓரியன்ட் ஜூவல்லரி நிறுவனத்தின் உரிமையாளர் ஏ.என்.ஏ. நாஸிர், வொண்டர் வுமன் சஞ்சிகையின் முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.என்.எப். ஹஸ்மா, ஏ.என். பிரைட் ஸ்கின் நிறுவனத்தின் உரிமையாளர் நஸார் நஜா, சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் பணிப்பாளர் இஷாத் ஹமீட் மற்றும் அனுராதபுர மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் தம்சீர் ஹமீட் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

மேலும் இந்நிகழ்வில் மருதாணி போட்டி, மணப்பெண் அலங்காரப் போட்டி, சித்திரப் போட்டி, கைப் பணி அலங்கார போட்டி மற்றும் கேக் அலங்காரப் போட்டி என்பன வெற்றிகரமாக நடத்தப்பட்டன. இதில் பங்கேற்ற போட்டியாளர்கள் தங்களது திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்தியதுடன், வெற்றியாளர் களுக்கு நினைவுச் சின்னங்கள், சான்றிதழ்கள் மற்றும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் சமூக, கல்வி, தொழில், கலை மற்றும் மனிதாபிமான சேவைகளில் சிறந்து விளங்கும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஆளுமைகளும் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

திறமைகளை அடையாளம் கண்டு ஊக்குவிக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பல நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டமை சிறப்பம்சமாகும்.

## வடமத்திய மாகாண ஆளுனர் தலைமையில் உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு




**(எம்.ரீ.ஆரிப்)**

வடமத்திய மாகாண வருவாய்த் திணைக்களத்தின் வரி அதிகாரிளாக திறந்த போட்டித் தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்ட 11 உத்தியோகத்தர்கள் மற்றும் மாகாண சபையின் சேவையில் உள்ள மேலாண்மை சேவையின் சிறப்பு தர அதிகாரிகளாக வரையறுக்கப்பட்ட மற்றும் தகுதி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 12 பேருக்கும் நியமனம் வழங்கும் நிகழ்வு மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச தலைமையில் நடைபெற்றது.

## டித்வா அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தொழில் முனைவோர் மற்றும் வியாபார உரிமையாளர்களுக்கான காசோலை வழங்கி வைப்பு




**(எஸ்.ஏ.பறூஸ்)**


கடந்த டித்வா அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தொழில் முனைவோர் மற்றும் வியாபார உரிமையாளர்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு மூதூர் பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸ் தலைமையில் (13) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் 381 பயனாளிக ளுக்கான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது 23 நபர்களுக்கு 2இலட்சமும் 318நபர்களுக்கு 50ஆயிரமும் 40 நபர்களுக்கு 25 ஆயிரம் வீதம் பெறுமதியான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மின கலந்து கொண்டார்.

## ஒலுவில் அக்-அல் மதீனா வித்தியாலயத்தின் முஹர்ரம் தின நிகழ்வு



**(இஸட்.ஏ.றஹ்மான்)**

ஒலுவில் அக் அல் மதீனா வித்தியாலயத்தில் இஸ்லாமிய புது வருட (1448) முஹர்ரம் மாத நிகழ்வுகள் அதிபர் கே.எல்.அமீர் தலைமையில் (18) விமர்சையாக கொண்டாடப்பட்டது.

பாடசாலை வளாகத்தில் விஷே டமாக அமைக்கப்பட்ட அலங்கார பந்தலில் இந்நிகழ்வுகள் இடம்பெற்றது. இதில் ஒலுவில் அந்நூர் ஜ/ம்மா பள்ளிவாசல் பேஷ் இமாம் மௌலவி எம். சி.ஜப்ரி (ஷஹ்தி) முஹர்ரம் புதுவருடம் பற்றி சிறப்புரை ஆற்றினார்.



இந் நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் கலைக்கலாச்சார நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.




பாரா தாஹிர்
சிரேஷ்ட ஊடகவியலாளர்

## சிந்தனைக்கு விருந்து

தேவையற்ற பார்வையை கைவிடுங்கள்:

* உங்கள் உள்ளத்தில் இறையச்சமும் (பணிவும்) ஏற்படும்.

தேவையற்ற பேச்சை கைவிடுங்கள்:
* உங்களுக்கு ஞானம் (விவேகம்) வழங்கப்படும்.


தேவையற்ற உணவை (அளவுக்கு அதிகமாக உண்பதை) கைவிடுங்கள்:

*உங்களுக்கு இபாதத் (வணக்க வழிபாடுகள்) செய்வதில் ஆர்வம் ஏற்படும்.

பிறரின் குறைகளை உளவு பார்ப்பதை கைவிடுங்கள்:

* உங்கள் சொந்த குறைகளை கண்டறிந்து திருத்திக்கொள்ளும் பாக்கியம் உங்களுக்கு கிடைக்கும்."

## இயற்கை எனும் இறை கொடை!



இயற்கையின் சுகமது
இறைவனின் கொடையது
இதயத்து வானிலே
இருள் நீக்கும் ஒளியது

தூரத்து நிலவிலே
குளிர்காயும் நினைவுகள்
மணல் பரந்த தரையிலே
மனம் படிக்கும் மனிதர்கள்

மல்லிகைச் செடியழகும்
மன்மதக் கணை தொடுக்கும்
தாமரை இதழ்களும்
வெட்கியே முகம் சிவக்கும்

வழியோர வேலியிலே
வானத்துப் பட்சிகளும்
சிறகடிக்கும் சப்தத்தில்
நிமிடங்கள் மௌனிக்கும்

'சல சல' நீரோடையொடு
முற்றுகையாய் விருட்சங்கள்
முற்றத்து மலர்ச் செடியில்
முத்தாடும் பனித்துளிகள்

ஆகாய முற்றத்தை
அலங்கரிக்கும் மின்மினியும்
இயற்கையின் முற்றத்தை
அலங்கரிக்கும் நிலவொளியும்

இயம்பிட முடியாத
இறையோனின் அருட் கொடைகள்
இயற்கைத் தூரிகையின்
இணையில்லா ஓவியங்கள்...

இவள் கவிதா ஸ்னேகிதி

FATHIMA NASEEHA SAJAHAAN
Grade: 13
MADEENA NATIONAL SCHOOL
Siyambalagaskotuwa.

## சிந்தனைக்காக...!



- இன்று நீங்கள் சந்திக்கும் தடைகள் உங்கள் தோல்வியின் சின்னங்கள் அல்ல.
- அவை உங்கள் வாழ்க்கையை அடுத்த கட்டத்திற்கு அழைக்கும் பயிற்சிகள்.
- வலி தரும் அனுபவங்கள் தான் நாளை உங்களை வலிமையான மனிதராக மாற்றும்.
- ஒவ்வொரு கஷ்டமும் ஒரு பாடம்.
- ஒவ்வொரு கண்ணீரும் ஒரு மாற்றத்தின் தொடக்கம்.
- இன்று புரியாத பாதை, நாளை உங்கள் வெற்றிக்கான வழிகாட்டியாக மாறும்.
- விரக்தியடையாதீர்கள்.
- உங்களை நம்புங்கள்.
- நேரம் உங்கள் பக்கம் தான்.
- விழுந்தாலும் எழுந்து நடப்பதே வாழ்க்கை.
- சோர்ந்தாலும் நம்பிக்கையை விடாதீர்கள்.
- நாளை! நீங்கள் நினைத்ததை விட அழகாக இருக்கும்.

## ஒரு நல்ல ஆசிரியர்



ஒரு மோசமான மாணவனைக் கூட சிறந்த மாணவனாக மாற்ற முடியும். வகுப்பறையை நாட்டின் அறிவு பொக்கிஷமாக மாற்றுவது கரும்பலகையின் முன் நிற்கும் ஆசிரியர் தான். தொழில் நுட்பம் வளர்ந்தாலும் ஒரு ஆசிரியர் மாணவரிடம் காட்டும் அன்பும்,கண்டிப்பும்,வழிகாட்டுதலும் ஈடு இணையற்றது.

M.R.F.Rushaidha
Grade 08
K/MW Danagama M.V

**படைப்பாற்றலை ஊக்குவித்து, பொது அறிவை வளர்த்து, பொழுது போக்குடன் கல்வியறிவை வளர்த்து, சிறாரிடத்தில் வாசிப்பை ஊக்குவிக்கும் நோக்கில் "உதய பூங்கா" எனும் சிறுவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பகுதியில் உங்கள் ஆக்கங்களை கட்டுரையாக, கவிதைகளாக, துணுக்குகளாக, விடுகதைகளாக, சிறுகதைகளாக, பிறந்தநாள் வாழ்த்தாக, சித்திரங்களாக, பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளாக இவ் வட்சப் இலக்கத்திற்கு 0775323239 அனுப்பலாம்.**

## நட்பு

வானில் உள்ள நட்சத்திரங்கள்
ஆயிரம் இருக்கலாம்
ஆனால் இருட்டில் வழிகாட்டும்
நிலவு ஒன்று தான்
அது போல தான் என் வாழ்வில்
பல நண்பர்கள் வந்தாலும் என்
மனதிற்கு நெருக்கமான உன் நட்பு தனிப்பட்டது.
நாம் சிரிக்க பல காரணம் இருந்தாலும்
நான் அழும் போது
உன் இதயம் துடிக்கும்
உன் அன்புக்கு பெரும் சக்தியுண்டு
புத்தகத்தில் இல்லாத பாடத்தை
உன் அன்பில்
நான் கற்றுக்கொண்டேன்
என்றும் நாம்
பிரியாமல் இருப்போம்
நண்பர்களாக!



M.A.Aaliya
Grade 08
Kg/MW Danagama

## சிறுவர் சித்திரங்கள்



Mohamed Riyazi mohamed Rishan
UKG
Al Hamza International school



M. H. M. Haazim
Baduriya college
Mawanella



M.S.Rahma
Danagama .M.V



M.I Ibna
UKG(4+)
Ideal children house
Mawanella



அரபாத் பஹுர்தீன்

# ICC தரப்படுத்தலில் முன்னேறினார் வனிது ஹசரங்க

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளுக்கான பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசையில் எட்டாமிடத்துக்கு இலங்கையின் வனிது ஹசரங்க முன்னேறியுள்ளார்.
மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான மூன்று போட்டிகளில் 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்தே 14ஆம் இடத்திலிருந்து ஆறு இடங்கள் முன்னேறி எட்டாமிடத்தை ஹசரங்க அடைந்துள்ளார்.

**முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,**

1. ரஷீட் கான்,
2. வருண் சக்கரவர்த்தி,
3. அப்ரார் அஹ்மட்,
4. அடில் ரஷீட்,
5. ஜஸ்பிரிட் பும்ரா,
6. அடம் ஸாம்பா,
7. கொர்பின் பொஷ்,
8. வனிது ஹசரங்க,
9. முஜீப் உர் ரஹ்மான்,
10. நாதன் எலிஸ்

**முதல் 10 துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசை பின்வருமாறு,**

1. அபிஷேக் ஷர்மா,
2. இஷன் கிஷன்,
3. சஹிப்ஸடா பர்ஹான்,
4. பில் ஸோல்ட்,
5. பதும் நிஸங்க,
6. திலக் வர்மா,
7. சூரியகுமார் யாதவ்,
8. ஜொஸ் பட்லர்,
9. டெவால்ட் பிறெவிஸ்,
10. பிரயன் பென்னிட்

இலங்கைக்கெதிரான முதலாவது, மூன்றாவது போட்டிகளில் தலா ஒவ்வொரு விக்கெட்டைக்கைப்பற்றிய மேற்கிந்தியத் தீவுகளின் றொஸ்டன் சேஸ், சகலதுறை வீரர்களுக்கான தரவரிசையில் ஆறாமிடத்தி லிருந்து ஓரிடம் முன்னேறி ஐந்தாமிடத்தைய டைந்துள்ளார்.

**முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,**

1. சிகண்டர் ராசா
2. ஹர்திக் பாண்டியா
3. சைம் அயூப்
4. டிபேந்திர சிங் ஐரீ
5. றொஸ்டன் சேஸ்

# கோல்களில் உலக சாதனை படைத்தார் லயோனல் மெஸ்ஸி



உலகக் கிண்ண கால்பந்து வரலாற்றில் அதிக கோல்களை அடித்த வீரர்கள் பட்டியலில் ஜேர்மனியின் மிரோஸ்லொவ் குளோஸேயின் சாதனையை முறியடித்த ஆர்ஜென்டினா வின் அணித்தலைவர லியனல் மெஸ்ஸி புதிய உலக சாதனை படைத்துள்ளார்.
நடப்பு உலகக் கிண்ண கால்பந்து தொடரில் நேற்று இடம்பெற்ற ஒஸ்திரியாவுக்கு எதிரான விறுவிறுப்பான போட்டியில், தனது 17ஆவது உலகக் கிண்ண கோலை பதிவு செய்து அவர் இந்த வரலாற்றுச் சாதனையைத் தன்வசப்படுத்தினார்.
மேலும் இத் தொடரில் மெஸ்ஸி அடிக்கும் 4ஆவது கோல் இதுவாகும். அத்துடன் இப்போட்டியின் இரண்டாம் பாதியின் இறுதி நிமிடத்தில் மெஸ்ஸி தான் சார்பில் 2ஆவது கோலையும் உற்செலுத்தி மொத்தமாக 18ஆவது கோலாக மாற்ற, நடப்பு உலகக் கிண்ணத்தில் 5 ஆவது கோலாகவும் பதியப்பட்டது.
அதனடிப்பையில் குழு ஜே இல் இடம்பெற்றுள்ள ஆர்ஜென்டினா அணிக்கு, இந்த கோல் ஒஸ்திரியாவுக்கு எதிரான போட்டியில் பெரும் முன்னிலையைத் தந்தது. தனது முதல் லீக் போட்டியில் அல்ஜீரியா அணியை 3:0 என்ற கணக்கில் வீழ்த்தியிருந்த தென் அமெரிக்காவின் பலம் வாய்ந்த ஆர்ஜென்டினா அணி, இப்போட்டியின் கிடைத்த 2:0 என்ற வெற்றியின் மூலமாக அடுத்த சுற்றுக்கான வாய்ப்பை உறுதி செய்துள்ளது.

# “உமரியன்ஸ்” மீண்டுமொரு வரலாற்றுச் சாதனை



(எம்.யூ.எம்.சனூன்)

புளிச்சாக்குளம் உமர் பாறூக் பாடசாலை மாணவர்கள் வரலாற்றில் முதல் தடவையாக மற்றுமொரு சாதனையை பாடசாலைக்கு பெற்றுக் கொடுத்துள்ளனர்.
Sri Lanka Schools Individual Chess Championship 2026 சதுரங்கப் போட்டியில் பங்கேற்ற பாடசாலை மாணவர்கள் மாகாண மட்டத்தில் சிறப்பான வெற்றிகளைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகி புதிய சாதனையைப் படைத்துள்ளனர்.
போட்டிகளில் பங்கேற்ற மாணவர்களான கே.ஆர்.எம்.ரஷாத் முதலாம் இடத்தை பெற்று சம்பியனாகவும், ஏ.எப்.சஹ்லா முதலாம் இடத்தை பெற்று சம்பியனாகவும், எம்.கே.மதன்குமார் இரண்டாம் இடத்தையும், எம்.ஆர்.ரிஹாம் மெரிட் விருதினையும் பெற்றுக்கொண்டனர்.
இம்மாணவர்களின் சிறப்பான சாதனையானது பாடசாலைக்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளது.
பாடசாலை அதிபர் எம்.யூ.எம். ஷாஜஹானின் வழிகாட்டல், ஆசிரியை எம்.எஸ்.பாத்திமாவின் சிறந்த பயிற்றுவித்தலின் இந்த வரலாற்று வெற்றி கிடைக்கப்பெற்றுள்ளது.
தேசிய மட்டப் போட்டியிலும் மேலும் பல வெற்றிகளைப் பெற்று பாடசாலையின் பெயரை உயர்த்திட, பாடசாலை அதிபர் எம்.யூ.எம். சாஜஹான் தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.



# உலகக் கிண்ண கால்பந்து தொடரில் ஒரு லட்சம் அமெரிக்க டொலர் சம்பளம் பெறும் நடுவர்கள்

23 ஆவது உலகக் கிண்ண கால்பந்து தொடர் அமெரிக்கா, மெக்சிகோ மற்றும் கனடாவில் நடைபெற்று வருகின்றன. இந்த உலக கிண்ண போட்டியில் 48 அணிகள் விளையாடுகின்றன.
மொத்தம் 104 போட்டிகள் நடத்தப்படுகின்றன. போட்டி தொடங்கியது முதல் ஒவ்வொரு அணியினரும் கோல்களை அடித்து, புதிய புதிய சாதனைகளை படைத்து வருகின்றனர்.
போட்டியில் வீரர்கள் எந்தளவுக்கு முக்கியமோ, அந்த அளவுக்கு நடுவர்களின் பணியும் முக்கியத்துவம் பெறுகிறது. இந்த தொடரில், ஐரோப்பா, ஆசியா, தென் அமெரிக்கா, வடக்கு மற்றும் மத்திய அமெரிக்கா நாடுகளில் இருந்து நடுவர்கள் பணியமர்த்தப்பட்டு உள்ளனர்.
போட்டிகளுக்கேற்ப கடந்த 2022 ஆம் ஆண்டில் இருந்து கூடுதலாக 16 நடுவர்கள் போட்டி தொடரில் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.
இதன்படி, இந்த போட்டி தொடரில் மொத்தம் 52 நடுவர்கள் இருப்பார்கள். 2 போட்டிகளுக்கு தலா ஒரு நடுவர் என்ற கணக்கில் போட்டிகளை அவர்கள் வழிநடத்தி செல்வார்கள்.
கடந்த முறை நடந்த உலகக் கிண்ண தொடரில் மொத்தம் 69 உதவி நடுவர்கள் இருந்தனர். இந்த முறை கூடுதலாக 19 பேர் சேர்க்கப்பட்டு மொத்தம் 88 உதவி நடுவர்கள் உள்ளனர்.
இதுபோக 30 வீடியோ உதவி நடுவர்கள் பணியாற்றுகிறார்கள். ஒவ்வொரு ஆட்டத்திலும் ஒரு நடுவரும், 4 உதவி நடுவர்களும் செயல்படுவார்கள். நடுவருக்கு ஏறக்குறைய இந்திய மதிப்பில் 94 லட்சம் ஷரூபா (ஒரு லட்சம் அமெரிக்க டொலர்) சம்பளம் அளிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. இது தவிர போட்டி கட்டணம், நாக் – அவுட் சுற்றில் இருந்து போனசும் வழங்கப்படும். உதவி நடுவர்களுக்கு 24 லட்சம் ஷரூபா சம்பளம் வழங்கப்படுகிறது.

# மலேசியாவில் இடம்பெற்ற IFMA MUAY THAI SCHOOL WORLD CHAMPIONSHIP 2026 இலங்கை அணிக்கு 46 பதக்கங்கள்

**கஹட்டோவிட்ட வீரர்கள் மூவரும் பதக்கங்களை வென்று அசத்தல்**






(றிஹ்மி ஹக்கீம்)

மலேசியாவில் நடைபெற்ற IFMA MUAY THAI SCHOOL WORLD CHAMPIONSHIP 2026 சர்வதேச முஆய் தாய் சம்பியன்சிப் போட்டியில் இலங்கை அணியினர் 14 தங்கம், 7 வெள்ளி மற்றும் 25 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 46 பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.
மேலும், கஹட்டோவிட்ட பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களான மொஹம்மத் ஸ ரதாத் மற்றும் மொஹம்மத் நுவைர் ஆகிய மாணவர்கள் தங்கப் பதக்கங்களை தமதாக்கிக் கொண்டதுடன், மிசாரி வெண்கலப்பதக்கத்தினைப் பெற்றுக் கொண்டார்.
அர்ப்பணிப்புடன் பயிற்சி நாட்டுக்கும் ஊருக்கும் பெருமை சேர்த்த மேற்படி இளம் வீரர்கள், பயிற்றுவிப்பாளர்கள், முஆய் தாய் கழகத்தினர் மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் பலரும் வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.